# இலங்கையிற் கல்வி

## (கட்டுரைத் தொகுப்பு)

**சோ. சந்திரசேகரன்**

B.Ed.(Hons) (Cey)., M.A.(Hiroshima)

**மா. கருணாநிதி**

B.A.(Hons), Dip. in Ed., M.A.(Cey)

முதற்பதிப்பு : ஜனவரி, 1993.

பதிப்புரிமை : (C) ஆசிரியருக்கே

Printing Point Used : 12 Light Raja Raja

பக்கம் : 130

விலை :

பிற நூல்கள்:

1. **இலங்கை இந்தியர் வரலாறு, 1989.**
   - சோ.சந்திரசேகரன்
   (வைரவன் பதிப்பகம், மதுரை).

2. **கல்வியியல் கட்டுரைகள், 1991**
   - சோ.சந்திரசேகரன்
   (சூடாமணி பிரசுரம், சென்னை)

3. **இலங்கையின் கல்வி வளர்ச்சி, 1992**
   - சோ.சந்திரசேகரன்
   - மா.கருணாநிதி
   (சூடாமணி பிரசுரம், சென்னை).

# பதிப்புரை

கொழும்பு பல்கலைக்கழக சமூக விஞ்ஞான கல்வித்துறைத் தலைவர் திரு. சோ. சந்திரசேகரன் அவர்களும் விரிவுரையாளர் திரு. மா. கருணாநிதி அவர்களும் எழுதியுள்ள இந்நூலை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய கல்வியின் அத்தியாவசியத்தைப் புறக்கணிப்பார் எவருமில்லை. சகல அரசாங்கங்களும் தமது மக்கள் கல்வி பெறவேண்டுமென்பதில் பெரும் அக்கறை செலுத்துகின்றன. கல்விக்கென கணிசமான நிதியும் ஒதுக்கப்படுகின்றது. ஆயினும் கல்விமுறைகள் பெரு வெற்றி பெறுவது ஆசிரியர்களிலேயே தங்கியிருக்கின்றது. கல்வியியல் துறையில் பேரறிவு பெறுவோர் சிறந்த ஆசிரியர்களாகத் திகழ முடியும்.

மருத்துவர்களுக்கு மருத்துவக்கல்வி; வழக்கறிஞர்களுக்கு சட்டக்கல்வி; இதுபோல் ஆசிரியர்களுக்குக் கல்வியியல் அறிவு தொழிற் தகுதியை வழங்குகின்றது. கல்வியியல் துறை, கல்வி உளவியல், கல்விதத்துவம், கல்வி அளவீடு, கல்விச் சமூகவியல், கல்வி நிர்வாகம் என்று பல்துறைகளாகப் பரந்து விரியும், அவற்றுள் ஒப்பீட்டுக் கல்வியும் கல்வி வரலாறும் முக்கியமானது. ஆசிரியர்கள் தமது நாட்டின் கல்வி முறை பற்றிய நிறைவான அறிவினைப் பெற்றவர்களாகத் திகழ வேண்டும். கல்வி முறையின் மாற்றங்கள், இயல்புகள், போக்குகள் என்ற முறையில் பெறுகின்ற அறிவு பயனுடையது. ''இலங்கையிற் கல்வி'' எனும் இந்நூல் தமது நாட்டின் கல்விமுறை பற்றிய அறிவை வளர்த்துக் கொள்வதற்கு இலங்கை நாட்டு ஆசிரியர்களுக்கு ஒரு நல் வாய்ப்பினை வழங்குகின்றது. அந்நாட்டின் பல்கலைக்கழகங்களிலும் ஏனைய ஆசிரியர் கல்லூரிகளிலும் பயிலும் கல்வியியல் மாணவர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படக் கூடியது.

தமிழ்நாட்டுக் கல்விப் பணியாளர்கள் தமது அண்டை நாடொன்றின் கல்வி முறை பற்றி விளங்கிக் கொள்வதற்கும் இந்நூல் பெரிதும் பயன்படக் கூடும். முதலிரு கட்டுரைகளிலும் இலங்கை உட்பட தென்னாசிய பிராந்தியங்களில் கையாளப்பட்ட குடியேற்ற ஆட்சிக் கால கல்விக் கொள்கைகள் ஏற்படுத்திய தாக்கங்கள் விரிவாக ஆராயப்படுகின்றன. நூலாசிரியர்களில் ஒருவரான திரு. சந்திரேசகரன் அவர்கள் கடந்த கால் நூற்றாண்டு காலமாகப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் கற்பிப்பவர்; அத்துறையில் உயர் பட்டங்கள் பெற்றவர்; பல்வேறு வகையான ஆராய்ச்சிகளையும் செய்தவர்; கல்வியியல் நூல்களையும் எழுதி வெளியிட்டவர். திரு.கருணாநிதி அவர்களும் கல்வியியலிலும் கற்பித்தற் பணியிலும் ஈடுபாடு காட்டி வருகின்றவர். இவர்களது எழுத்துப் பணிகள் கல்வியியல் துறைக்கு மேலும் அணி சேர்க்கும் என நம்புகிறோம். நூலாசிரியர்கள் இன்னும் பல அரிய நூல்களை வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

*15.1.1993*

**இரா. மு. நாகலிங்கம்**
கவிதா பதிப்பகம்
132 - ஏ, மருதுபாண்டியர் வீதி
தாசில்தார் நகர், மதுரை - 625 020

# முன்னுரை

இன்று ஆசிரியர்கள், ஆசிரியர் பயிலுனர்கள், பெற்றோர்கள், கல்வி அலுவலர்கள் போன்ற பலதரப்பட்டவர்களும் கல்வியியல் அறிவைப் பெறுவதில் கூடிய அக்கறை செலுத்துகின்றனர். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் இவர்கள் அனைவரும் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்கள். அதன் காரணமாகவே அவர்கள் கல்வியியல் அறிவைப் பெற விரும்புகின்றனர்.

குறிப்பாக, பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகள், தொலைக்கல்வி நிலையங்கள் என்பவற்றில் கல்வியியல் கற்கை நெறிகளை ஆயிரக்கணக்கானவர்கள் தமிழ் மொழி மூலம் பயின்று வருகின்றனர். கல்வியியல் துறை சார்ந்த நூல்களும் கட்டுரைகளும் ஆங்கில மொழியிலேயே உள்ளன. இந்நிலையில் இவர்கள் உசாத்துணை நூல்களாக பயன்படுத்துவதற்குப் போதிய தமிழ் நூல்கள் இல்லை. இக்குறையை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யும் நோக்குடனேயே இந்நூலை வெளியிடுகின்றோம். ஏற்கனவே 'கல்வியியல் கட்டுரைகள்', 'இலங்கையின் கல்விவளர்ச்சி' ஆகிய இரு நூல்களை வெளியிட்டுள்ளோம். கல்வியியல் மாணவர்கள் இந்நூல்களில் காட்டிய ஆர்வம் காரணமாக மேலும் ஊக்கம் பெற்று இந்நூலையும் வெளியிடுகின்றோம்.

கல்வியியல் கருத்துக்களும், சிந்தனைகளும் பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்களை மட்டுமல்லாது இடைநிலைக் கல்வித் தராதரமுடைய ஆசிரியர் பயிலுனர்களையும் கல்வியில் ஆர்வம் மிக்க பெற்றோர்கள் மற்றும் பொது வாசகர்களையும் சென்றடைய வேண்டும் என்பது எமது எண்ணமாகும். எனவே, கல்வியியல் கருத்துக்களையும் நிகழ்வுகளையும் எளிமையான, தெளிவான மொழிநடையில் வழங்க வேண்டியது எமது சமூகக் கடமை என்று நாம் கருதி இந்நூலையும் முடிந்த அளவு அவ்வாறே எழுத முற்பட்டோம். புதிய கருத்துக்களும் சிந்தனைகளும் ஒரு சிலரது ஏகபோக உரிமையாகிவிடக் கூடாது. உருவாக்கப்படும் புதிய அறிவுத் தொகுதி அனைத்தும் சமூகத்தின் சகல மட்டங்களையும் சென்றடையும்போது தான் அறிவுடைய சமூகங்கள் தோன்ற முடியும். புதிய கருத்துக்களை தெளிவுறப்புரிந்து அதனை எளிமையான மொழி நடையில் தருவதில் உள்ள சிரமங்களை அனுபவத்தில் நாம் கண்டோம். எளிய நடையில் எழுதுவதில் யாம் கண்டுள்ள வெற்றி பற்றி வாசகர்களே முடிவு செய்ய வேண்டும்.

கல்வியியல் துறை சார்ந்த எமது கட்டுரைகளைத் தமது பத்திரிகைகளில் வெளியிட்டு ஊக்குவித்தவர்கள் திரு. இரா. சிவகுருநாதன் அவர்களும் திரு. ஆ. சிவநேசச்செல்வன் அவர்களும் ஆவர். எமது கட்டுரைகள் நூல்வடிவம் பெற ஊக்கமளித்து உதவி செய்தவர் கவிதா பதிப்பகத்தின் உரிமையாளர் திரு. இரா. மு. நாகலிங்கம் அவர்கள். இந்நூலை அச்சேற்றப் பேருதவி புரிந்த திரு. எம். பாண்டியராஜன் அவர்களும், மதுரை பிரிண்ட் ஷாப் மற்றும் விவேகாநந்தா அச்சகத்தாரும் இப்பணிக்கென கடுமையாக உழைத்தவர்கள். இவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இலங்கையில் கல்வி எனும் விடயம் பற்றிய இக்கட்டுரைத் தொகுப்பு குடியேற்றவாத கல்விச் சிந்தனை, நடைமுறைகள் பற்றிய இரு பொதுவான கட்டுரைகளையும் உள்ளடக்கியுள்ளது. அத்துடன் பல்கலைக்கழகக் கல்வி பற்றிய விடயத்தைச் சற்று விரிவாக நோக்கும் கட்டுரைகளும் உண்டு. இந்நூல் ஒரு கட்டுரைத் தொகுப்பு ஆதலின் இலங்கையின் கல்வி வளர்ச்சி தொடர்பான வெவ்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. அவ்விடயங்கள் தொடர்பான அடிப்படை அறிவினை வாசகர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என நாம் நம்புகிறோம்.

இலங்கையின் கல்வி வளர்ச்சியில் ஆர்வமுள்ள பல்வேறுபட்டவர்களும் கல்வி நிலைமை பற்றி ஆழ்ந்து சிந்திக்க இந்நூலின் கருத்துக்கள் உறுதுணையாக அமையக் கூடும்.

இலங்கையின் கல்விநிலை பற்றிய ஆழமான ஆய்வுகளுக்கும் இத்துறையில் மேலும் பல நூல்கள் எழுதப்படவும் இந்நூல் மற்றொரு முன்னோடியாக அமையும் எனக் கருதுகின்றோம்.

**சோ. சந்திரசேகரன்**
சமூக விஞ்ஞான கல்வித் துறைத் தலைவர்,
கல்விப் போதனா பீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

**மா. கருணாநிதி**
கல்வியியல் விரிவுரையாளர்
கல்விப் போதனாபீடம்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குடியேற்றவாதக் கல்விக் கொள்கை | 1 |
| 2. | தென்னாசியாவில் குடியேற்றவாதக் கல்வி | 13 |
| 3. | இலங்கையில் குடியேற்றவாதக் கல்வி | 19 |
| 4. | பாடசாலை அமைப்பு மாற்றங்கள் | 33 |
| 5. | பல்கலைக்கழகக் கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும் | 49 |
| 6. | மாகாணக் கல்லூரிகள் | 76 |
| 7. | தமிழர் உயர்கல்வி | 82 |
| 8. | மூன்றாம் நிலை, தொழிற்கல்வி ஆணைக் குழு | 98 |
| 9. | தேசிய கல்வி ஆணைக் குழு | 105 |
| 10. | 'சிறிய' பாடசாலைகள் | 114 |

# 1

## குடியேற்றவாதக் கல்விக் கொள்கை

பெரும்பாலான ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகள் குடியேற்ற ஆட்சிக்குட்பட்டிருந்தவை. இந்நாடுகள் சுதந்திரமடைந்த பின்னர், தமது மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டுத் தேவைகளைக் கருத்திற்கொண்டு புதிய கொள்கைகளை உருவாக்க முற்பட்டன. கல்வித்துறை மேம்பாட்டைக் குறிக்கோளாகக்கொண்டு புதிய கல்விக் கொள்கைகள் பற்றிச் சிந்திக்கப்பட்டது. மேலும், சிறந்த கல்வி வளர்ச்சியினூடாகவே சமூக, பொருளாதார, பண்பாட்டு முன்னேற்றத்தை அடையலாம் என இந்நாடுகள் நம்பின. ஆயினும் நீண்ட கால குடியேற்ற ஆட்சி காரணமாக உருவாக்கப்பட்டிருந்த கல்வி ஏற்பாடுகளை முற்றாக அகற்றுவதும் அவற்றுக்குப் பதிலாக புதிய கல்விக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதும் இலகுவான பணியாக இருக்கவில்லை. நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் சுதந்திரமடைந்த நாடுகளில் இன்றும்கூட குடியேற்ற நாட்டாட்சிக் காலத்துக்குரிய பல அம்சங்களைக் காண முடியும். இது கல்வித்துறைக்கும் பொருந்தும்.

இப்பின்னணியில் குடியேற்றவாதக் கல்விக் கொள்கை பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும். குடியேற்ற நாடுகளில் உருவாக்கப்பட்ட பாடசாலை முறை ஆட்சியாளர்களின் கல்வித் தேவைகளை நிறைவு செய்வதாக அமைந்தன. இப்பாடசாலைகள் உள்ளூர் மக்களின் சில தேவைகளை நிறைவு செய்தது உண்மையே. ஆயினும், அடிப்படையில் அவை குடியேற்ற ஆட்சியாளர்களின் தேவைகளையும் நலன்களையும் அபிலாசைகளையுமே கருத்திற்கொண்டன. பெருமளவுக்கு உள்ளூர் மக்களின் கல்வி நலன்கள் அலட்சியம்

செய்யப்பட்டன. குடியேற்ற நாட்டு நிர்வாகிகள் சிவில் சேவையின் கீழ்மட்டத்தில் பணிபுரியக் கூடிய எழுத்தறிவுள்ள இலிகிதர்களின் தேவையை உணர்ந்தபோது உள்ளூர் மக்களின் கல்வியில் அக்கறை செலுத்தத் தொடங்கினர். மேலும், குடியேற்ற ஆட்சியாளரின் கல்விக் கொள்கையால் பல குழப்பங்களும் காணப்பட்டன. சிலர் உள்ளூர் மக்களுக்குக் கல்வி வழங்குவது தவறு என்று கருதினர். வேறு சிலர் கல்வியினூடாக குடியேற்ற ஆட்சியின் நலன்களை மேம்படுத்தலாம் என வாதிட்டனர். கிறித்தவ சமயக் குழுவினர் கல்விக் கொள்கையிலும் கல்வி ஏற்பாடுகளிலும் கூடிய கட்டுப்பாட்டைச் செலுத்தினர். அவர்கள் சமய காரணங்களுக்காகவே பாடசாலைகளை ஏற்படுத்த முற்பட்டனர்.

குடியேற்ற ஆட்சியில் முக்கிய அங்கமாக விளங்கியவர்கள் குடியேற்ற நிர்வாகிகளும் சமயக் குழுவினர்களுமாவர். ஆயினும் கல்வி முறை எவ்வாறு வளர்ச்சியுற வேண்டும் என்பது பற்றி அவர்களிடத்து ஒருமித்த கருத்து இருக்கவில்லை. அரசாங்க நிர்வாகிகள் சில சந்தர்ப்பங்களில் தொழிற்கல்வியை விரும்பினர்; சமயக் குழுவினர் இதில் அக்கறை செலுத்தவில்லை. அவர்கள் சமயம் சார்ந்த ஒழுக்கக் கல்வியை வழங்க விரும்பினார்.

சமயக் குழுவினரைப் பொறுத்தவரையில் தொழிற்கல்வி என்பது சமயத்தைக் கற்பிக்கும் உபதேசிகளையும் பாதிரிமாரையும் பயிற்றுவதாகும். பல சந்தர்ப்பங்களில் குடியேற்ற அரசு நிர்வாகிகள் உள்ளூர் மக்களுக்கு சமயச் சார்பற்ற கல்வியை வழங்க விரும்பினர்; அவ்வாறான கல்வி ஏற்பாடுகளுக்கு உதவி நன்கொடைகளை வழங்க விரும்பினர். ஆயினும் சமயக்குழுவினர் இவ்வாறான நிபந்தனைகளின் அடிப்படையில் அரசாங்க உதவிகளைப் பெற விரும்பவில்லை; தங்கள் சொந்த நிதியைக் கொண்டு கல்வி வழங்க விரும்பினர். அரசாங்கம் சில நிலைமைகளில் குறிப்பான வேலைவாய்ப்புகளைக் கருத்திற்கொண்டு அதற்கேற்ற கல்வியை சமயக் குழுவினர் வழங்க வேண்டுமென்று விரும்பியது; ஆயினும் சமயக் குழுவினர் அதற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

இவ்வாறு கல்விச் செயற்பாடு பற்றி நிர்வாகிகளுக்கும் சமயக் குழுவினருக்குமிடையில் பல கருத்துவேறுபாடுகள் காணப்பட்டன. ஆயினும் அவர்களுக்கிடையே சில கருத்தொற்றுமைகளும் காணப்பட்டன. இரு தரப்பினரும் தமது சொந்த நோக்கங்களை அடைவதற்கான ஒரு கருவியாகக் கல்வியைப் பயன்படுத்த முற்பட்டனர்; அத்துடன் கல்வி பற்றிய தமது கருத்துகளைப் பற்றி உள்ளூர் மக்கள் எத்தகைய அபிப்பிராயங்களைக் கொண்டுள்ளார்கள் என்பதை அறிவதில் அக்கறை செலுத்தவில்லை. உள்ளூர் மக்களின் அபிப்பிராயம், அவர்தம் இசைவு என்பவற்றை முற்றாகப் பெறாத முறையிலேயே கல்வி ஏற்பாடுகள் உருப்பெற்றன.

எந்த சமுதாயத்திலும் கல்வி முறை முழுமையான சமுதாயத்தின் நலன்களின் அடிப்படையில் உருவாகவில்லை. சமுதாயத்தின் ஒரு சில குறிப்பிட்ட பிரிவினரின் நலன்கள், முயற்சிகள் காரணமாகவே பாடசாலைக் கல்வி உருவாயிற்று. எடுத்துக்காட்டாக, கைத்தொழில்மயமாக்கலுக்கு முற்பட்ட பிரித்தானியாவில் உயர்குடி வகுப்பினர் தமது பிள்ளைகள் 'சீமான்'களாக வரவும் அரசாங்கத்தில் பங்கு கொள்ளவும் தேவையான கல்வியை வழங்கும் பள்ளிகளை உருவாக்கினர். சுருங்கக் கூறின், குடியேற்ற ஆட்சி நிலவாத நாடுகளில் பாடசாலைகள் முழு சமூகத்தையும் பிரதிநிதித்துவப் படுத்துவனவாய் அமையவில்லை. அவை சமூகத்தின் குறிப்பிட்ட சமூக வகுப்பினரின் நலன்களையே கருத்திற் கொண்டமைந்தன.

குடியேற்ற ஆட்சி நிலவிய நாடுகளில் அமைக்கப்பட்ட பாடசாலைகள் உள்ளூர் பண்பாட்டைப் பிரதிபலிக்கவில்லை; அங்கு வேற்று மொழிகளும் வேற்று சமூக விழுமியங்களுமே கற்பிக்கப்பட்டன. குடியேற்ற நாட்டு மக்களுக்கான கல்விச் செயற்பாடுகளை முழுமை செய்வனவாக இப்பாடசாலைகள் அமையாது, அவ்வேற்பாடுகளுக்கான ஒரு மாற்று வழியாக அவை அமைந்தன; அப்பாடசாலைகளில் பயின்றோர் உள்ளூர் பண்பாட்டுடன் இணைந்துகொள்ளும் முறையிலோ அல்லது தமது சமூகத்துக்குத் தலைமையினை வழங்கும் முறையிலோ கல்வி பெறவில்லை. குடியேற்ற நாட்டுப் பாடசாலைகள் அன்னியமான நிறுவனங்களாகவே

விளங்கின; உள்ளூர் சமூகத்துடனும் பண்பாட்டுடனும் அவை தொடர்புற்று இருக்கவில்லை. அங்கு பயிலுவோர் சமூகத்தில் புதிய நிலைகளை வகித்தனர்; புதிய பண்பாட்டைப் பின்பற்றினர்; தமது சொந்த பண்பாட்டுச் சூழலில் பணிபுரிய அவர்கள் ஆயத்தப்படுத்தப்படவில்லை. ஐரோப்பியப் பாடசாலைகள் இவ்வாறு செயற்படவில்லை; அவை தமது மாணவர்களின் சமுதாய, பண்பாட்டு நிலைமைகளுக்கு மேலும் வலுவூட்டுவனவாக அமைந்தன.

குடியேற்ற நாட்டுப் பாடசாலைகள் ஆட்சியாளர்களின் சமூகத்தையோ அல்லது பண்பாட்டையோ அப்படியே பிரதிபலிப்பனவாகவும் அமையவில்லை. ஐரோப்பிய குடியேற்ற ஆட்சியாளர்கள் உள்ளூர் மாணவர்கள் ஐரோப்பிய பண்பாட்டையும் நியமங்களையும் கற்கும் ஆற்றல் உள்ளவர் என்று கருதவில்லை; சில சந்தர்ப்பங்களில் உள்ளூர் மாணவர்களுக்குச் சிறந்த ஐரோப்பியக் கல்வி வழங்குவதற்கான முயற்சிகளைத் தடை செய்தனர்.

பிரஞ்சு மற்றும் பிரித்தானிய கல்வி நிர்வாகிகள் தமது நாட்டில் காணப்பட்டதற்கு வேறான பாடசாலைப் பாட ஏற்பாட்டைத் தயாரித்து குடியேற்ற நாட்டு மக்களுக்கு வழங்கினர். பிரான்ஸ் தனது குடியேற்ற நாடுகள் யாவற்றிலும், குறிப்பாக இந்தோசீனாவில் இவ்வாறான கொள்கையை நடைமுறைப்படுத்தியது. சுருங்கக்கூறின், குடியேற்ற நாட்டுப் பாடசாலைகள் உள்ளூர் சமூகத்திலிருந்தும் பண்பாட்டிலிருந்தும் விலகி நின்றன; அத்துடன் குடியேற்ற ஆட்சியாளர்களின் சமூகங்களுடனும் பண்பாடுகளுடனும் தொடர்பற்றிருந்தன.

ஐரோப்பியப் பாடசாலைக் கல்வி ஏற்பாட்டில் ஆரம்பக்கல்வி யாவருக்கும் பொதுக் கல்வியாக வழங்கப்படவில்லை. செல்வந்தர்களின் பிள்ளைகளுக்குப் பின்தங்கிய வகுப்புப் பிள்ளைகளின் கல்வியைவிட உயர்தரமான, உள்ளடக்கத்தில் வேறுபட்ட கல்வி வழங்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, பிரான்சில் வறிய பிள்ளைகள் அரசாங்க ஆரம்பப் பள்ளிகளுக்குச் செல்ல, செல்வந்தர்களின் பிள்ளைகள் கட்டணம் அறவிடும்

கல்லூரிகளுக்குச் சென்று இலக்கிய நலம் வாய்ந்த, சிறப்பான ஆரம்ப இடைநிலைக் கல்வியைப் பயின்றனர்.

இந்நாடுகளில் இடைநிலைக் கல்வியும் தொழிற்கல்வி, நூல்சார் கல்வி என வேறுபடுத்தப்பட்டிருந்தது; 1920களில் ஐரோப்பாவில் விஞ்ஞானங்களும் மனிதப் பண்பியல் நெறிகளும் நூல்சார் கல்வியாக வழங்கின; இவற்றில் தேர்ச்சி பெற்ற சிலர் பல்கலைக்கழகம் சென்றனர். சுருங்கக்கூறின், பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பியக் கல்விமுறை ஆரம்ப, இடைநிலை, மூன்றாம் நிலை ஆகிய மூன்று நிலைகளைக் கொண்டிருந்தது; அவை ஒவ்வொன்றும் முன்னைய நிலைகளின் தொடர்ச்சியாக அமைந்தன. ஆரம்பநிலையின் பின்னர் ஐரோப்பியப் பாடசாலைகள் சமூக வகுப்பின் அடிப்படையில் கல்வி வழங்கின; குறைந்த வருமான வகுப்பினருக்கு சாதாரண பாடசாலைகளும் மத்திய, உயர் மத்திய வகுப்பினருக்கு உயர்தரமான பாடசாலைகளும் ஏற்படுத்தப்பட்டன; மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வி முடிந்த பின்னர் தத்தமது சமூக வகுப்பில் இணைந்து கொள்ளும் வகையில் இப்பாடசாலைகள் அமைந்தன. ஆற்றலுடைய வறிய மாணவர்கள் தமது பாடசாலைகளைக் கடந்து உயர்தர பாடசாலைகளில் பயின்று முன்னேறலாம் என்பதும் இக்கல்வி ஏற்பாடு வழங்க முற்பட்ட ஒரு நம்பிக்கையாகும்.

குடியேற்ற நாடுகளின் பாடசாலை அமைப்பு மிக மேலோட்டமாக இவ்வைரோப்பியப் பாடசாலைகளை ஒத்திருந்தது. இந்நாடுகளில் முழுமையான ஐரோப்பியப் பாடசாலைகள் அமைக்கப்பட்டது உண்மையே; ஆனால் அவை ஐரோப்பிய ஆட்சியாளர்களின் பிள்ளைகளுக்கே கல்வி வழங்கின. கென்யா, வியட்நாம், இந்தோனேசியா, அல்ஜீரியா ஆகிய நாடுகளில் இவ்வாறான பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. இம்மாணவர்கள் உயர் கல்வி பெற ஐரோப்பா சென்றனர்.

உள்ளூர் மக்கள் இவ்வைரோப்பியப் பாடசாலைகளுக்கு வழமையாக அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் அனுமதி பெறப் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அத்துடன் அப்பாடசாலைகள் விதித்த கட்டணங்களை உள்ளூர் மக்கள்

செலுத்த முடியவில்லை. உயர் பதவியிலிருந்த உள்ளூர் மக்களுக்கும் இது செலவுமிக்கதாக இருந்தது.

குடியேற்ற நாட்டுக் கல்விமுறை இருமைத்தன்மை யொன்றைப் பிரதிபலித்தது; அதாவது இந்நாடுகளில் இரு வகைப்பட்ட பாடசாலைகள் காணப்பட்டன. குடியேற்ற ஆட்சியாளர்களின் பிள்ளைகளுக்கு ஒருவகையான பாடசாலைகளும் உள்ளூர் பிள்ளைகளுக்கு வேறுவகையான பாடசாலைகளும் நிறுவப்பட்டிருந்தன. பல குடியேற்ற நாடுகளில் மூன்றாவது வகையான உள்ளூர் மரபுகளின் அடிப்படையிலான கல்வி முறையொன்றும் காணப்பட்டது. அரசாங்கம் இதற்கு ஆதரவளிக்க முடியவில்லை. சில நாடுகளில் இப்பாடசாலைகள் அரசியல் குழப்பங்களுக்கு காரணமாகலாம் என்று குடியேற்ற ஆட்சியாளரின் ஐயத்துக்குள்ளாயின.

1930கள் வரை இந்தியா, இந்தோசீனம் தவிர்ந்த ஏனைய குடியேற்ற நாடுகளில் உயர் கல்வி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை. பெரும்பாலான ஆபிரிக்கக் குடியேற்றங்களில் இடைநிலைக் கல்வி ஏற்பாடுகள்கூட இருக்கவில்லை. மொத்தத்தில் குடியேற்ற நாடுகளின் பாடசாலைகள் ஆரம்பக் கல்வி நிலையங்களாகவே விளங்கின. மேலும் ஆரம்பக் கல்வியும் வேறுபடுத்தப்பட்டுக் காணப்பட்டது. பெரும்பாலும் காணப்பட்டவை, மூன்று தொடக்கம் ஐந்தாண்டு வரை கல்வி வழங்கிய, பாடசாலைகளாகும். இவை முழுமையான ஆரம்பக் கல்வியை வழங்காது தொடக்கக் கல்வியையே (elementary and basic) வழங்கின; பிரித்தானியக் குடியேற்றங்களில் இப்பாடசாலைகளை கிறித்தவ சமயக் குழுவினர் நடாத்தினர்; இவை ஒழுக்கக் கல்வியை வலியுறுத்தியதுடன் விவசாயம், விலங்கு வளர்ப்பு மற்றும் சிறுதொழில்களில் பயிற்சி வழங்கின. இப்பாடசாலைகள் ஆரம்ப, இடைநிலைகளைக் கொண்ட முறைசார்ந்த பாடசாலை அமைப்புடன் தொடர்பற்றிருந்தன.

குடியேற்ற நாடுகளின் கல்வி முறை ஆரம்ப காலங்களில் ஆரம்பக் கல்வியையே பெரும்பாலும் வழங்கி வந்தாலும் இருபதாம் நூற்றாண்டளவில் சிறிதளவு இடைநிலைக் கல்வி ஏற்பாடுகளும் செய்யப்பட்டன; ஆயினும், ஒரு சிலருக்கே

இடை நிலைக் கல்வி வாய்ப்புகள் கிடைத்தன; அத்துடன் ஐரோப்பிய நாடுகளில் வழங்கப்பட்ட இடைநிலைக் கல்வி குடியேற்ற நாடுகளில் வழங்கப்பட்டதாகக் கூற முடியாது. மேலும் ஆபிரிக்காவிலும் ஆசிய நாடுகளிலுமிருந்த பிரித்தானியக் குடியேற்றங்களின் ஆரம்பப் பின்னிலை வகுப்புகள் இடைநிலைக் கல்வியைத்தான் வழங்கின எனக் கூறுவதற்கில்லை. அவை ஆரம்பக் கல்வியின் நீடிப்பாகவே விளங்கின.

## பாட ஏற்பாடு

குடியேற்ற நாட்டுப் பாடசாலைகளின் பாட ஏற்பாடு ஐரோப்பியப் பாடசாலைப் பாட ஏற்பாட்டை ஒத்திருக்க வில்லை. பெரும்பாலான குடியேற்றப் பாடசாலைகள் மொழிப் போதனையையும் ஒழுக்கக் கல்வியையும் வலியுறுத்தின; மாணவர்கள் தமது சொந்த மொழிகளைக் கற்கவில்லை. பிரித்தானிய குடியேற்றங்களின் நகரப் பாடசாலைகள் பெரும்பாலும் ஆங்கிலப் பாடசாலைகளாகவே காணப்பட்டன. பிரான்ஸ் நாட்டின் ஆபிரிக்கக் குடியேற்றங்களிலிருந்த நகரப் பாடசாலைகள் பிரஞ்சு மொழியை மட்டுமே கற்பித்தன. பிரித்தானிய குடியேற்றங்களில் கிராமப்புறப் பாடசாலைகள் உள்ளூர் மொழிகளைப் பயன்படுத்தின. மொத்தத்தில் குடியேற்ற நாட்டுக் கல்வி முறை உள்ளூர் மொழிகளைக் கௌரவிக்கவில்லை எனலாம். உள்ளூர் மொழிகள் பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டவிடத்து மிக அடிப்படையான அறிவே வழங்கப்பட்டது; உள்ளூர் மொழிகளில் பயின்றவர்கள் இரு அல்லது மூன்றாண்டுகளில் பாடசாலைகளை விட்டு விலகினர். மறுபுறம், உயர் கல்வியையும் உயர் பதவிகளையும் நகர வாழ்க்கையையும் நாடியோர் ஐரோப்பிய மொழிகளிலேயே கற்க வேண்டியதாயிற்று.

இவ்வாறு ஐரோப்பிய மொழிகளில் கல்வி பயின்றவர்கள் குடியேற்ற ஆட்சியாளரின் பண்பாடுகளின் பூரண விளக்கத்தைப் பெற்றனர் என்று கூற முடியாது. குடியேற்ற நாட்டு மக்களுக்குப் பொருத்தமானது என்று ஆட்சியாளர் கருதிய பாடவிடயமே அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது; ஐரோப்பிய மொழிகள், பண்பாடுகளின் ஒரு

திரிபுபடுத்தப்பட்ட வடிவமே அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். வியட்நாமிய மாணவருக்கென ஒரு புதிய பிரஞ்சு மொழி பாட ஏற்பாடு உருவாக்கப்பட்டது; அவர்களுக்கு பிரான்ஸ் பற்றி எதுவும் கற்பிக்கப்படாது வியட்நாம் பற்றியே கற்பிக்கப்பட்டது; பிரஞ்சு ஆட்சியாளர் மேற்கு ஆபிரிக்காவிலும் இவ்வாறான கொள்கையையே பின்பற்றினர். தென்னாபிரிக்க, கிழக்காபிரிக்க குடியேற்றங்களின் பொதுப் பாட ஏற்பாடும் ஐரோப்பிய மொழிப் பாடத் திட்டமும் ஐரோப்பிய பாடசாலைப் பாட ஏற்பாடுகளை ஒத்திருக்கவில்லை என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

மொழிப் பாடம் தவிர வேறு சில வேறுபாடுகளையும் காண்க் கூடியதாக உள்ளது. ஐரோப்பியப் பாடசாலைகளில் ஆரம்பநிலையில் கூட வரலாற்றுப் பாடம் கற்பிக்கப்பட்டது; பிரான்சில் கிழமைக்கு மூன்று மணிநேரம் இப்பாடத்துக்கு ஒதுக்கப்பட்டது. குடியேற்ற நாட்டுப் பாடசாலைகளின் ஆரம்ப வகுப்புகளில் வரலாற்றுக் கல்வி இடம் பெறவில்லை. அப்படி வரலாற்றுப் பாடம் இடம் பெற்றாலும் அப்பாடம் உள்ளூர் பண்பாடுகளை கௌரவித்துப் போற்றும் வகையில் அமையவில்லை; சில சமயங்களில் அந்நாடுகளின் குடியேற்ற ஆட்சியின் வரலாறு மட்டுமே கற்பிக்கப்பட்டது; அதற்கு முற்பட்ட உள்நாட்டு வரலாறு கற்பிக்கப்பட்டவிடத்து உள்நாட்டுப் போர்கள், இனக் குழுச் சண்டைகள், பஞ்சம், மிலேச்சவாதம் என்பனவே வலியுறுத்தப்பட்டன; குடியேற்ற ஆட்சிக் காலத்தில் முன்னேற்றம், சமாதானம் என்பன ஏற்பட்டதாகக் கற்பிக்கப்பட்டது.

இவ்வாறே விஞ்ஞான போதனையிலும் ஐரோப்பியப் பாடசாலைகளுக்கும் குடியேற்றநாட்டுக் கல்விமுறைக்கும் வேறுபாடு காணப்பட்டது; குடியேற்றப் பாடசாலைகள் ஐரோப்பியப் பாடசாலைகளை விடக் குறைவாகவே விஞ்ஞானம் கற்பித்தன; அத்துடன் விஞ்ஞான பாட உள்ளடக்கமும் வேறுபட்டதாக இருந்தது. குடியேற்ற நாட்டு மக்களின் தேவைகளுக்குப் பொருத்தமானது என்று ஆட்சியாளர் கருதிய விஞ்ஞான அறிவே புகட்டப்பட்டது.

எனவே ஆரம்ப நிலையில் கற்பிக்கப்பட்ட விஞ்ஞானம் தனியாள் சுகாதாரம், குடும்பக்கலை என்பவற்றை உள்ளடக்கி இருந்தது; ஆரம்பப் பின்னிலையில் உயிரியல், தாவரவியல், தாவரம் வளர்த்தல், உயிரியல் (வீட்டு மிருகங்களைக் கவனித்தல் வலியுறுத்தப்பட்டது) என்பன கற்பிக்கப்பட்டன; விவசாயப் பயிற்சியும் இந்நிலையில் விஞ்ஞான பாடத்தில் ஓர் அங்கமாகக் கருதப்பட்டது.

சுருங்கக்கூறின், பாடசாலைப் பாட ஏற்பாடு மாணவர்களின் சமூக இயல்புகளிலிருந்து உருவாகவில்லை; அதே வேளையில் குடியேற்ற ஆட்சியாளரின் சமூகத்திலிருந்தும் உருவாகியிருக்கவில்லை; இப்பாட ஏற்பாடு ஐரோப்பியப் பாடசாலைப் பாட ஏற்பாட்டின் செறிவு குறைக்கப்பட்ட, மலினப்படுத்தப்பட்டதொன்றாக மட்டும் இருக்கவில்லை; குடியேற்ற நாட்டு மக்கள் தமது கடந்த காலம் பற்றி அறிவதற்கு அவர்களுக்கிருந்த உரிமையை இப்பாட ஏற்பாடு மறுத்தது; சிறந்த எதிர்காலத்தைப் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளை அவர்கள் கல்வி முறையினூடாகப் பெற முடியவில்லை. தனது பாரம்பரிய தொழில் தொடர்பான திறன்களை மட்டுமே பெற முடிந்தது.

குடியேற்ற நாடுகளின் பாரம்பரிய தொழில்களுக்கு அப்பால் உள்ள வேறு தொழில் வாய்ப்புகளுடனேயே குடியேற்றக் கல்வி தொடர்புபட்டிருந்தது. பாடசாலை சென்ற சிலர் ஆட்சியாளர்களின் மொழியைக் கற்று அரசாங்கத்திலும் தனியார் துறையிலும் பாடசாலைகளிலும் சிறு தொழில்களைப் பெற்றனர். அதே வேலையை செய்த ஐரோப்பியர்களின் சம்பளங்களுடன் ஒப்பிடும்போது இவர்களது சம்பளம் மூன்றில் ஒன்றாகவே இருந்தது. ஆயினும் 1900 ஆம் ஆண்டளவில் இவ்வாறு கல்வி கற்றவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புகள் கிட்டவில்லை. மேலும், கல்வி பயிலுவோர் தொகையும் குறைவாகவே இருந்தது. பெரும்பாலான குடியேற்றங்களில் பாடசாலை வயதெல்லைக்குட்பட்ட பிள்ளைகளில் 10 வீதமானவர்களே பாடசாலையில் அனுமதியாயினர்; அவர்களில் 95 வீதமானவர்கள் ஆர்ம்பக்கல்வியை முடிக்குமுன்னர் பாடசாலையை விட்டு விலகினர்.

அரசாங்கம், கல்வி கற்ற யாவருக்கும் வேலை வாய்ப்புகளை வழங்க முடியவில்லை; தனியார் துறைக்கும் அவ்வாறு செய்ய முடியவில்லை; பெரும்பாலான குடியேற்றங்களில் கைத்தொழில் வளர்ச்சி சிறிய அளவிலேயே இருந்தது. இந்நாடுகளின் ஆட்சியாளர் பெருந்தோட்டப் பயிர் செய்கையிலேயே (தேயிலை, கோப்பி, பருத்தி போன்றன) கூடிய அக்கறை செலுத்தினர். இங்கு வேலை செய்ய சாதாரண தொழிலாளர்களே தேவைப்பட்டனர்; அலுவலக வேலைகளையும் உயர்ந்த சம்பளங்களையும் நாடிய கற்றோருக்கு பெருந்தோட்ட வேலைவாய்ப்புகள் பொருத்தமாக இருக்கவில்லை.

குடியேற்ற நாடுகளில் வாழ்ந்த உள்ளூர் மக்கள் குடியேற்ற ஆட்சியாளர்களின் கல்வி ஏற்பாடுகளை எவ்வாறு நோக்கினர் என்பதும் முக்கிய விடயமாகும்; சில குழுவினர் குடியேற்ற வாதத்தையும் அதன் நிறுவனங்களையும் தமது சொந்த காரணங்களுக்காக வரவேற்றனர். வியட்நாமிய இந்திய அரசர்கள் குடியேற்ற ஆட்சியில் தங்கி வாழ்ந்தவர்கள் என்பதால் இவ்வாறு கருதினர்.

வேறு சிலர் தமது சமூகரீதியான முன்னேற்றத்துக்குப் பாடசாலைகள் உதவும் எனக் கண்டனர். உள்ளூர் சமூக அமைப்பில் அவ்வளவு அந்தஸ்தைப் பெறாதவர்கள் குடியேற்ற நாட்டு நிறுவனங்களுக்கூடாக அந்தஸ்தைப் பெறலாம் என்க் கருதினர். ஆபிரிக்க சமுதாயங்களில் முன்னர் அடிமையாக இருந்தவர்கள் பாடசாலைக் கல்வியினூடாகக் கௌரவமான பதவிகளைப் பெற்று அடிமை என்ற பெயரை நீக்கிக்கொள்ளலாம் என எண்ணினர். பெண்கள் சமயக் குழுப் பாடசாலைகளில் படித்து சற்றுச் சுதந்திரம் பெறக் கூடியதாக இருந்தது.

உள்ளூர் மக்கள் குடியேற்றக் கல்வியை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள, அக்கல்வி வழங்கிய வேலைவாய்ப்புகளும் பொருளாதார நன்மைகளும் காரணங்களாயின; அத்துடன் உள்ளூர் மக்கள் குடியேற்றவாதம் நிரந்தர அம்சமாகி தமது உள்ளூர் பண்பாட்டுக்கும் நிறுவனங்களுக்கும் எதிர்காலம் உண்டோ என ஐயுறும் நிலைமையும் காணப்பட்டது; மேற்கு நாட்டுத் தொழில்நுட்பம், விஞ்ஞானம் என்பவற்றைப் பயின்று

தமது சமூகங்களுக்குப் புத்துயிரளிக்கலாம்; இழந்த ஆட்சியதிகாரத்தை மீண்டும் பெறலாம் எனக் கருதினர். மேலும் கல்வியினூடாகக் குடியேற்றவாதக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு நவீன தேசிய அரசுகளை உருவாக்கிக் கொள்ளலாம் எனவுங்கருதினர். இக்குடியேற்றங்களில் தேசியவாதத்தை உருவாக்குவதற்குக் கல்வி ஒரு வழிமுறையாகவும் கருதப்பட்டது.

குடியேற்றப் பாடசாலைகளை எதிர்ப்பவர்களும் காணப்பட்டனர். அவர்கள் தமது பிள்ளைகளுக்கு இப்பாடசாலைகள் பொருத்தமற்றன எனக் கருதினர். பலருடைய பிள்ளைகள் அங்கு பயிலும் சாத்தியங்களும் இருக்கவில்லை. ஏனெனில், அவர்களுடைய இல்லங்களுக்கு அருகில் பாடசாலைகள் இருக்கவில்லை. அத்துடன் பாடசாலைக் கட்டணங்களைச் செலுத்தும் ஆற்றலும் அவர்களுக்கு இருக்கவில்லை. சமயத்திலும் பண்பாட்டிலும் ஊறிய பெற்றோர்கள் குடியேற்றப் பாடசாலைகள் உள்ளூர் சமயத்தையும் பண்பாட்டையும் சிதைத்துவிடும் எனக் கருதினர். இதன் காரணமாகவே இந்தியாவில் இஸ்லாமியர்கள் ஆங்கிலக் கல்வியை அதிகம் நாடாது தமது பொருளாதார வாழ்வில் பின்தங்க நேர்ந்தது என ஆய்வாளர்கள் கூறுவர்.

உள்ளூர் மக்கள் குடியேற்றப் பாடசாலைகள் மீது கடுமையான வெறுப்பைக் காட்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. தமது பிள்ளைகள் இப்பாடசாலைகளில் அனுமதிபெறுவதைப் பல பெற்றோர்கள் எதிர்த்தனர். எடுத்துக்காட்டாக வியட்நாமியப் பெற்றோர்கள் கல்வியைப் பிள்ளைகளுக்கு வழங்கும் கடூழியத் தண்டனையாகக் கருதினர். குடியேற்றக் கல்வி தமது சமூகத்தின் நீடித்த வாழ்க்கையை அச்சுறுத்துவதாகவும் கருதினர்.

உள்ளூர் மக்கள் குடியேற்றக்கல்வியை ஒன்றில் ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது, அல்லது நிராகரிக்க வேண்டியிருந்தது. தமது விருப்புகளுக்கும் அபிலாசைகளுக்கும் ஏற்ற முறையிலான ஒரு கல்விமுறையைத் தீர்மானிக்கும் சுதந்திரம் அவர்களுக்கு இருக்கவில்லை.

எச்சமூகங்களிலும் பாடசாலைகள் அவற்றைச் சூழவுள்ள சமுதாயங்கள், சமூகவகுப்புகள், பண்பாடுகள் என்பவற்றுடன் தொடர்பற்ற முறையில் வளர்ச்சியுற்றன என்று வாதிட முடியும். ஆயினும் குடியேற்ற ஆட்சிக்காலக் கல்விமுறை இதிலிருந்து வேறுபடுகின்றது. ஏனெனில் இக்கல்விமுறை தனது சொந்த சமூக அமைப்பிலிருந்து அதாவது, ஐரோப்பிய சமூகத்திலிருந்தும் எல்லா வகைகளிலும் வேறுபடுகின்றது. அத்துடன் குடியேற்றச் சமூகங்களிலுமிருந்தும் வேறுபட்டு அமைந்தது. மேலும் ஐரோப்பாவில் காணப்பட்ட தொழிலாள வகுப்பினருக்கான கல்விமுறை போன்றுகூடக் குடியேற்ற நாட்டுக் கல்விமுறையமையவில்லை. ஆய்வாளர் கருத்தின்படி ஐரோப்பியத் தொழிலாள வகுப்பினருக்கான கல்விமுறையை ஒத்ததாகவே குடியேற்ற நாட்டு உயர்தர, இடைநிலைக் கல்வியைக் கருத முடியும். குடியேற்றக் . கல்விமுறை பிரித்தானிய தருமப் பாடசாலைகளிலும், ஐக்கிய அமெரிக்காவில் முன்னை நாள் அடிமைகளுக்கு வழங்கப்பட்ட கல்வியை ஒத்ததாக இருந்தது. சுருங்கக்கூறின், ஐரோப்பாவில் தொழிலாளர் வகுப்பினருக்கென உருவாக்கப்பட்ட கல்விமுறைகளை முன்மாதிரியாகக் கொண்டே குடியேற்றங்களில் கற்றோர் குழாத்தை உருவாக்குவதற்கான பாடசாலைகள் அமைந்தன.

# 2

## தென்னாசியாவில் குடியேற்றவாதக்கல்வி

குடியேற்ற ஆட்சியாளர் தாம் கைப்பற்றிய நாடுகளில் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்த கல்வியை ஒரு கருவியாகக் கொண்டனர். அதன் காரணமாக குடியேற்றவாதக் கொள்கை பற்றிய ஆராய்ச்சிகளில் கல்விக்கும் முக்கிய இடம் அளிக்கப்பட்டது. இவ்வகையில் இந்தியாவின் அனுபவம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்; ஏனெனில், இந்தியாவில்தான் குடியேற்றவாதக் கொள்கை மிக வெளிப்படையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் உலகில் வேறெங்கும் இல்லாதவாறு பெருந்தொகையான மக்கள் குடியேற்றவாதக் கொள்கையினால் கட்டுப்படுத்தப்பட்டனர். (அன்றைய இந்தியா, இன்றைய பாகிஸ்தானையும் வங்காள தேசத்தையும் கொண்ட இலங்கை தவிர்த்த ஏனைய தென்னாசியப் பிரதேசத்தை உள்ளடக்கியிருந்தது). மேலும் இந்தியாவில்தான் பிரித்தானியர் அதிக காலம் ஆட்சி செய்தனர். வேறு எந்த குடியேற்ற ஆட்சியாளரும் தாம் ஆண்ட நாட்டில் செலுத்திய செல்வாக்கை விட பன்மடங்கு அதிகமான செல்வாக்கினை பிரித்தானியர் இந்தியாவில் செலுத்தினர். பொருளாதார ரீதியாக இந்தியா அவர்களுக்கு முதல் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது; அத்துடன் இந்தியா இராணுவ, அரசியல் செல்வாக்குக்கான மூலாதாரமாகவும் இருந்தது. இவ்வாறான பல்வேறு காரணங்களால் இந்தியா பிரித்தானியாவின் தேசிய நலன்களுக்கு அவசியமான நாடாகக் கருதப்பட்டது.

பிரித்தானியர் இந்தியாவில்தான் முதன்முதலாக அந்நிய மொழியினூடாக கற்றோர் குழாம் ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இது ஒரு கல்வித் துறை சார்ந்த

பரிசோதனையாகவும் அமைந்தது; இப்பரிசோதனையின் காரணமாக எதிர்பாராத பல முரண்பாடுகளை அறியக்கூடியதாக இருந்தது. இந்தியாவில் பெற்றுக்கொண்ட இந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே பிரித்தானியர் ஆபிரிக்கா, தென்கிழக்காசியா போன்ற இடங்களிலிருந்த தமது குடியேற்ற நாடுகளுக்கான கல்விக் கொள்கைகளை உருவாக்கினர்; இந்தியத் துணைக்கண்டத்தில் தாம் விட்ட தவறுகளைத் தவிர்த்துக் கொண்டனர்.

ஆரம்பத்தில் அவர்கள் இந்திய மக்கள் மீது மேற்கத்தைய பாணியிலான ஒரு கல்வி முறையைத் திணிக்க முற்படவில்லை. ஏனெனில்; அவர்கள் வர்த்தகத்திலும் ஏனைய இலாபம் தேடும் முயற்சிகளிலும் மட்டுமே கண்ணும் கருத்துமாய் இருந்தனர். ஆயினும், அவர்கள் இந்தியா முழுவதையும் கைப்பற்றி அளத் தொடங்கிய பின்னர், இந்தியாவிலிருந்த உள்ளூர் நிறுவனங்கள் பற்றி ஒரு நிலைப்பாட்டை உருவாக்க வேண்டியிருந்தது. ஆரம்பத்தில் அவர்கள் உள்ளூர் கல்வி நிறுவனங்களில் தலையிட விரும்பவில்லை. மரபுவழிக் கல்வி பயின்றிருந்த உள்ளூர் மக்களுடன் இணக்கமாக நடக்கவே முயன்றனர். இதனால் கீழைத்தேய கல்வி மரபுகளுக்கு ஆதரவு வழங்கவும் முற்பட்டனர். 1781 இல் கல்கத்தா மத்ரசாவும் 1792 இல் காசி சமஸ்கிருத பல்கலைக்கழகமும் உருவாக அவர்கள் உதவினர். சமஸ்கிருதம், அரபு, பாரசீகம் ஆகிய மொழிகளை அறிந்த நீதி நிர்வாகிகளும் பிரித்தானியருக்குத் தேவைப்பட்டனர். சில அதிகாரிகள் இந்திய மரபுவழிப் பண்பாட்டை வரவேற்கவும் செய்தனர்.

ஆயினும், இங்கிலாந்திலிருந்த திருச்சபைக் குழுவினரும் வேறு பல இயக்கத்தவரும் உள்ளூர் கல்வி மரபுகளுக்கு ஊக்கமளிக்கப்படுவதை விரும்பவில்லை. அவர்கள் இந்திய சமூகம் தீவிர மாற்றத்துக்குள்ளாக வேண்டும் என்று கருதினர். இந்திய மக்கள் மத்தியில் நிலவிய 'அஞ்ஞானத்தைக்' களைய, புரட்டஸ்தாந்து மதமும் ஐரோப்பியக் கலைகளும் விஞ்ஞானமும் இந்தியாவில் அறிமுகம் செய்யப்படல் வேண்டும் என்றனர். ஐரோப்பிய சட்டங்களும் நிறுவனங்களும் இந்தியாவிலிருந்ததைவிட மிக உயர்ந்தவை

என்பது அவர்கள் கருத்து. இப்பின்னணியில், கிறித்தவ சமயக் குழுக்களின் பணிகளுக்கு ஊக்கம் வழங்கப்பட்டது. பிரித்தானியர் ஆட்சிக்கு இந்தியர்களை இணங்கச் செய்ய கிறித்தவ சமயமும் ஆங்கிலக் கல்வியும் பரப்பப்படல் வேண்டும் என்று நம்பப்பட்டது.

பிரித்தானிய தாராண்மைவாதிகளும் மேற்கு நாட்டுக் கல்வியே மேன்மையானது என்ற கருத்தை ஏற்றனர். இங்கிலாந்து பொருளாதாரத்திலும் வர்த்தகத்திலும் முன்னேற அங்கு வழங்கப்பட்ட கல்வியே காரணமாக இருந்தது; ஒரு சிறந்த ஐரோப்பிய நூல்நிலையத்தின் ஒரு தட்டில் காணப்படும் நூல்கள் சில, இந்தியாவிலும் அரேபியாவிலும் காணப்படும் அத்தனை உள்ளூர் இலக்கியங்களுக்கும் சமமானவை என்றனர். இந்து மரபுக் கல்வி பயனற்ற கல்வி; அதனைக் கற்பிப்பது தேவையற்றது; உள்ளூர் நிறுவன்ங்களுக்கும் மரபுகளுக்கும் ஆதரவு வழங்குவது அடிப்படையில் தவறானது என்று அவர்கள் வாதாடினார்.

1820களில் இந்தியர்கள் மத்தியிலும் மேலைநாட்டுக் கல்விக்கு ஆதரவு எழுந்தது. கல்கத்தாவில், ராஜாராம் மோகன்ராய் இதில் முக்கிய பங்கெடுத்தார். கல்கத்தாவில் சமஸ்கிருத கல்லூரி அமைக்கப்படுவதை அவர் எதிர்த்தார். இலக்கண நயங்களையும் கற்பனைச் சிந்தனைகளையும் இளைஞர்களுக்குக் கற்பிப்பதால் எதுவித பயனுமில்லை; இதனால் அவர்களும் சமூகமும் ப்யனடையமுடியாது என்று அவர் கருத்துத் தெரிவித்தார். இவரைப் போன்ற இந்தியர்கள் பிரித்தானிய இராணுவம் அடைந்த வெற்றிகளிலிருந்து தமது தாய்நாடும் மேற்கு நாட்டு விஞ்ஞானம், இலக்கியம் என்பவற்றால் மட்டுமே முன்னேற்றம் காண முடியும் என நம்பினர். ராய் போன்றோர் இந்திய மறுமலர்ச்சிக்கு மேற்கு நாட்டு அறிவே உதவும் எனக் கருதினர். வேறு பல இந்தியர்கள் ஆங்கில மொழி அறிவு வாழ்க்கையில் வெற்றி பெற அவசியம் எனக் கருதினர். ஆட்சியாளர்களுடன் வர்த்தக, நிருவாகத் தொடர்புகளைக் கொண்டிருந்த இந்தியர்களுக்கு ஆங்கில அறிவு அவசியமாயிற்று. பம்பாயிலும் கல்கத்தாவிலும் வாழ்ந்த செல்வந்தர்கள் ஆட்சியாளர்களின் தொடர்பின் காரணமாகவே செல்வந்தர்களாயினர்.

இவ்வகுப்பைச் சேர்ந்த இந்தியர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையே சமூக தொடர்புகளும் ஏற்பட்டன. இந்நிலையில் இந்தியர்களுக்கு ஆங்கில அறிவு பல வழிகளில் தேவைப்பட்டது.

இந்தியாவில் ஏற்பட்ட கல்வித்துறை மாற்றங்கள் ஆங்கில ஆட்சியாளர்களின் தீர்மானங்களால் மட்டும் ஏற்பட்டதல்ல. ஆங்கிலக் கல்வி இந்தியர்கள் மீது சுமத்தப்படவில்லை. கல்கத்தாவிலும் பம்பாயிலுமிருந்த செல்வந்தர்களான இந்தியர்கள் தாமே முன்வந்து ஆங்கிலப் பாடசாலைகளை அமைத்தனர். ஆட்சியாளர்களின் தாய்மொழியையும் பண்பாட்டையும் ஏற்று அவற்றினூடாகத் தமது சமூகத்தை நவீனமயப்படுத்த அவர்கள் முற்பட்டனர். ஆங்கிலக் கல்வியை ஆதரித்த சில பிரித்தானிய அதிகாரிகள் ஆங்கிலக் கல்விக்கு மட்டுமே அரசாங்க நிதி ஒதுக்கப்படல் வேண்டும் என்றனர்.

ஆங்கிலேயர் தமது பெருந்தன்மை காரணமாக ஆங்கிலக் கல்வியை வழங்க முற்படவில்லை. அவ்வாறான கல்வி ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்குமிடையில் ஒரு பிணைப்பை ஏற்படுத்தும் என்று கருதினர்; இந்தியர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுவிட்டால் ஆட்சியாளர்களை அந்நியராகக் கருதமாட்டார்கள். ஆட்சியாளர்களுக்கு விவேகமான முறையில் ஒத்துழைப்பு வழங்கவே முற்படுவர்; இதனால் ஆங்கில ஆட்சி உறுதிபெற்று நிரந்தரமாகி விடும்; இவ்வாறான அரசியல் நோக்கமும் ஆங்கிலக் கல்வி அறிமுகம் செய்யப்படக் காரணமாக இருந்தது.

அத்துடன் ஆங்கில ஆட்சியாளர்கள் ஆளுகின்றவர்களுக்கும் ஆளப்படுவோருக்கும் இடையே பாலமாக விளங்கக் கூடிய ஆங்கிலம் கற்ற ஒரு மத்தியதர வகுப்பினரை இந்தியர் மத்தியில் உருவாக்கினால் தமது நிர்வாகம் சிறப்பாக நடக்கும் என்று கருதினர். ஆளப்படும் கோடிக்கணக்கான மக்கள் பாமர, எழுத்தறிவற்ற இந்தியர்கள், ஆங்கில மொழி அறியாதவர்கள். ஆளுகின்ற ஆங்கிலேயர்கள் உள்ளூர் மொழிகளை அறிந்தவரன்று. எனவே "இரத்தத்திலும் நிறத்திலும் இந்தியர்களாகவும் பேச்சிலும் நடைஉடை பாவனையிலும் சிந்தனையிலும் ஆங்கிலேயர்களாகவும் இருக்கக்கூடிய ஓர் இந்திய மத்திய வகுப்பினரை உருவாக்க" ஆங்கிலக் கல்வி முறை அறிமுகம் செய்யப்பட்டது. இது குடியேற்றவாதத்தின் அடிப்படைக் கொள்கையாயிற்று.

அத்துடன், இந்தியர்களுக்கு ஆங்கிலக் கல்வியை வழங்கி அவர்களை பிரித்தானிய இறக்குமதிப் பொருட்களைப் பயன்படுத்துவதில் பழக்கப்படுத்தி விடலாம். ஆங்கிலம் கற்ற இந்தியர்கள் லங்காசயர், செபில்ட் ஆகிய இடங்களின் கைத்தொழிற் பொருட்களில் சுவையை வளர்த்துக் கொள்வர். அறியாமையால் பீடிக்கப்பட்ட இந்தியர்கள் ஆங்கிலப் பொருட்களின் அருமையை அறியமாட்டார்கள் என்று கருதப்பட்டது.

இவ்வாறு பல்வேறு சமய, ஒழுக்க, அரசியல், நிர்வாக, பொருளாதார காரணங்களின் அடிப்படையில் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் குடியேற்ற ஆட்சியாளரின் கல்விக் கொள்கை தீர்மானிக்கப்பட்டது.

1844 ஆம் ஆண்டு ஆங்கிலம் கற்ற இந்தியர்களுக்கு சகல அரசாங்க நியமனங்களிலும் முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இதன் பின் பாடசாலைக் கல்வியில் மேற்கு நாட்டு விஞ்ஞானங்களும் இலக்கியமும் ஆங்கில மொழியில் கற்பிக்கப்பட்டன; ஆங்கில மொழியிலான உயர்கல்வி உயர் வகுப்பினருக்கு மட்டும் வழங்கப்பட்டது. நிதிப் பிரச்சினைகள் காரணமாகப் பரவலாகக் கல்வி வழங்குவது கடினமாக இருந்தது. ஒரு சிலர் படித்துவிட்டால் அவர்களுக்கூடாக மக்கள் மத்தியில் கல்வி 'பரவும்' என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், சாதிபேதம் மிகுந்து காணப்பட்ட இந்திய சமுதாயத்தில் இவ்வெதிர்பார்ப்பு நிகழவில்லை. 'உயர் சாதிகளை'ச் சேர்ந்த உயர் தொழில் வகுப்பினர் ஆங்கிலக் கல்வியைத் தமது மேம்பாட்டுக்கே பயன்படுத்திக் கொண்டனர்.

நகர்ப்புற உயர் மத்திய வகுப்பினரே சிறந்த கல்வியைப் பெற்றனர்; பொதுமக்களின் கல்வி வசதிகள் பற்றி சிந்திக்கப்படவில்லை. இந்தியாவில் ஏராளமான உயர்நிலைப் பள்ளிகளும் கல்லூரிகளும் எழுந்தன, ஆனால் ஆரம்பக் கல்வி பின்தங்க நேரிட்டது. 1900 ஆம் ஆண்டளவில் 75 வீதமான கிராமங்களில் பாடசாலைகள் இருக்கவில்லை; 80 வீதமான ஆண் பிள்ளைகள் பாடசாலை செல்லவில்லை. இதனால் இந்தியா சுதந்திரம் பெற்றபோது 16 வீதமான மக்களுக்கே

எழுத்தறிவு இருந்தது. இது சுதந்திர இந்தியாவின் பொருளாதார, அரசியல் சனநாயக வளர்ச்சியைப் பாதித்தது.

கல்வி விரிவாக வழங்கப்படாததுடன் வழங்கப்பட்ட கல்வியும் தரத்தில் குறைவாக இருந்தது. பாட ஏற்பாடு முற்றிலும் நூற்கல்விச் சார்புடையதாக விளங்கியது. தொழிற்கல்வி ஏற்பாடுகள் இருக்கவில்லை. தொழில்சார் கல்லூரிகளைவிட கலைக்கல்விக் கல்லூரிகள் பன்மடங்காகப் பெருகின. கலைக் கல்லூரிகளில் பயின்றவர்கள் அரசாங்க சேவையில் சேரக் கூடியதாக இருந்தது. பொறியியல், நீர்ப்பாசனம், புகையிரதப் பகுதி, அஞ்சல், தந்தி சேவைகள் சார்ந்த உயர் பதவிகள் ஐரோப்பியருக்கு ஒதுக்கப்பட்டன. கைத்தொழில் துறையினரும் ஐரோப்பியரையே விரும்பினர். இத்துறைகளில் இந்தியர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கவில்லை.

ஆங்கிலக் கல்வி பயின்றோர் உண்மையான பல்துறை சார்ந்த கல்வியைப் பெறாது ஆங்கில மொழிக் கல்வியிலேயே கூடிய கவனம் செலுத்தினர். பல்வேறு பாடங்களினூடாக ஆங்கில மொழியறிவு வளர்க்கப்பட்டது. மனனம் செய்தல் முக்கிய கற்றல் முறை ஆயிற்று. நுணுகி ஆராயும் நோக்கு வளர்க்கப்படவில்லை. கல்விமுறை முழுவதும் பரீட்சைக்கு முக்கியத்துவமளித்தது.

இந்திய பல்கலைக்கழகங்களும் பிரித்தானிய முன்மாதிரியைக் கொண்டே அமைக்கப்பட்டன. பின்னர் நியமிக்கப்பட்ட இராதாகிருஷ்ணன் ஆணைக் குழுவும் இந்தியப் பல்கலைக்கழகங்கள் அந்நாட்டின் மரபுவழி வந்த உயர்கல்விப் பாரம்பரியங்களுடன் தொடர்பற்றிருந்ததைச் சுட்டிக்காட்டியது. ஆயினும், இந்நிலைமையை மாற்ற முடியவில்லை. பல்கலைக்கழகக் கல்வியை மேலும் விரிவு செய்வது பற்றியே விதந்துரைக்கப்பட்டது.

நீண்ட கால குடியேற்ற ஆட்சியின் காரணமாக, அவ்வாட்சியின்போது அமைக்கப்பட்ட கல்வி நிறுவனங்களையும் கல்வி ஏற்பாடுகளையும் விரும்பும் மனப்பாங்கு கல்வி கற்ற இந்தியர் மத்தியிலும் காணப்படுகின்றது.

# 3

## இலங்கையில் குடியேற்றவாதக் கல்வி

ஐரோப்பிய நாடுகளில் 15 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக அறிவுத் துறையில் பல்வேறு புரட்சிகர மாற்றங்கள் உண்டாயின. ஐரோப்பிய நாடுகளின் அரசர்களது அனுசரணையுடன் நாடுகாண் பயணங்களும் புதிய தேட்டங்களும் இடம்பெறத் தொடங்கின. மனிதன் அறிந்திருந்த உலகின் பருமன் விசாலமடைந்தது. ஏகாதிபத்தியங்கள் புதிய நாடுகளின் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி ஆட்சிப் பிரதேசங்களின் விரிவாக்கத்துக்கு வித்திட்டன. சிறப்பாகப் போர்த்துக்கேயர், ஸ்பானியர், ஒல்லாந்தர், பிரெஞ்சுக்காரர், பிரித்தானியர் போன்றோர் இம்முயற்சியில் ஈடுபாடு காட்டினர். ஆசியா, ஆபிரிக்கா, வட, தென் அமெரிக்காக்கள், அவுஸ்ரேலிய ஆசிய நாடுகள் யாவும் குடியேற்ற நாடுகளாக இருந்தன.

குடியேற்றவாத ஆட்சியாளர் தாம் கைப்பற்றிய நாடுகளில் ஆட்சியதிகாரத்தை நிலைபெறச் செய்வதுடன், தாய் நாட்டின் பொருளாதாரச் செழிப்புக்கு குடியேற்ற நாடுகளின் பௌதீக, மக்கள் வளங்களைப் பயன்படுத்தும் நோக்குடையராயினர். தமது ஆட்சிமுறையை அறிமுகம் செய்வதன் வாயிலாக, சுதேசமக்களை தமக்கு விசுவாசமுள்ளவர்களாக மாற்றுதல், குடியேற்ற நாடுகளின் முதனிலைப் பொருட்களைக் கொண்டு சென்று, அவற்றை முடிவுப் பொருளாக மாற்றி மீண்டும் விற்பனை செய்யும் சந்தைகளாக மாற்றுதல், கிறித்தவ சமயத்தைப் பரப்புதல் மற்றும் தமது நாட்டுமக்களில் ஒரு பகுதியினரை இந்நாடுகளில் குடியேற்றுதல் என்ற வகையில் தமது கொள்கைகளை விரிவுபடுத்திக் கொண்டனர். குடியேற்ற

நாடுகளின் மக்களுக்குக் கல்வியை வழங்கும் தேவை அவர்களிடம் முதன்மை பெற்றிருக்கவில்லை.

இலங்கையில் குடியேற்றவாத ஆட்சி ஏறக்குறைய 450 ஆண்டுகள் நீடித்திருந்தது. 1505 ஆண்டு தொடக்கம் போர்த்துக்கேயரும் 1658 இலிருந்து ஒல்லாந்தரும் 1796 இலிருந்து இலங்கை சுதந்திரமடையும் வரை பிரித்தானியரும் இடையறாது ஆதிக்கம் செலுத்தினர். இவர்களுடைய குறிக்கோள் வர்த்தக விருத்தியெனப் பொதுவாகக் காணப்பட்ட வேளையிலும், இலங்கையைப் பற்றி பிரித்தானியர் கொண்டிருந்த மதிப்பு சற்று வித்தியாசமாக அமைந்தது. உலகிலே பெறுமதிமிக்க குடியேற்ற நாடு இலங்கையென்றும், இது இந்தியப் பேரரசினைப் பாதுகாப்பதற்கும், இந்தியப் பிரதேசத்தில் மேன்மை மிக்க கடற்படையை வைத்திருப்பதற்கும் உதவும் என்றும் அவர்கள் அறிந்துகொண்டனர். ஏனைய கொள்கைகள் இவர்களுக்கும் ஏற்புடையதாக இருந்தன. குறிப்பாக இவர்களது கல்விக் கொள்கைகள் குடியேற்றவாத ஆட்சியை உறுதிப்படுத்தும் நோக்குடனேயே விரிவுபடுத்தப்பட்டன. குடியேற்றவாத ஆட்சியாளர்கள் அடக்குமுறைகளைப் பிரயோகித்தும், சுதேசிகளை வலுவிழக்கச் செய்தும் நீண்ட காலமாக இருந்து வந்த பௌத்த, இந்துக் கல்வி மரபுகளை முற்றாகப் புறக்கணித்தும் பிரித்தாளும் தந்திரத்தினடிப்படையில் சிறுபான்மையினங்களின் ஆதரவைப் பெற்றும் ஆட்சியைச் செலுத்துவதில் உற்சாகம் காட்டினர். எனவே ஐரோப்பிய நாடுகளில் வழங்கப்பட்ட பாட ஏற்பாடுகளின் மாறுபட்ட வடிவங்களை, இலங்கையில் வழங்க முற்பட்டார்கள். குடியேற்றவாத ஆட்சியாளரால் வகுத்துக் கொடுக்கப்பட்ட எந்தவொரு கல்விக் கொள்கையும் இலங்கைக்குப் பரந்த அளவில் நேரடி நன்மைகளைப் பெற்று கொடுக்கவில்லை எனக் கூறுவதும் பொருந்தும்.

இலங்கையில் குடியேற்றவாத ஆட்சியாளரின் கல்வி பின்வரும் அடிப்படைகளிலேயே இடம்பெற்று வந்துள்ளமையைக் காணக் கூடியதாக உள்ளது. கல்வியை சமயம் பரப்பும் ஒரு கருவியாகக் கையாண்டனர்; கல்விப் பொறுப்பை ஏற்க முன்வராது அதனை சமயகுழுக்களுக்கும்,

தனியாருக்கும் ஒப்படைத்தனர்; கல்வி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என விரும்பினர். கல்வியை ஆட்சியாளர் மொழியிலே வழங்க வேண்டும் என்பதில் ஊக்கம் காட்டினர். கல்வியை வழங்குவதில் சமூக வகுப்பு பேதங்களுக்கு இடமளித்தனர்; மற்றும் உயர் கல்வியை வழங்குவதில் தாமதப் போக்கினைக் காட்டி வந்தனர். இவ்வாறான அம்சங்களின் பாதிப்பே இன்றைய காலகட்டத்தின் பல்வேறு கல்விப் பிரச்சினைகளுக்கு அடிப்படையாக அமைந்துவிட்டது.

## கல்வி சமயம் பரப்பும் ஒரு கருவி

இலங்கைக்கு முதன்முதலாக வந்த போர்த்துக்கேயர் இங்கே பாடசாலைகளை நிறுவியதன் பிரதான நோக்கம் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதாகும். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபை ஆகிய இரு சபையினரும் சமயம் பரப்பும் நோக்கத்திற்காகவே வரவழைக்கப்பட்டனர். பின்னர் 1605இல், டொமினிக்கன் சபையினரும், 1606இல் அகஸ்தீனியன் சபையினரும் வருகை தந்தனர். போர்த்துக்கேயர் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசங்களில் இந்நான்கு பிரிவினரும் வெவ்வேறாக கோயிற்பற்றுப் பாடசாலைகளை நிறுவிக் கல்விப் பணியில் ஈடுபட்டனர். இயேசு சபையினர் கோட்டை இராச்சிய அரசனைச் சமயம் மாற்றும் முயற்சியில் வெற்றிகண்டமையால், மக்களையும் சமயம் மாற்றுவது இவர்களுக்கு இலகுவாக அமைந்தது. அத்துடன் அரச ஆதரவும், நன்கொடைகளும் கிடைத்தன. அதனால் சமயம் பரப்பும் நோக்கில் அவர்கள் வெற்றி கண்டார்கள்.

போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் கத்தோலிக்க மதம் பெற்றிருந்த செல்வாக்கினை ஒழித்து, பதிலாக புரட்டஸ்தாந்து சமயத்தைப் பரப்ப ஒல்லாந்தர் முயற்சி செய்தார்கள். இவர்களும் மக்களைச் சமயம் மாற்றும் நிறுவனமாகப் பாடசாலைகளையே பயன்படுத்தினர். தமது ஆட்சிக்குட்பட்ட கரையோர மாகாணங்களில் கோயிற்பற்றுப் பாடசாலைகளை அமைத்தனர். இப்பாடசாலைகளிலே மிகவும் ஒழுங்குறக் கல்வியை வழங்கும் ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இரு ஆட்சியாளரும் பொதுவாக ஆரம்பக் கல்வியை வழங்குவதிலேயே கூடிய ஆர்வங்காட்டினர். கோயிற்பற்றுப் பாடசாலைகளின் பாட ஏற்பாடும் சமயம், அறப்பண்புகள், வேதசார வினாவிடை, கிறித்தவப் பாடல்கள் போன்றவற்றுக்கு முக்கிய இடங்கொடுத்தது.

18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானியாவில் சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இம்மறுமலர்ச்சியின் தூண்டுதலுக்குள்ளான பிரித்தானியரும் தமது குடியேற்ற நாடுகளில் புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்ப உற்சாகம் பெற்றனர். இவர்களுடைய ஆட்சிக்காலத்தின் தொடக்கத்தில் இலங்கை முழுவதிலும் ஆட்சியதிகாரத்தைப் பரவச் செய்வதற்கு இருந்து வந்த எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தவும், மக்களைச் சமய மாற்றம் செய்வதற்கும் கல்வியினூடாக நடவடிக்கை மேற்கொள்வதே சாத்தியமாகும் என்ற கருத்தை ஆள்பதி பிரவுன்றிக் வழங்கியிருந்தார். இவர் கிறித்தவ மதத்தின் மீது கொண்டிருந்த அக்கறை காரணமாக இங்கிலாந்து அரசின் ஆதரவையும் நம்பிக்கையையும் பெற்று சமயத்தையும் கல்வியையும் பரப்பும் பல்வேறு சமயக் குழுக்களை இலங்கைக்கு வரவழைத்தார். இவரைத் தொடர்ந்து வந்த ஆள்பதிகளும் கல்வியை வழங்கும் சமயக் குழுக்களுக்கு ஆதரவை வழங்கிவந்தனர்.

கல்விப் பொறுப்பு முழுமையாகச் சமயக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. போர்த்துக்கேயர் எப்பொழுதும் இக்கொள்கையையே கடைப்பிடித்தனர்.

ஆயினும், ஒல்லாந்தர் அவ்வாறன்றிக் கல்வியை வழங்கும் பொறுப்பைக் கோயிற்பற்றுப் பாடசாலைகளுக்குக் கொடுத்திருந்தாலும் முழுக் கல்விப் பொறுப்பையும் சமயக் குழுக்களிடம் ஒப்படைக்கவில்லை.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில், கிழக்கிந்திய வர்த்தகக் கம்பெனியின் குறிக்கோள் வர்த்தக விரிவாக்கமாக இருந்ததால் அவர்களிடம் கல்வியை வழங்கும் நடவடிக்கைகளிலுள்ள ஈடுபாடு குன்றிக் காணப்பட்டது. மற்றும் குடியேற்ற நாட்டு மக்களுக்குக் கல்வியை வழங்கும் பொறுப்பு அரசாங்கத்தினுடையதல்ல என்ற கருத்தையும்

உடையவராயினர். காலப்போக்கில் இவர்களும் கல்வி நடவடிக்கைகளிலே அக்கறை கொள்ள வேண்டிய நிலைமைகள் அவர்கள் நலன் கருதி ஏற்படலாயிற்று.

இதனால், ஒல்லாந்தர் ஆரம்பித்து வைத்த கோயிற்பற்றுப் பாடசாலைகளுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டிய நிலைமை தோன்றியது. மற்றும் பிரித்தானியாவிலிருந்து வந்து சமயக் குழுக்களின் ஆதரவையும் நாட வேண்டிய நிலையுண்டாயிற்று. ஆட்சியாளர் விரும்பும் கல்விக் கொள்கைகளைச் செயற்படுத்தும் ஊடகமாக சமயக் குழுக்கள் பயன்பட்டன. குறிப்பாக அங்கிலிக்கன், பப்டிஸ்த்த, வெஸ்லியன், அமெரிக்க மிஷன் சமயக் குழுக்கள் சமயத்தையும் கல்வியையும் பரப்பும் பணியில் முக்கிய பங்கேற்றிருந்தன. அமெரிக்க மிஷன் குழுவினர் ஆற்றிய கல்விப் பணியை ஆள்பதி பாண்சும், பின்னர் கோல்புறூக் குழுவினரும் வெகுவாகப் பாராட்டியிருந்தனர். ஒரு காலகட்டத்தில் அரசாங்கப் பாடசாலைகளிலும் பார்க்க சமயக் குழுப் பாடசாலைகளே தொகையில் அதிகரித்தும் காணப்பட்டன. இத்தகைய நடைமுறைகள் எல்லாம் கல்வியை வழங்கும் பொறுப்பில் சமயக் குழுக்கள் பெற்றிருந்த செல்வாக்கினையே எடுத்தியம்புகின்றன.

## கல்வி நிறுவனங்கள் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருத்தல்

கல்வி எப்பொழுதும் அரசாங்கக் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும் என்பது குடியேற்றவாத ஆட்சியாளரின் கொள்கையாகும். ஆயினும், போர்த்துக்கேயர் ஏனைய இரு ஆட்சியாளர்களைப் போல் கல்விப் பொறுப்பை நேரடியாக ஏற்கவில்லை. ஆனால் ஆதரவை முழுமையாக வழங்கி வந்தார்கள்.

கல்வி நிறுவனங்கள் ஆட்சியாளரின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என ஒல்லாந்தர் விரும்பினார். ஆகவே இவாகளது ஆட்சிக் காலத்தில் முதன்முறையாகக் கல்விமுறையில் மத்தியப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு முறை தோன்றிற்று எனலாம். 1663இல் "ஸ்கொலாக்கர் கமிசன்" என அழைக்கப்படும் பாடசாலைச் சபையை

நிறுவி, அதன் துணைகொண்டு கிராமப்புறக் கோயிற்பற்றுப் பாடசாலைகளை நிருவகித்தும், மேற்பார்வை செய்தும் வந்தனர். இச்சபை கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன. அதன் தலைமை அலுவலகம் கொழும்பில் இருந்தது.

கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நடவடிக்கை திட்டமிட்ட வகையில் இடம்பெற வேண்டுமானால், மாணவர்களின் பாடசாலை வருகை, கற்பித்தல் முறை, ஆசிரியர் ஆற்றும் பணி என்பன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மற்றும் கோயிற்பற்றுப் பாடசாலைக் கல்வி ஒல்லாந்தரால் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. ஆசிரியரும் பாடசாலைக் கற்பித்தலுக்கு அப்பால் ஆட்சியாளரின் முகவராக செயற்பட்டு, பல சமூகக் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டார். அவருடைய கருமங்களைப் பரிசோதிக்கவும் பாடசாலைச் சபை பெரிதும் உதவியது.

டச்சுக்காரரின் பாடசாலை நிருவாக முறையில் பிரித்தானியர் கூடிய அக்கறையுடையவர்களாக ஆரம்பத்தில் இருக்கவில்லை. ஆள்பதி நோர்த் காலத்தில் இங்கிலாந்திலிருந்து ஜேம்ஸ் கோர்டினர் என்ற மதத் தலைவர் வரவழைக்கப்பட்டார். இவரிடம் கல்விப் பொறுப்பு வழங்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் ஆங்கிலேயர் கல்வியைக் கட்டுப்படுத்தி நிருவகிக்கும் மேலதிகாரியாக ஜேம்ஸ் கோர்டினர் கடமையாற்றினார்.

1818இல் ஆள்பதி பிரவுன்றிக் நடவடிக்கை எடுக்கும் வரை அரசாங்க சமயக் குழுப் பாடசாலைகளை நிருவகிக்கவென, மேற்பார்வை செய்யவென சபை எதுவும் நிறுவப்படவில்லை. ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட கோயிற்பற்றுப் பாடசாலைகளும், அவற்றில் பணிபுரிந்த ஆசிரியர்களும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தனர். பின்னர் பிரவுன்றிக்கின் முயற்சியால் அத்தியட்சகர் குரு நிறுவனம் அமைக்கப்பட்டு, நாட்டின் அரசாங்கப் பாடசாலைகளை மேற்பார்வை செய்யும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இலங்கையில் மேலைநாட்டுக் கல்விமுறை பரவ இந்நிறுவனம் காரணமாக அமைந்தது.

1832 ஆம் ஆண்டு வரையில் இலங்கையிலே அரசாங்கப் பாடசாலைகள், சமயக் குழுப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் என மூவகைப் பாடசாலைகள் இயங்கி வந்தன. இப்பாடசாலைகளில் கட்டுப்பாடும், மேற்பார்வையும் இல்லாத காரணத்தினால் அவை வெற்றிகரமாக இயங்க முடியவில்லை எனக் கோல்புறூக் குழுவினர் அறிக்கை எடுத்துக்காட்டியது. கல்விக் கட்டுப்பாட்டைப் பேண மத்திய அதிகார பீடம் ஒன்று 'நிறுவப்பட வேண்டும்' என்று கோல்புறூக் விதந்துரைத்ததன் பேரில் 1834 இல் பாடசாலை ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை ஆணைக் குழு அரசாங்கத்துக்கு ஆலோசனை கூறும் குழுவாகவும், அரசாங்கப் பாடசாலைகளையும், ஆசிரியர்களையும் மேற்பார்வை செய்யும் குழுவாகவும் பணியாற்றிவந்தது.

பாடசாலை ஆணைக் குழுவிலே அத்தியட்ச குரு, மாவட்ட அரசாங்க அதிபர்கள், சிவில் சேவை உத்தியோகத்தர்கள் சிலர், நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் சிலர் அங்கத்துவம் வகித்தனர். இந்த ஆணைக் குழு நியமிக்கப்பட்ட பின்னர், சமயக் குழுக்களுக்கு இருந்துவந்த அதிகாரம் படிப்படியாக நீங்கியது. ஆயினும், பாடசாலை ஆணைக் குழு நல்லமுறையில் நீண்ட காலம் இயங்கவில்லை.

மீண்டும் 1867 இல் இலங்கைக்கு வந்த மோர்கன் ஆணைக்குழுவினர், தமது அறிக்கையிலே மத்தியப் படுத்தப்பட்ட பாடசாலை நிருவாக முறையின் அவசியத்தை எடுத்துக்காட்டியிருந்தார்கள். இவர்களுடைய சிபாரிசின் பேரில் 1869இல் பொதுப் போதனைத் திணைக்களம் நிறுவப்பட்டது. பொதுப் போதனைத் திணைக்களத்துக்கு பணிப்பாளரும், பணிப்பாளருக்கு உதவியாக பொதுப் பரிசோதகர்களும் துணைப் பரிசோதகர்களும் நியமிக்கப்பட்டனர்.

பொதுப் போதனைத் திணைக்களத்தின் தோற்றம் இலங்கைக் கல்வி நிருவாக வளர்ச்சியில் முக்கியமான விடயமாகக் கொள்ளப்படுகின்றது. இலங்கையின் கல்வி நிருவாக வரலாற்றில் ஏறக்குறைய 100 ஆண்டுகளாக இவ்வமைப்பின் செல்வாக்கு நீடித்திருந்தது. மற்றும் தேசிய பாடசாலைகளின் தோற்றத்துக்கும் வழியமைத்து உதவியது. மேலும் அரசாங்கம் கல்விச் செயற்பாடுகளில் நேரடியாக

ஈடுபடுவதற்கும், சமயச் சார்பற்ற பாடசாலைகளின் தோற்றத்துக்கும் இந்த அமைப்பு இடமளித்தமை இன்னொரு முக்கிய விடயமாகும்.

## போதனாமொழி ஆட்சியாளர் மொழி

போதனாமொழி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்வதில் ஆட்சியாளர் தேவைகளே முன்னின்றன. பொதுவாகப் போதனா மொழி ஆட்சியாளர் மொழியாக இருக்க வேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாக இருந்துள்ளனர். அவ்வாறன்றி குடியேற்றவாத ஆட்சியாளரின் பாடசாலைகளில் சுதேச மொழிகளுக்கு இடமளிக்கப்பட்டிருக் குமாயின் அதுவும் ஆட்சியாளர் நன்மை கருதி அமைந்தனவேயொழிய சுதேச மக்களின் நன்மைக்காகவன்று.

போர்த்துக்கேயர் தாய்மொழியிலே கல்வியை வழங்க முற்பட்டனர். இதனுடைய அடிப்படை நோக்கம் சமயம் பரப்பும் நடவடிக்கைகளை இலகுபடுத்துவதாகும். இயேசு சபையினர் அமைத்த ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளில் போதனா மொழி தாய்மொழியாக இருக்கவேண்டுமென விரும்பினர். அதற்கு ஏற்றவாறு பாட ஏற்பாடுகளையும் ஒழுங்கு செய்திருந்தனர். போர்த்துக்கேய அதிகாரிகளினதும், சிங்களப் பிரதானியர்களதும் பிள்ளைகளுக்கு போர்த்துக்கேய மொழியை கற்பிக்க ஆர்வங் காட்டினர். மேலும், குருமாராக வரவிருப்போருக்கான வேதநூற் கல்வியை இலத்தீன் மொழியில் வழங்கினர்.

அவ்வாறே, ஒல்லாந்தரும் ஆரம்பக் கல்வியைத் தாய்மொழியில் வழங்க முடிவு செய்தனர். கிறித்தவ சமயப் பரவலுக்கான எதிர்ப்புகளைக் கட்டுப்படுத்தி, சமுதாயத் தொடர்புகளை வலிமைப்படுத்த தாய்மொழியில் கல்வியூட்டுதல் சாதகமாக இருக்கும் எனக் கண்டனர். பிள்ளைகளைப் பாடசாலைகளுக்குக் கட்டாயம் வரவழைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தேவையை நிறைவு செய்வதிலும் ஒல்லாந்தருடைய கட்டாயக் கல்விக் கொள்கையிலும் பார்க்க கல்வி மொழிக் கொள்கையே வெற்றியீட்டிக் கொடுத்தது எனலாம்.

ஒல்லாந்தரின் உயர் கல்வி நிறுவனமான செமினரி, ஒல்லாந்து மொழி, கிரேக்கம், எபிரேயம் போன்ற மொழிகளைக் கற்பித்தது. எதிர்காலத்தில் மத போதகராகவும், ஆசிரியராகவும் வரவிருப்போருக்கான கல்வியை வழங்குவது செமினரிக் கல்வியின் அடிப்படையாகும். ஆதலினால் ஐரோப்பிய மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். மற்றும் செமினரிக் கல்விப் பாட ஏற்பாடுகள் இலங்கை மக்களையும், அவர்களுடைய கலாசாரப் பின்னணிகளையும் கருத்திற்கொண்டு அமைக்கப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது.

மேற்கூறிய இரு ஆட்சியாளரின் போதனா மொழிக் கொள்கையிலிருந்து ஆங்கிலேயருடைய கொள்கை முழுவதாக வேறுபட்டிருக்கக் காணலாம். தங்களுடைய ஆட்சிக்குத் தேவையான இடைநிலை உத்தியோகத்தர்களை இலங்கையிலிருந்து பெற்றுக்கொள்ளல், ஆங்கிலக் கல்வி கற்ற புதிய சமூக வகுப்பினரைத் தோற்றுவிப்பது ஆகியவற்றினூடாக எப்பொழுதும் ஆட்சிக்குப் பக்கபலமாக இருக்கக் கூடிய மக்களை உருவாக்கலாம் என்னும் கருத்துடையவர்கள். இவற்றின் காரணமாகவே தாம் ஊக்கமும் உதவியும் அளித்துவந்த சமயக் குழுப் பாடசாலைகளில் ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்தில் பல நிருவாகச் சிக்கல்கள் இருந்தமையால், ஏற்கனவே ஒல்லாந்தரால் நிறுவப்பட்டிருந்த கோயிற்பற்றுப் பாடசாலைகளின் செயற்பாடுகளில் தளர்வு உண்டானது. இருப்பினும் ஆள்பதி நோர்த்தினால் இப்பாடசாலைகளில் ஒரு பகுதி திருத்தியமைக்கப்பட வேண்டிய தேவை இருந்தது. ஆயினும் கோயிற்பற்றுப் பாடசாலைகள் வழங்கிய கல்வியில் மேம்பாடு இருக்கவேண்டுமென்பதால் ஆரம்பப் பாடசாலை களையும் மேனிலைப் பாடசாலைகளையும் அமைக்க முற்பட்டார். இப்பாடசாலைகளுக்குரிய மொழி ஆங்கில மொழியாகவே இருந்தது. இக்கட்டத்தில் தாய்மொழிக் கல்வி அதன் செல்வாக்கை முற்றாக இழந்துவிடவில்லையெனினும்,

ஆங்கில மொழிக்குரிய செல்வாக்கு 1809 ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியது.

பிரவுன்றிக் ஆள்பதியாக இருந்த காலத்தில், இலங்கையின் கல்வியில் இங்கிலாந்து அரசாங்கமும் ஊக்கங் காட்டியது. பல்வேறு சமயக்குழுக்கள் இலங்கைக்கு வர அனுமதி வழங்கினர். இச்சமயக் குழுக்கள் மூலம் அமைக்கப்பட்ட பாடசாலைகளின் உதவியுடன் பிரவுன்றிக் ஆங்கிலக் கல்வியைப் பரப்ப முயற்சி செய்தார். இவருடைய காலத்தில் ஆங்கிலக் கல்வியை வழங்கும் நிறுவனமாக அக்கடமி மட்டுமே செயற்பட்டதால், நாடெங்கிலும் அரச பணிகளை ஆங்கிலத்தில் மேற்கொள்வதற்கு வேண்டிய ஆளணியை உருவாக்கும் தேவை ஏற்பட்டது. ஆகவே ஆங்கிலக் கல்வியை வழங்குவது இன்றியமையாததாயிற்று.

இதன் பின்னர், 1831 இல் கோல்புறூக் குழுவினர் சமர்ப்பித்த அறிக்கையும் போதனா மொழிக் கொள்கையில் ஆங்கிலத்துக்கே முதன்மை கொடுத்திருந்தது. இவர்கள் வருகை தந்த காலத்தில் நடைமுறையிலிருந்த கோயிற்பற்றுப் பாடசாலைகளின் திறன் குன்றிக் காணப்படுவதற்கு அவை சுயமொழிக்கல்வியில் ஈடுபட்டமையே காரணம் என்றனர். அவை பெயரளவிலேயே பாடசாலைகளாக உள்ளன; சிறந்த கல்வியைப் பெறுவதற்காகச் சமயக் குழுக்களின் பாடசாலைகளையே மக்கள் நாடுகின்றனர் என்றும் மதிப்பீடு செய்தனர்.

இதனால், கோல்புறூக்கின் அறிக்கை ஆங்கிலக் கல்வியை வலியுறுத்தி, குறிப்பாக ஆசிரியர்கள் ஆங்கில அறிவுடையவராக இருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டது. மற்றும் தேசிய கல்வி அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்குப் போதனா மொழி ஆங்கிலமாக இருக்க வேண்டும். செமினரிக் கல்வி ஆங்கிலத்தில் வழங்கப்பட வேண்டும்; சிங்கள, தமிழ் மொழிப் பாடசாலைகளிலும் ஆங்கில மொழிப் போதனை நடைபெற வேண்டும் என்றவாறு குறிப்பிட்டிருந்தனர். இந்த வகையில், சமயக் குழுப்பாடசாலைகள் குறிப்பாக அமெரிக்க மிஷன் பாடசாலைகள், கோல்புறூக் குழுவினரின் நன்மதிப்பைப் பெற்றன. அமெரிக்க மிஷன் பாடசாலைகள் போதனா மொழியாக ஆங்கிலத்தைக் கொண்டிருந்தன.

காலப்போக்கில் இதனைப் பின்பற்றி சகல சமயக் குழுப் பாடசாலைகளும் ஆங்கிலக் கல்வியை வழங்க அக்கறை எடுத்தன. மற்றும் கட்டணம் அறவிட்டு ஆங்கிலக் கல்வியை வழங்கும் நோக்குடன் பல தனியார் பாடசாலைகள் உருவாகின. இக்கட்டத்தில் ஏனைய பாடசாலைகளிலும் பார்க்க, தனியார் பாடசாலைகளின் தொகை மிக விரைவாக அதிகரிக்கத் தொடங்கியது. இது பொதுமக்கள் ஆங்கிலக் கல்வியில் காட்டிய அக்கறைக்குச் சான்றாக அமைந்தது.

போதனா மொழி ஆங்கிலம் என்ற கோல்புறூக்கின் கொள்கை மிகச் சிறுதொகையினரையே கல்வி வாய்ப்புகளை அனுபவிக்க வழிவகுத்துக் கொடுத்தது. தேசிய மொழிகளை ஒதுக்கிவிடும் போக்கினை எடுத்துக்காட்டியது. சுயமொழிகளில் கற்றுவந்த திறமை மிக்க மாணவர்கள் மேலும் கல்வியைத் தொடர்வதற்கான சந்தர்ப்பங்களைக் கட்டுப்படுத்தியது. உயர் சமூக வகுப்பினருக்கு ஆங்கிலக் கல்வி, ஏனைய பொதுமக்களுக்குத் தரத்தில் குறைந்த சுயமொழிக் கல்வி என்ற இரட்டைத் தன்மைக்கு இட்டுச் சென்றது.

மீண்டும், 1867 இல் இலங்கை வந்த மோர்கன் குழுவினர் ஆங்கில மொழிக் கல்விக் கொள்கையின் விளைவுகளை ஆராய்ந்து, அதன் பின்னர் சுயமொழிகளிலும் கல்வி வழங்கப்பட வேண்டும்; சுயமொழிக் கல்வியைப் பெற்றவர் தொகை அதிகமாக இருந்தமையைக் கருத்திற்கொண்டு சுயமொழிப் பாடசாலைகளின் தொகையையும், கல்வி நடவடிக்கைகளையும் அரசாங்கம் விரிவுபடுத்த வேண்டும் எனவும் குறிப்பிட்டனர். மற்றும் ஆரம்பக் கல்வி தாய்மொழியிலேயே இடம்பெற வேண்டும். அதற்கு அப்பால் ஆங்கிலம் போதனா மொழியாக இருக்கலாம் எனச் சுட்டிக்காட்டினர். இத்தகைய விதப்புரைகளின் பயனாகவே இலங்கையில் ஆங்கிலப் பாடசாலைகள், இருமொழிப் பாடசாலைகள், சுயமொழிப் பாடசாலைகள் என்றவாறும் பாடசாலைகள் இயங்கிவந்தன.

போதனா மொழிக் கொள்கை ஏற்படுத்திய பாதிப்புகளின் விளைவாகவே பிற்காலத்தில் தாய்மொழிக் கல்விக்குப் பரந்த அளவில் இடமளிக்கப்பட்டது. இதன் பயனாக இன்று பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை தாய்மொழிக் கல்வி

இடம் பெறுகின்றது. ஆயினும் ஆங்கில மொழிச் செல்வாக்கு அதன் முக்கியத்துவத்தை இன்னமும் பேணி வருகின்றது.

## உயர் கல்வியை வழங்குவதில் ஏற்பட்ட காலதாமதம்

உயர் கல்வியை வழங்குவதில் குடியேற்றவாத ஆட்சியாளருக்கு அதிகம் அக்கறையிருக்கவில்லை. ஆரம்பத்தில் உயர்கல்வி அவசியமற்றதொன்றாகவும் கருதப்பட்டது. இலங்கையிலே ஒரு பல்கலைக்கழகத்தை அமைக்க வேண்டும் என 19ஆம் நூற்றாண்டின் மத்தியகாலப் பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட வேண்டுகோள் நிறைவுபெறுவதற்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலம் எடுத்தமை இதற்குச் சான்றாக அமைகின்றது.

ஒல்லாந்தர் காலத்தில் வழங்கப்பட்ட உயர் கல்வி அடிப்படைகள் சமயக் கல்வியுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. குறிப்பாகச் செமினரிக் கல்வி உயர் கல்வியை ஒத்திருந்தது என்றாலும் பாட ஏற்பாடுகள் குறிப்பிட்ட வரையறைக்குள் நின்றன. கீழைத் தேயப் பண்பாட்டை அனுசரித்துச் செல்லவில்லை. செமினரியில் சிறந்து விளங்கிய மாணவர்கள் ஒல்லாந்தில் உள்ள லெய்டன் பல்கலைக்கழகத்துக்கு உயர் கல்விக்காக அனுப்பப்பட்டனர். இத்தகைய வாய்ப்பு 1744 இல் இலங்கையிலிருந்து இருவருக்கு மட்டும் கிடைத்தது. அவர்களுள்ளும் ஒருவர் ஐரோப்பியராக இருந்தார்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் உயர்கல்வியைக் கருத்திற்கொண்டு நிறுவப்பட்ட 'அக்கடமி', ஏனைய பாடசாலைகளிலிருந்தும் உயர்தரமான கல்வியை வழங்கும் என்பதை எடுத்துக்காட்டவே முற்பட்டது. அக்கடமியின் ஒரு பகுதியாக இராணிக் கல்லூரி அமைந்தது. இராணிக் கல்லூரி கல்கத்தாப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த வகையில், அதன் புகுமுகப் பரீட்சைக்கு மாணவர்களை ஆயத்தஞ் செய்யும் பணியைச் செய்து வந்தது. இக்காலகட்டத்தில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சி பெற்றிருந்தது. அத்தகைய வாய்ப்பு இலங்கையருக்குக் கிடைக்கவில்லை.

1870 ஆம் ஆண்டில் மருத்துவம், சட்டம் ஆகிய துறைகளைக் கொண்ட கல்லூரிநிலைக் கல்வியும் 1921 இல் பல்கலைக்கழக கல்லூரியும் உருவாக்கம் பெற்றது. ஆயினும், அப்பல்கலைக் கழகக் கல்லூரி தனிப்பண்புடன் விளங்கவில்லை. இலண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்தவாறு பரீட்சைகளுக்கு ஆயத்தஞ்செய்யும் பணிகளையே இது மேற்கொண்டுவந்தது. இக்காலத்தில் பல்கலைக்கழகக் கல்லூரியின் இன்றியமையாமை பற்றித் தொடர்ந்து வந்த வலியுறுத்தல் களின் பேரில் இப்பல்கலைக்கழகக் கல்லூரி விரிவாக்கம் செய்யப்பட்டதே ஒழிய, முழுமையான பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க அவர்கள் முன்வரவில்லை. எத்தனையோ குழுக்களின் அவற்றின் விதப்புரைகளும், கருத்து முரண்பாடுகளும் இடம்பெற்று ஓய்ந்த பின் 1942 இல் முழுமையான பல்கலைக்கழகத்தை அமைத்தார்கள். அதன் பின்னரும், பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கிப் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சியடைந்தது.

மேலே எடுத்துக்காட்டிய வகையில், இலங்கையின் கல்வி வளர்ச்சியில் குடியேற்றவாத ஆட்சியாளர்களின் கல்விக் கொள்கை பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தின. சமூக வகுப்பு பேதங்களை உருவாக்கியது; நகரங்கள், கிராமங்கள் என்ற அடிப்படையில் கல்வி நிறுவனங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் மொழியை முதன்மையாகக்கொண்டு வேறுபடுத்தியது. கல்வி வாய்ப்புகளில் பிரதேச வேறுபாடுகளைத் தோற்றுவிக்க இடமளித்தது.

இலங்கை சுதந்திரமடைந்த பின் உடனடியாகச் சில சமூக, பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கியமைக்கும், அவை இன்றுவரை நீடித்து நிலைபெறுவதற்கும் குடியேற்றவாதக் கல்விக் கொள்கைகள் அடிப்படையாக அமைந்தன. சுதந்திர இலங்கையின் கல்விக் கொள்கைகளின் அடிப்படைகளில் தேசிய உணர்வும் தேசிய நோக்கும் முதன்மை பெறத் தொடங்கின. இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியை மையமாகக் கொண்ட நடவடிக்கைகளைக் கல்வியினூடாகவே பூர்த்தி செய்ய வேண்டிய அவசியமும் எழுந்தது. கன்னங்கரா குழுவினரின் விசேட கல்வி ஆணைக்குழு தொடக்கம் 1981 ஆம் ஆண்டில்

கல்விச் சீர்திருத்தத்துக்கான ஆலோசனைகள் வரையில் சமர்ப்பிக்கப்பட்ட வெள்ளை அறிக்கைகளும், ஏனைய விசேட அறிக்கைகளும் விதந்துரைத்த அம்சங்கள் இவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்துவதன் பாற்பட்டவையே.

இலங்கையில் தேசிய பாடசாலை அமைப்பு முறையொன்றைத் தோற்றுவிப்பதன் மூலம் பொதுக் கல்வியிலும் உயர் கல்வியிலும் சம சந்தர்ப்பத்தையும் சம வாய்ப்பையும் ஏற்படுத்துவதற்கும், நவீன அறிவுலகு, வேலையுலகு, சமூக பொருளாதாரத் தேவைகள் என்பவற்றை நோக்கிச் செல்லத் தகுந்த வகையில் பாடசாலை அமைப்பு, பாட ஏற்பாட்டு மாற்றங்கள், பாடசாலை நிருவாக முகாமைத்துவச் சீர்திருத்தங்கள் போன்றவற்றிலும் அதிக கவனஞ் செலுத்த வேண்டிய கட்டாய நிலைக்கும் எம்மை உட்படுத்தியுள்ளது.

# 4

## இலங்கையில் பாடசாலை அமைப்பு முறை மாற்றங்கள்

இலங்கை வளம் மிக்க ஒரு கலாசார பாரம்பரியப் பின்னணியைக் கொண்ட நாடு. இலங்கைக்கு ஐரோப்பியக் குடியேற்றவாத ஆட்சியாளரின் வருகைக்கு முன்னர், இந்து, பௌத்தக் கல்விமரபு கல்வி முறை பரவலாக வளர்ச்சியடைந்திருந்தது. குடியேற்றவாத ஆட்சியாளர்கள், தமது கொள்கைகளுக்கு ஏற்பப் புதிய கல்வி நிறுவனங்களைத் தோற்றுவித்தபொழுது புராதன கல்வி மரபுகளைக் கைவிடத் தொடங்கினார்கள். போர்த்துக்கேயரும், அவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரரும் புதிய கல்வி மரபுகளை ஆரம்பித்துவைத்தார்களாயினும், இன்றைய பாடசாலை அமைப்புக்கான அடிப்படைகளை வகுத்துக் கொடுத்தவர்கள் பிரித்தானியரே.

பாடசாலை பாரிய சமூக அமைப்பின் ஓர் உப தொகுதியென அழைக்கப்படுகின்றது. இது கல்வியின் நோக்கங்களையும், சமூக எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யும் நிறுவனமாகும். நாட்டின் சமூக பொருளாதாரப் பின்னணி, அரசாங்கக் கொள்கைகள், எதிர்காலத் தேவைகள் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டு பாட ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன. பொதுவான கல்விக் கோட்பாடுகளுடன் முரண்படா வகையில் பாட ஏற்பாடுகளை நிறைவு செய்து கொடுக்கும் பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு.

**பிரித்தானியர் ஆட்சிக் காலக் கல்வியின் ஆரம்ப கட்டம்:**

பிரித்தானியருடைய பாடசாலை அமைப்பு முறையில் 1939 ஆம் ஆண்டு வரையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லையெனக் கூறலாம். ஆயினும், பாடசாலை முறையில் காணப்பட்ட இரட்டைத் தன்மை குறிப்பிடக் கூடியவொன்றாக இருந்தது. உயர் வகுப்பினருடைய பாடசாலைகள், பெரும்பான்மை பிரித்தானியாவில் இருந்த செல்வந்தர் பாடசாலைகளின் அமைப்பினை ஒத்தனவாக அமைக்கப்பட்டதுடன், அப்பாடசாலைகள் ஆரம்ப வகுப்புகள் தொடக்கம் கல்லூரி நிலை வரை ஆங்கிலத்தில் கல்வியை வழங்கிவந்தன. இரண்டாவது வகைப் பாடசாலைகள் சுதேச மொழிகளில் கல்வியை வழங்கின. மொழியடிப்படை வேறுபாடுகள் காரணமாகச் சுதேச மொழிப் பாடசாலைகள் உயர் வகுப்பினருடைய பாடசாலைகளைப் போல வளர்ச்சியடைய முடியவில்லை.

மற்றும் உயர் சமூக வகுப்பினரின் பாடசாலைகளுக்கு அரசாங்கம், மதக் குழுக்கள், போதிய உதவி நன்கொடைகளை வழங்கி ஊக்குவித்தனர். மறுபுறத்தில் சுயமொழிப் பாட சாலைகளுக்கு அத்தகைய ஆதரவு கிடைக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் இலங்கையின் இந்து, பௌத்த நிறுவனங்களும் தமது முன்னை மரபு முறைகளிலிருந்து விலகி புதிய மாற்றங்களுடன் கூடிய பாடசாலைகளை நிறுவி, அரசாங்க உதவி நன்கொடைகளை எதிர்பார்த்தன. இவ் எதிர்பார்ப்புகளின் விளைவாக, அரசாங்கப் பாடசாலைகள், பௌத்த பாடசாலைகள், இந்துப் பாடசாலைகள் கத்தோலிக்கப் பாட சாலைகள், கிறித்தவப் பாடசாலைகள் என்ற வகையில் பாடசாலைகள் பல தோன்றலாயின.

1880களில் ஆங்கிலப் பாடசாலைகள் கல்விவசதிகளை ஆங்கில மொழியில் மேலும் விரிவுபடுத்தியமையால், அவர்கள் கல்வியில் மேலும் முன்னேறுவதற்கு வழி கோலப்பட்டது. சுயமொழிப் பாடசாலைகளில் கல்வி பயின்றோர் சில வகையான திறன்களை மட்டும் பெற்று வர்த்தக நிலையங்களிலும், சிறுபணிகளிலும் ஈடுபட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

இக்காலத்திலே நடைமுறையிலிருந்த பாடசாலைகளின் அமைப்பை மூன்று வகையினவாக இனங்காண முடிகிறது. அவையாவன, ஆங்கிலப் பாடசாலைகள். இரு மொழிப் பாடசாலைகள், சுயமொழிப் பாடசாலைகள் இரு மொழிப் பாடசாலைகளில் சிங்களமும் ஆங்கிலமும் அல்லது தமிழும் ஆங்கிலமும் போதனா மொழிகளாக இருந்தன. சுயமொழிப் பாடசாலைகளின் போதனா மொழி தனிச்சிங்களமாக அல்லது தனித் தமிழாக இருந்தது.

இக்காலப் பகுதியில் ஆங்கில மொழிப் பாடசாலைகளில் 10.5 சதவீதத்தினரும், இருமொழிப் பாடசாலைகளில் 2.6 சதவீதத்தினரும், சுயமொழிப் பாடசாலைகளில் 86.9 சதவீதத்தினரும் கல்வியைப் பெற்றனர்.

கல்விமட்டத்திற்கு ஏற்ப, மேற்கூறிய பாடசாலைகளை, ஆரம்பப் பாடசாலைகள், கனிட்ட இடைநிலைப் பாட சாலைகள், சிரேட்ட இடைநிலைப் பாடசாலைகள், கல்லூரி நிலைப் பாடசாலைகள் என நான்காகப் பகுத்திருந்தார்கள். இவற்றில் மாணவர்களின் கல்விக் காலமும் முறையே 6 வருடங்கள், 9 வருடங்கள், 11 அல்லது 12 வருடங்களாக இருந்தன. சிரேட்ட இடைநிலைப் பாடசாலைகள் ஆங்கில மொழி மூலம் மாணவர்களைக் கேம்பிரிட்ஜ் அல்லது இலண்டன் "மற்றிக்குலேஷன்" பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்தன. ஏனைய பாடசாலைகள் சிங்களம் அல்லது தமிழ் மொழி மூலம் உள்ளூர்ப் பரீட்சைகளுக்கு ஆயத்தஞ் செய்தன. இந்த நிலை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படலாயிற்று.

1931 ஆம் ஆண்டு, டொனமூர் அரசியல் யாப்பு அறிமுகமாயிற்று. இந்த யாப்பினப் படையில் கல்வியும் அரசாங்கத்தின் முக்கிய பொறுப்புகளுள் ஒன்றாக உள்ளடக்கப்பட்டது. சர்வசன வாக்குரிமை இலங்கையருக்குக் கிடைத்தமையால், அது கல்வியிலும் பாரிய மாற்றங்களுக்கு அடிகோலியது.

தேசிய நலன்களில் அக்கறை கொண்டோர் இலங்கையில் இதுவரை காலமும் நிலவி வந்த கல்வியின் இரட்டைத் தன்மையையும் சமத்துவமின்மையையும் கண்டித்தனர். பாடசாலைகளை நிறுவுவதிலே இட பிரதேச வேறுபாடுகள்

இருந்தன. உயர்தரமான வசதிகளைக் கொண்ட பாடசாலைகள் பெருமளவுக்கு பிரதான நகரங்களைச் சார்ந்து அமைக்கப்பட்டன. இவை பிரித்தானிய ஆட்சியாளருக்கு எடுத்துக்காட்டப்பட்டதனால் 1939 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்கக் கல்விச் சட்டத்தை அரசாங்க சபை நிறைவேற்றிக் கொண்டது. இலங்கையில் தொடர்ந்து நிலவிய மாற்றங்களுக்கு இச்சட்டம் அடிப்படையாக விளங்கியது.

## மத்திய பாடசாலைகளின் தோற்றம்

இலங்கையின் பாடசாலை அமைப்பு முறை வரலாற்றில் மத்திய பாடசாலைகளின் தோற்றம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. கிராமப்புறங்களிலே மத்திய பாடசாலைகளை நிறுவுவதன் மூலம் நாடளாவிய முறையில் சிறந்த கல்விமான்களை உருவாக்கலாம் என்ற கருத்தில் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. சமூக வகுப்புகளினடிப்படையில் கல்வியில் பின்தங்கியவர்களுக்குக் கல்வியில் சம சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வழியாகக் கல்வியைச் சனநாயகப் படுத்துவது பற்றிய நோக்கும் மத்திய பாடசாலைகளுடன் இணைந்த வகையில் விரிவுபடுத்தப்பட்டது. ஆகவே இலவசக் கல்வியைத் தாய்மொழியில் வழங்க வேண்டும் என்றும், இலவச உணவு, இலவச பாடநூல் விநியோகம் பற்றிய விதந்துரைகளும் செய்யப்படலாயின.

மத்திய பாடசாலைகள் உள்ளூர் சூழலுக்கு ஏற்ப மாணவர்களுக்குக் கல்வியூட்ட வேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டன. ஆரம்பக் கல்வியை நிறைவு செய்தபின், இடைநிலைக் கல்விக்கு அல்லது பின்னாரம்பக் கல்விக்கு நகரங்களை நோக்கிச் செல்லவிருப்போருக்கு, அவர்கள் வாழும் பிரதேசங்களிலேயே சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமாயின் மத்திய பாடசாலைகள் அமைக்கப்படுவது இன்றியமையாததாயிற்று. மத்திய பாட சாலைகள் நூற்கல்விக்கும், செயன்முறைக் கல்விக்கும் இடமளித்தன; கிராமப்புற மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்களையும் வழங்கி ஊக்குவித்தது; இவற்றை விடுதிகளுடன் கூடியனவாக அமைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மத்திய பாடசாலைகளின் சேவை மக்களால் பெரிதும் மதிக்கப்படலாயிற்று. காலப்போக்கில்

இப்பாடசாலைகளும் நூற்கல்விக்குக் கூடிய முக்கியத்துவமளிக்க முனைந்தமையால் தொழிற் பயிற்சிக் கல்வியைப் படிப்படியாகக் குறைத்துக்கொண்டன. ஆயினும், இக்காலகட்டத்தில் கிராமப்புற மாணவர்களுக்கு இடைநிலைக் கல்வியை வழங்குவதில் முக்கிய பங்கினை ஏற்றுக்கொண்டதன் காரணமாக, சமூகப் பெயர்ச்சியை ஏற்படுத்தும் முதலாவது நிறுவனமாக இவை விளங்கின.

## விசேட கல்வி ஆணைக் குழுவின் விதப்புரையும் பாடசாலையமைப்பும்

இலங்கைக் கல்வியமைப்பில் மாற்றங்களையேற்படுத்துதல் என்னும் நோக்கில், ஓர் ஆணைக் குழு அமைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, 1943 இல் கன்னங்கரா அவர்களின் தலைமையில் விசேட கல்வி ஆணைக் குழு அமைக்கப்பட்டது. கல்வியில் சம சந்தர்ப்பத்தை உறுதிப்படுத்துதல், பாடசாலைக் கல்வியிலிருந்து விலகிச் செல்லும் மாணவர் தொகையைக் கட்டுப்படுத்துதல், கட்டணம் அறவிடப்படும் முறையை ஒழித்தலும் அதற்குப் பதிலாக இலவசக் கல்வியை அறிமுகம் செய்தலும் முக்கிய நோக்கங்களாக இருந்தன.

இக்காலத்தில் பாடசாலைகளின் மீதான கட்டுப்பாடு பல்வேறு குழுக்களினால், சிறப்பாக மதக் குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டன. இதனை ஒழித்து தேசிய பாடசாலை முறையொன்றை நிறுவ முயற்சித்தனர். மற்றும் பாட ஏற்பாட்டு மாற்றங்களினூடாகக் கல்வியின் பண்புசார் விருத்தியை மேம்படுத்துவதற்குப் பாடசாலை அமைப்பிலும் மாற்றங்களைக் கொண்டு வருதல் அவசியமெனக் கருதினர்.

முன்னைய பாடசாலை அமைப்பு முறையில் காணப்பட்ட சில முக்கிய குறைபாடுகளைக் கன்னங்கரா எடுத்துக்காட்டியிருந்தார். குறிப்பாக, ஆரம்பப் பின்னிலைக் கல்விக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படவிருந்த முறையும் அதற்கு வகுத்தொதுக்கப்பட்ட வீதாசாரமும் வெகுவாகக் கண்டிக்கப்பட்டன. மற்றும் ஆரம்பப் பின்னிலையிலுள்ள மூவகைப் பாடசாலைகளிலும் பின்பற்றப்படவிருந்த பாட

ஏற்பாடுகளில் தெளிவின்மையும் நோக்கங்களின் தெளிவின்மையும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தன.

எனவே விசேட கல்வி ஆணைக் குழு நடைமுறையில் காணப்படும் சமூக அமைப்புக்கும், தனிமனிதத் திறன்களுக்கும் ஏற்பப் புதிய பாடசாலை அமைப்பொன்றைச் சிபாரிசு செய்தது. இதுவும் மூன்று வகையினதாக அமைந்தது. அவையாவன.

(அ) ஆரம்ப நிலை

(ஆ) ஆரம்பப் பின்னிலை

(இ) பல்கலைக் கழகம், தொழிற் கல்வி, தொழில்நுட்பக் கல்வி நிலை.

ஆரம்ப நிலையில் தாய்மொழியில் எல்லோருக்கும் ஒரே வகையான கல்வி வழங்கப்பட வேண்டும்; ஆரம்பப் பின்னிலையில், மூன்று வகையான பாடசாலைகளைக் குறிப்பிட்டனர்.

I.இடைநிலைப் பாடசாலைகள், இவை 7 ஆண்டுப் பயிற்சி நெறியுடன் பல்கலைக்கழகம், தொழிற்றுறைக் கல்லூரிகளுக்கு இட்டுச்செல்லும்.

II.சிரேட்ட பாடசாலைகள்- 5 ஆண்டுப் பயிற்சி நெறியுடன் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு இட்டுச் செல்லும்.

III.பயிற்சிப் பாடசாலைகள் - 3 ஆண்டுப் பயிற்சி நெறியுடன் விவசாயப் பாடசாலைகளுக்கு இட்டுச் செல்லும்.

குறிப்பாக, ஆரம்பப் பின்னிலைப் பாடசாலைகள், ஒவ்வொன்றும் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என இரண்டுவகையாகக் கொண்டிருப்பதுடன், இப்பிரிவுகளுள் முறையே 3 ஆண்டும், 2 ஆண்டும் கல்வி வழங்கப்படும். இடைநிலைப் பாடசாலை மேலும் இரண்டு ஆண்டுகள் கல்வியை வழங்கும். இப்பாடசாலைகளுக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படும் வீதாசாரமும் முறையே 5, 15, 80 எனவும் அமையும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

இங்கு எடுத்துக்காட்டப்பட்ட முறைகளிலிருந்து, இடைநிலைப் பாடசாலைகள் நூற்கல்வியையும், சிரேட்ட பாடசாலைகள் தொழில்நுட்பக் கல்வியையும், பயிற்சிப் பாடசாலைகள் விவசாயம், கைப்பணி போன்ற பாரம்பரியத் துறைகளில் பயிற்சியையும் வழங்கும் எனக் கண்டுகொள்ளலாம்.

விசேட கல்வி ஆணைக் குழுவினுடையே சிபாரிசுகளின் பிரதான நோக்கம் சகல பாடசாலைகளிலும் சமநிலையை பேணுவதாகும். ஆயினும், மூவகைப் பாடசாலைகளிலும் கல்வியை வழங்கவென ஒதுக்கப்பட்ட கால அளவும், பாட ஏற்பாடுகளும் சமத்துவத்தைப் பேணும் நிலையிலிருந்து விலகிச் செல்கின்றது; மூவகைப் பாடசாலைகளில் கல்வி பயில்வோரின் எதிர்காலம் பற்றி நிச்சயமாகக் குறிப் பிடவில்லை என்ற வகையில் இவ்வறிக்கை மீது குறை கூறப்பட்டது.

மேலும் 1947 ஆம் ஆண்டில், இன்னொரு வகையான பாடசாலையமைப்பு ஆரம்பப் பின்னிலையில் எடுத்துக்காட்டப்பட்டது. அது பின்வருமாறு.

1. இடைநிலைப் பாடசாலைகள்

2. சிரேட்ட பாடசாலைகள்

3. பயிற்சிப் பாடசாலைகள்

4. ஏனைய வகுப்பும் வகைகளும்.

ஆயினும் இவ்வகையிலான பாடசாலையமைப்பு முறையின் அடிப்படையில் மாணவர்களை அல்லது பாடசாலைகளைப் பாகுபடுத்துவது பற்றி எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இலங்கை சுதந்திரமடையும் வரை முன்னைய பாடசாலை அமைப்பு முறையே தொடர்ந்து நிலவி வந்தது.

## 1950களில் பாடசாலை அமைப்பு முறை

இலங்கை சுதந்திரமடைந்த பின் 1950 இல் சமர்ப்பிக்கப்பட்ட கல்வி வெள்ளையறிக்கையின் மூலம் புதிய

பாடசாலை அமைப்பு முறையொன்று எடுத்துரைக்கப்பட்டது. இவ்வமைப்பு ஆரம்பப் பாடசாலை, இடைநிலைப் பாடசாலை, கல்லூரி நிலை என மூன்று பிரிவுகளையுடையது.

ஆரம்பப் பாடசாலை 1-5 வகுப்புகளையுடையது. இவற்றிலே மாணவர்களின் கல்விக் காலம் 5 தொடக்கம் 11 வயது வரை ( 6 வருடங்கள்) இடம் பெறும். 11 + வயதில் நடத்தப்படும் ஒரு தேர்வுப் பரீட்சையின் மூலம் மாணவர்கள் கனிட்ட இடைநிலைக் கல்விக்கும், ஆரம்பநிலைச் செய்முறை வகுப்புகளுக்கும் தெரிவு செய்யப்படுவர். கனிட்ட இடைநிலையின் பின்னர் தகுதிகாண் பரீட்சையொன்றின் மூலம் நூற்கல்விசார்ந்த சிரேட்ட இடைநிலைப் பாடசாலை களுக்கும், தகுதி காண் பரீட்சையில் சித்தியடையாதவர் தொழிற்பாடசாலைக்கும் அனுமதிக்கப்படுவர். சிரேட்ட இடைநிலைப் பாடசாலையின் இறுதியில் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை நடைபெறும். இப்பரீட்சையிலே சித்தியெய்துவோர் கல்லூரிநிலைக் கல்விக்கு அனுமதிக்கப்படுவார்கள். கல்லூரி நிலைக் கல்வி இரண்டு ஆண்டுகள் இடம்பெறும். உயர் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சையில் சித்தியடைவோர் உயர் கல்விக்கும் அனுமதிக்கப்படுவர். ஆரம்பநிலைச் செயல்முறைக் கல்வியின் இறுதியில் நடைபெறும், தகுதிகாண் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் பாடசாலையிலிருந்து விலக வேண்டும் அல்லது கட்டணம் செலுத்திக் கல்வி பயிலலாம் என விதிக்கப்பட்டது.

1950 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட பாடசாலையமைப்பில் 11 + இல் நடைபெறவிருந்த தகுதிகாண் பரீட்சையும் அதனைத் தொடர்ந்து கனிட்ட இடைநிலைக்கு மாணவர்களை அனுமதிக்கும் முறை பற்றியும் கண்டனங்கள் எழுந்தன. இடைநிலைக் கல்விக்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள் தொகை, தொழிற் பாடசாலைக்கென மாணவர்களைப் பாகுபடுத்துமிடத்து, அவர்களுக்குப் போதியளவான பாடசாலைகள் இல்லாநிலை, நூற்கல்விப் பாடசாலைகளுக்கும் தொழிற் பயிற்சிப் பாடசாலைகளுக்கும் இடையில் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மானியங்கள் என்பவற்றில்

இருந்த வேறுபாடுகள் என்ற அடிப்படையில் இச்சிபாரிசுகள் மறுக்கப்பட்டன.

இதன் விளைவாக, 1951 இல் கொண்டுவரப்பட்ட வெள்ளையறிக்கை மீண்டுமொரு புதிய பாடசாலையமைப்பை முன்வைத்த முன்னைய பாடசாலை அமைப்பில் கூறப்பட்டிருந்த 11 + வயதில் நடைபெறவிருந்த தகுதிகாண் பரீட்சை இவ்வமைப்பிலே கைவிடப்பட்டிருந்தது. மற்றும் கனிட்ட இடைநிலை மட்டத்தில் ஒரு பரீட்சையை நடத்தி அதனை அடிப்படையாகக்கொண்டு, வகுப்பேற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. முதன்முதலாக 1952 இல் பரீட்சார்த்தமாக இச்சோதனை நடத்தப்பட்டது; 1955 ஆம் ஆண்டு வரை தொடர்ந்து நடைபெற்றுவந்தது. தெரிவுப் பரீட்சையில் சித்தியெய்தத் தவறிய மாணவர்கள் தொழிற் பாடசாலைகளுக்கு செல்ல வேண்டும் என எடுத்துக்காட்டியது. ஆனால் அக்கூட்டத்தில் போதிய தொழிற்பயிற்சிப் பாடசாலைகள் இருக்கவில்லை. தொழிற்பயிற்சிப் பாடசாலைக்குத் தகுதியெனக் காணப்பட்டவர்கள் கைவிடப்பட்ட நிலையில் இருந்தார்கள். இதனால் வருடாவருடம் பாடசாலைக்கு வெளியே அனுப்பப்பட்ட மாணவர்கள் தொகை பெருகியது. சுயமொழிப் பாடசாலைகளையே இவை பெரிதும் பாதித்தன. பரீட்சையில் சித்தியடைவோர் மட்டும் மேலும் கல்வியைத் தொடர வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டமை இலவசக் கல்விக் கொள்கைக்கு முரணாக அமைந்தது.

## பாடசாலை அமைப்பு முறை -1960களில்

மதக் குழுப் பாடசாலை முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டும் என இதுவரைகாலமும் இருந்து வந்த கோரிக்கையின் விளைவாக 1960 ஆம் ஆண்டில் சகல தனியார், மற்றும் மதக் குழுப் பாடசாலைகள் யாவற்றையும் பொறுப்பேற்று அரசாங்கப் பாடசாலைகளாக நடத்துவதற்கான ஒரு சட்ட மூலம் கொண்டு வரப்பட்டமையால், ஒரு சில மதக் குழுப் பாடசாலைகளைத் தவிர ஏனையவை யாவும் அரசு கட்டுப்பாட்டின் கீழ் வந்தன. இலங்கையில் கல்வி வரலாற்றில் இந்த நடவடிக்கை புதிய திருப்பத்தை விளைவித்தது.

1960களின் ஆரம்பத்திலும் நூற்கல்விக்குத் தகுதியற்றவர்களின் கல்விக்கான வசதிகள் பற்றிக் கவனத்திற் கொள்ளப்பட்டன. எனவே பாட ஏற்பாட்டு ஒழுங்குக்கு ஏற்ப மாணவர்களைப் பிரித்து விடுதல் என்ற அம்சம் கல்வியியலாளர்களின் கவனத்தை ஈர்த்தது. எனவே 1962 இல் இப்பிரச்சினைகளை ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிக்கவெனத் தேசியக் கல்வி ஆணைக் குழு நியமிக்கப்பட்டது. தேசியக் கல்வி ஆணைக் குழு தனது இடைக்கால அறிக்கையில் இன்னொரு பாடசாலை அமைப்பினை எடுத்துக்காட்டியிருந்தது. இவர்களுடைய பிரேரணையின்படி, பாடசாலைகள் கனிட்ட வித்தியாலயம், சிரேட்ட வித்தியாலயம் என இருவகையாகப் பிரிக்கப்பட்டு, கனிட்ட வித்தியாலயத்தில் 14 வயது வரை கல்வியைத் தொடர இடமளிக்கப்பட்டது. கனிட்ட வித்தியாலயம் கீழ்ப் பிரிவு (1-5 வகுப்புகள்) மேற் பிரிவு ( 6-8 வகுப்புகள்) என இருவகைப்படும். மேற்பிரிவில் கல்வியைப் பூர்த்தி செய்தபின் சிரேட்ட வித்தியாலயத்திற்குத் தெரிவு செய்யப்படலாம் அல்லது தொழிற்பயிற்சிக்குச் செல்லலாம் அல்லது பாடசாலையை விட்டு விலகலாம்.

சிரேட்ட பாடசாலைகள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அப்பிரிவுகள் பின்வருமாறு.

1. விவசாயக் கல்வி

2. பொறிமுறைக் கல்வி

3. விஞ்ஞானக் கல்வி

4. மக்கட்பண்பியலும் வர்த்தகமும்

கனிட்ட வித்தியாலயங்களில் சித்தியடைந்தவர்களுக்குப் பல்துறைகளிலும் பயிற்சியை வழங்க வேண்டும் என்பது இந்நான்கு வகைப் பாடசாலைகளிலும் பிரதான நோக்கமாகும். இவை இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இப்பாடசாலைகளில் 4 ஆண்டுகள் கல்வி பயின்ற பின் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றலாம். போதிய தகைமைகளுடன் இப்பரீட்சையில் சித்தியெய்தியவர்கள்

மேலும் இரண்டு ஆண்டுகள் பயின்று க.பொத உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றலாம். தவறியவர்கள் பாடசாலையிலிருந்து விலகவேண்டும் அல்லது வேறு விசேட கல்விப் பயிற்சிப் பாடசாலைகளில் சேர வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இதன் பின்னர் 1964, 1966 ஆம் ஆண்டுகளின் வெள்ளையறிக்கைகளும் 1967 ஆம் ஆண்டின் கல்விச் சட்டமும் பாடசாலை அமைப்பு முறையில் இடம்பெற வேண்டிய சில அம்சங்களை எடுத்துக்காட்டியிருந்தது. இந்த அறிக்கையும் 8 ஆம் வகுப்பின் பின்னர் மாணவர்களை நூற்கல்விக்கும் தொழிற்கல்விக்கும் ஒழுங்குபடுத்துவதிலேயே கவனஞ்செலுத்தியது.

1964 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கை குறிப்பாக 3 அம்சங்களில் கவனஞ் செலுத்தியது. முதலாவதாக, ஆரம்பப்பாடசாலை ஒவ்வொரு மாணவனுடைய வீட்டிலிருந்தும் 2 மைல் தூரத்துக்குள் அமைந்திருக்க வேண்டும். இரண்டாவதாக, மகா வித்தியாலயங்கள் 5 மைல் தூரத்துக்குள்ளும் அமைந்திருக்க வேண்டும். மூன்றாவதாக, 14 வயது வரை கட்டாயக்கல்வி இடம் பெற வேண்டும். இவற்றுள் பாடசாலை அமையும் முறையொன்று மட்டுமே நடைமுறைக்கு வந்தது.

1966, 1967 இல் வெளிவந்த அறிக்கைகளும் 8 ஆம் வகுப்பின் பின்னர் இடைநிலைக் கல்விக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட வேண்டிய முறையை எடுத்துக்காட்டின. மற்றும் மாணவர் தெரிவுமுறை, தொழிற்பயிற்சி முறையினால் ஏற்படக் கூடிய சமூக வகுப்பு வேற்றுமைகள், நல்ல பாடசாலைகளில் சேர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்ப மறுப்பு, கிராம நகரப் பிள்ளைகளுக்கு இடையேயுள்ள வேறுபாடுகள், பாட ஏற்பாடுகளில் காணப்பட்ட வித்தியாசம் ஆகிய காரணங்களில் இவ்வெள்ளை அறிக்கைகளின் கருத்துக்கள் பற்றிய முரண்பாடுகள் தோன்றின.

## 1972 இல் முன்வைக்கப்பட்ட பாடசாலை அமைப்பு

1972 ஆம் ஆண்டில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் சுதந்திரமும் இறைமையுங் கொண்ட ஒரு நாட்டின் தேவைக்கு உதவும் நோக்கினை அடிப்படையாகக் கொண்டது. இக்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் பிரச்சினைகளுக்கு, முன்னைய கல்வியமைப்புகளிற் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளே காரணங்களாகக் கூறப்பட்டன. 1971 இல் வெளிவந்த டட்லி சியர்ஸ் அறிக்கையும் இவ்வாறே பாடசாலைகளும் பல்கலைக் கழகங்களும் தேசியத் தேவைகளை நிறைவு செய்யவில்லை என எடுத்துக்காட்டியது. பாடசாலையை விட்டு இடையில் விலகும் மாணவர்களுக்கு தகுந்த வழிகாட்டல்கள் கிடைக்காத நிலையில் நாட்டிற்குச் சுமையாகவும், விரக்தியுடையவர் களாகவும் மாறிய நிலையும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புதிய பாட ஏற்பாட்டு மாற்றங்களையும் புதிய பாடசாலையமைப்பையும் கருத்திற்கொண்டு, புதிய சீர்திருத்தம் முன் வைக்கப்பட்டது.

முன்னைய கல்வி வெள்ளையறிக்கைகளும், குறிப்பாக அவ்வறிக்கைகளிலே இடம்பெற்ற பாட ஏற்பாடுகளும் வேறுபடுத்தப்பட்டனவாக இருந்தமையால், மாணவர்கள், மற்றும் சமூக எதிர்பார்ப்புகளில் உறுதியற்ற நிலையிலிருந்தது. சமூக வகுப்பு பேதங்களை அவை மேலும் வலியுறுத்தின. பாடசாலைகளுக்கிடையே வசதிகள் வாய்ப்புகளில் வேறுபாடுகள் தோன்றின.

ஆகவே புதிய சீர்திருத்தம் யாவருக்கும் பொதுக் கல்வி முறையை அறிமுகம் செய்வதை அடிப்படையாகக் கொண்டமையலாயிற்று. பொதுப் பாட ஏற்பாட்டினை வழங்குதற்கு ஏற்பப் பாடசாலை அமைப்பும் பின்வரும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது.

1. ஆரம்பப் பாடசாலை - வகுப்பு 1-5 வரை
2. கனிட்ட இடைநிலை - வகுப்பு 6-9 வரை
3. சிரேட்ட இடைநிலை - வகுப்பு 10-11 வரை

இவ்வமைப்பின்படி ஆரம்பநிலை 5 வருடங்களையும் கனிட்ட நிலையில் 4 வருடங்களையும் சிரேட்ட இடைநிலை 2 வருடங்களையும் கொண்டிருந்தது. கனிட்ட இடைநிலைக் கல்வியின் முடிவில் ( 9ம் வகுப்பு) தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சையும், சிரேட்ட இடைநிலைக் கல்வியின் முடிவில் (11ஆம் வகுப்பு) உயர் கல்வித் தேசியச் சான்றிதழ்ப் பரீட்சையும் நடத்தப்பட்டன. இதன் பின்னர் பல்கலைக்கழக கல்விக்கான அனுமதி வழங்க உத்தேசிக்கப்பட்டது.

இலங்கையில் கல்வி வரலாற்றில் 1972-1975 வரையுள்ள காலப் பகுதி இடைமாறுபருவம் என அழைக்கப்படுகிறது. இக்காலத்தில் அறிமுகம் செய்யப்பட்ட பாட ஏற்பாடுகளும் பரீட்சை முறைகளும் முற்றிலும் புதியவை. பாடசாலைக் காலம் 11 வருடமாகக் குறைக்கப்பட்டது.

ஆயினும், இப்புதிய பாடசாலை அமைப்பு முறையினால் மாணவர்கள் விரைவில் பாடசாலையை விட்டு வெளியேறக் கூடிய நிலை தோன்றியது. இது பெரும் விமர்சனத்துக் குள்ளானது. மற்றும் சில பாடப் பகுதிகள், போதிய முன்னேற்பாடுகளின்றி அறிமுகம் செய்யப்பட்டதால் (தொழில் முன்னிலைப் பாடம்) அவையும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. இதனால் இக்காலப் பகுதியை அடுத்து ஏற்பட்ட அரசியல் மாற்றத்தினால், ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் 1977இல் புதிய சிபாரிசுகளை முன்வைக்கலாயிற்று.

இத்தகைய மாற்றம் இரண்டு விடயங்களைக் கருத்திற் கொண்டது. பாடசாலைக் கல்விக் காலத்தை மேலும் நீடிப்பதன் பொருட்டு ஆரம்பக் கல்விக் கால அளவை 6 வருடங்களாக்கியது. தேசிய கல்விப் பொதுச் சான்றிதழ் பரீட்சைக்குப் பதிலாக கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையையும் தேசிய உயர் கல்விச் சான்றிதழ் பரீட்சைக்குப் பதிலாக க.பொ.த. உயர்தரப் பரீட்சையையும் பெரும்பாலும் இன்றைய நடைமுறைக்குப் பொருந்தும் வகையில், அறிமுகம் செய்தது. இதனால் பாடசாலைக் காலம் 13 வருடங்களாக மீண்டும் ஆக்கப்பட்டதுடன் பாடசாலையமைப்பும் பின் வருமாறு அமைக்கப்பட்டது.

1. ஆரம்பநிலை - பாலர் வகுப்பு - 5ம் வகுப்பு வரை

2. கனிட்ட இடை நிலை - 6 - 10 ஆம் வகுப்பு வரை

3. சிரேட்ட இடைநிலை - 11 - 12 ஆம் வகுப்பு வரை

10 ஆம் வகுப்பு வரையில் பொதுக்கல்விப் பாட ஏற்பாடு இடம்பெற்றது. சிரேட்ட இடைநிலை கலை, விஞ்ஞானம் என்ற இருபிரதான துறைகளாகப் பிரிக்கப்பட்டது. பல்கலைக் கழகங்களால் வகுத்துக் கொடுக்கப்பட்ட நியதிகளுக்கு ஏற்பச் சிரேட்ட இடைநிலையில் பாடநெறியைத் தெரிவு செய்ய மாணவர்களுக்கு இடமளிக்கப்பட்டது. பின்னர் வர்த்தகத் துறையும் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

## நடைமுறையிலுள்ள பாடசாலையமைப்பு

இலங்கையில் இன்று நடைமுறையிலுள்ள பாடசாலையமைப்பு முறை 1981 ஆம் ஆண்டின் கல்வி வெள்ளையறிக்கையூடாக அறிமுகமானது. இதுவரை காலமும் நிலவிவந்த கல்வியமைப்பினைப் பூரணமாக மாற்றியமைப்பது இவ் அறிக்கையின் நோக்கமாக இருந்தது. இது பொதுக் கல்விக்கு மேலும் வலுவூட்டும் பாடசாலை அமைப்பு, பல்கலைக்கழகக் கல்வி, மூன்றாம் நிலைக் கல்வி என்ற மூன்று பிரிவுகளையுடையது. முன்னைய காலங்களில் கொண்டுவரப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம் தீர்வுகாணத் தவறிய பொதுக் கல்விப் பிரச்சினைகளுக்கு மாற்றுவழி தேடுவதாக இவ்வெள்ளையறிக்கை அமைந்தது.

கல்வி வெள்ளையறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்ட பொதுக் கல்வியின் நோக்கம் "யாவருக்கும் பொதுக் கல்வி" என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, பிரதேச, நகர, கிராம மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நிலவிவந்த வேறுபாடுகளை இல்லாதொழித்து, பிள்ளைகள் எல்லோரையும் எதிர்கால வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வதாகும். மற்றும் கல்விக்கும் வாழ்க்கைக்கும் இடையே சிறந்த இணைப்பை ஏற்படுத்துவதற்காக மனித வளமும் அவர்களுடைய திறன்களும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உச்சமட்டத்திற் பயன்படுத்துவதற்கான கல்வி முறையொன்றை ஏற்படுத்துவதுமாகும். இதற்கு ஏற்றாற்போல்

பாடசாலையமைப்பும் இயல்பான மாற்றங்களைப் பெற்றுக் கொண்டன.

கல்வி வெள்ளையறிக்கையில் விதந்துரைக்கப்பட்ட பாடசாலையமைப்பு 4 பிரிவுகளையுடையது.

1. ஆரம்பப் பாடசாலை - ஆண்டு 1-5 வரை
2. கனிட்ட இடைநிலை - ஆண்டு 68 வரை
3. சிரேட்ட இடை நிலை - ஆண்டு 911 வரை
4. கல்லூரி நிலை - ஆண்டு 1213 வரை

இவ்வறிக்கையும் கனிட்ட இடைநிலையின் முடிவில் நடத்தப்படும் பொதுப் பரீட்சையொன்றின் மூலம் ஒருபகுதியினரைச் சிரேட்ட இடைநிலைப் பாடசாலைகளுக்கும் மறுபகுதியினரை தொழிற்கல்வி அதிகார சபையின் கீழுள்ள க.பொ.த. தொழில் நுணுக்க நெறியை அல்லது கைப்புனைவியலர் பயிற்சிநெறிக்கும் அனுப்ப உத்தேசித்திருந்தது. அடுத்துச் சிரேட்ட இடைநிலை மட்டத்தின் முடிவில் நிகழும் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சையிலே தகுந்த சான்றிதழையுடையவர்கள் கல்லூரிநிலைக் கல்விக்கும், மற்றவர்களைத் தொழில் நுணுக்கம், தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் நுண்கலைப் பயிற்சி நெறிகளையும் தொடரக் கூடியவாறு ஒழுங்குகள் செய்திருந்தன. மற்றும் திறந்த பாடசாலைகளில் சேருவதற்கான வாய்ப்புகளும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. கல்லூரிநிலை, தொழிற்கல்வி அதிகார சபையின் கீழுள்ள பயிற்சி நெறிகள், திறந்த பாடசாலைகள் ஆகியவற்றிலிருந்து, மூன்றாம் நிலைக் கல்வியமைப்புகளான பல்கலைக்கழகங்கள், உயர் தொழில்நுட்பக் கல்லூரிகள், திறந்த பல்கலைக்கழகம், தொழில் நுணுக்க அதிகார சபையினர் நடத்தும் உயர் பயிலுனர் பயிற்சி நெறிகள் ஆகியவற்றில் சேர்ந்து பயிலக் கூடிய வாய்ப்புகள் திறந்திருந்தன. இவை முறைசார்ந்த கல்வி நிறுவனங்கள் மூலம் கல்வியைத் தொடரக்கூடிய சந்தர்ப்பங்களை இழந்தோருக்கு முறை சாரா நிறுவனங்களைப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகளையும் பெற்றுக் கொடுத்தன.

மேலும் பாடசாலைகளுக்கிடையேயுள்ள வளப்பகிர்வு, சிறந்த நிருவாக முறை, பாட ஏற்பாடுகளை

நடைமுறைப்படுத்தல், சிறந்த ஆளணி முகாமைத்துவம் ஆகியவற்றை அறிமுகம் செய்தல் வேண்டிக் "கொத்தணிப் பாடசாலை முறை"யையும் ஒற்றைநிலைப் பாடசாலைகளையும், மற்றும் தேசியப் பாடசாலைகளையும் அறிமுகஞ் செய்தது.

இன்று இலங்கைப் பாடசாலை முறைமை மிகவும் விசாலமான ஓர் அமைப்பாகத் செயற்படுகிறது. ஏறக்குறைய 10,000 பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலைகளை அவை கொண்டிருக்கும் வளங்களையும், பாட நெறிகளையும் அடிப்படையாகக் கொண்டு, தரம் 1A, 1B, 1C, 2, 3 என ஐந்து பிரிவாகப் பகுத்துள்ளார்கள். இவை உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவதற்கும், பாடசாலைகளின் வளங்களை அதிகரிப்பதற்கும் சாதகமாக இருக்கின்றன.

இலங்கைப் பாடசாலைகளின் அமைப்புப் பற்றிய அம்சங்களைத் தொகுத்து நோக்கும்பொழுது, காலத்துக்காலம் ஏற்பட்ட பாட ஏற்பாட்டு மாற்றங்களையும், அவற்றை வேறுபடுத்தப்பட்ட முறையிலிருந்து மாற்றிப் பொதுவானதாக எல்லோருக்கும் வழங்க எடுத்த முயற்சியின்படிமுறை வெளிப்பாடாக இருந்ததையும் காணலாம். மேலும் மனித வாழ்க்கை முறையும் உலகத் தொடர்புகளும் மாறுகின்றன; தேவைகள் பெருகுகின்றன. உலக அறிவுத் தொகுதியிலே பாரிய விரிவாக்கம் ஏற்படுகின்றது! இவ்வகையில் மனித எதிர்பார்ப்புகள் காலத்துக்கு உகந்த கல்வியைப் பெறுவதில் திசை திருப்பப்படுகின்றன. அப்பொழுது காலத் தேவையையொட்டிப் பாடசாலை அமைப்பிலும் மாற்றங்கள் படிப்படியாக இடம்பெறும் என்பதை நாம் எதிர்பார்க்கலாம்.

# 5

## இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வியின் தோற்றமும் வளர்ச்சியும்

இலங்கையில் உயர்கல்விக்கான தேவை அண்மைக் காலத்தில் அதிகரித்துச் செல்லும் தன்மையைக் கொண்டிருக்கிறது. இடைநிலைக் கல்வி வாய்ப்புகளையும் வசதிகளையும் மேம்படுத்துவதற்குக் கடந்த நான்கு தசாப்தங்களாக எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக, இடைநிலைக் கல்வியிற் பங்குபற்றுவோர் தொகை குறிப்பான அதிகரிப்பைப் பெற்றுள்ளது.

சிரேட்ட இடைநிலைக் கல்வியில் கலை, விஞ்ஞானம் ஆகிய இரு துறைகளிலும் மாணவருடைய அடைவுமட்டம் ஒப்பீட்டளவில் உயர்ந்து வருகின்றது. ஆண்டுதோறும் ஏறக்குறைய 1,50,000 மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு அமர்கின்றார்கள். இவர்களுட் 20 வீதத்தினர் (30,000 பேர்) உயர் கல்வி பெறும் தகுதியையும் விருப்பினையும் உடையவர்கள். இவர்களில் 9500 பேர் மட்டுமே பல்கலைக்கழக அனுமதி பெறுகின்றனர். அனுமதி கிடைக்காதோருக்கு பொருளாதாரப் பின்னணி காரணமாக அரசாங்கத்தினால் அமைத்துக் கொடுக்கப்படும் உயர் கல்வி நிறுவனங்களினூடாகவன்றி வேறு நிறுவனங்களுக்குச் சென்று கல்வியைத் தொடர்வதற்கு ஏற்படும் கல்விச் செலவினங்களை தாங்கக் கூடிய சக்தியில்லை. அறிவுத் துறை, தொழில்நுட்பத் துறை ஆகியவற்றில் ஏற்பட்ட பெருக்கத்தின் விளைவாகத் தோன்றிவருகின்ற புதிய கல்வித் துறைகளை ஒருசிலர் மட்டும் தெரிந்து கற்கின்றனர். மற்றவர்கள் அவர்களுடன் போட்டியிட முடியாத நிலையில்,

பல்கலைக்கழகங்களினூடாகவேனும் ஒரு தகைமையைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற முயற்சிக்கும் சில வகையான கட்டுப்பாடுகள் உண்டு. இதனால் பல்கலைக்கழகக் கல்விக்குத் தகைமை பெற்ற இளைஞர்கள் மத்தியில் விரக்திப் போக்கும் புரட்சிகர எண்ணங்களும் தோன்ற இடமளிக்கப்படுகிறது என 1991 இல் வெளிவந்த இளைஞர் பிரச்சினைகளுக்கான ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கையில் சான்றுகள் கூறப்பட்டுள்ளன. இளைஞர்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டுமாயின் உயர்கல்வி வசதிகளில் சிறப்பாக பல்கலைக்கழகக் கல்வியில் விரிவாக்கம் அவசியம் என்பது வெளிப்படை.

தற்பொழுது இலங்கையில் 8 பல்கலைக்கழகங்களும் ஒரு பல்கலைக்கழக வளாகமும் ஒரு திறந்த பல்கலைக்கழகமும் இயங்கி வருகின்றன. ஆயினும் இலங்கையின் உயர் கல்வித் தேவைகளுக்கு இந்நிறுவனங்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. மரபுவழிப் பல்கலைக்கழகங்கள் ஏறக்குறைய 22,000 மாணவர்களுக்கே வாய்ப்பைப் பெற வசதியளித்துள்ளன. இலங்கையின் உயர் கல்வி நிலையை உலக நாடுகளின் உயர் கல்வி வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில், அதன் நிலை மிகவும் கீழ்நிலையில் உள்ளதென்பதைக் குறிப்பிட்டாக வேண்டும். எனவே உயர் கல்வி வாய்ப்புகளை மேலும் விரிவாக்குவதற்கு 1992 ஆம் ஆண்டில் மாகாணந்தோறும் இணைந்த பல்கலைக்கழகங்களை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அவை செயல்வடிவமும் பெற்றுள்ளன. இன்று நாம் காணும் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் எவ்வாறு தோற்றம் பெற்று இன்றைய நிலையை அடைந்து கொண்டன என்பதை வரலாற்றுப் பின்னணியுடன் நோக்குவதை இக்கட்டுரை கருத்திற் கொண்டுள்ளது.

## உயர் கல்விக் கல்லூரிகளின் தோற்றம்

இலங்கையில் ஓரளவுக்கேனும் ஒரு முழு நிறைவான பல்கலைக்கழகம் 1942 ஆம் ஆண்டிலேயே நிறுவப்பட்டது. இது குடியேற்றவாதக் கல்விக் கொள்கையின் விளைவு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. குடியேற்ற ஆட்சியாளர்கள்

இலங்கைக்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியம் என்னும் கருத்தையுடையவர்களாக இருக்கவில்லை. ஆங்கில மொழியறிவும் அதனைக் கொண்டு தமது நிருவாகப் பணிகளுக்கு உதவக் கூடிய அளவுக்குக் நூற்கல்வியறிவையுடைய கற்ற ஒரு வர்க்கத்தினர் இருந்தாற்போதும் என்பது அவர்களுடைய அடிப்படை எண்ணமாகும். இலங்கை மக்களின் வற்புறுத்தல்களின் பேரில் அவர்கள் உயர் கல்வி நிறுவனங்களை உருவாக்க முயற்சியெடுத்தவேளையிலும் அவை வரையறுக்கப்பட்ட வகுப்பினருக்கு, மட்டும் கல்வியை வழங்கத் தக்கனவாகவும், காணப்பட்டன. மற்றும் உயர் கல்வி ஏற்பாடுகள் வேற்று நாட்டுப் பல்கலைக்கழகங்களுடன், குறிப்பாக இங்கிலாந்துடன் செய்யப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இத்தகைய கொள்கைகளை எதிர்த்தே இலங்கைப் பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற கருத்தையுடைய தேசிய இயக்கம் ஒன்று தோன்றலாயிற்று.

19 ஆம் நூற்றாண்டின் மத்திய காலப் பகுதியில் இலங்கையில் உயர் கல்விக்கு ஆயத்தஞ்செய்த ஒரே நிறுவனம் "கொழும்பு அக்கடமி" ஆகும். இது கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைந்து செயலாற்றியது. பின்னர் "இராணிக் கல்லூரி" என அழைக்கப்பட்ட இந்நிறுவனம் இலண்டன் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட வெளிவாரிப் பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தஞ் செய்துவந்தது. இக்கல்லூரி 1881 ஆம் ஆண்டில் "றோயல் கல்லூரி" என அழைக்கப்படலாயிற்று. ஆரம்பகட்டத்தில் பல்கலைக்கழகக் கல்வியை நேரடியாக அனுபவிக்கும் வாய்ப்புகளற்றவேளையிலும் பட்டங்களைப் பெறக் கூடிய சந்தர்ப்பத்தை இந்த ஏற்பாடு மிகக் குறைந்த மட்டத்திலேனும் நிறைவு செய்தது. மற்றும் 1850 களில் இலங்கையின் சனத்தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சிப் போக்கினைக் காரணங்காட்டி, சேர். ஜோர்ஜ் அன்டர்சன், இலங்கைக்கு மருத்துவக்கல்லூரி யொன்றின் அவசியத்தை வலியுறுத்தும் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். இவ்வறிக்கையின் அடிப்படையில் 1870 ஆம் ஆண்டில், மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டது. இது போல 1874 இல் ஒரு சட்டக்

கல்லூரியும், 1893இல் தொழில்நுட்ப நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன. இக்கல்லூரிகளும் இலண்டன் பல்கலைக்கழக "மற்றிக்குலேசன்" பரீட்சைக்கும் இடைநிலைப் பரீட்சைகளுக்கும் மாணவர்களை ஆயத்தஞ் செய்தன.

**பல்கலைக்கழகக் கல்லூரி**

இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி 1921 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. 1870 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக நிகழ்ந்துவந்த போராட்டத்தின் விளைவே இக்கல்லூரியாகும். அக்காலத்துச் சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற உறுப்பினராக இருந்த சேர். பொன் குமாரசுவாமி அவர்கள் இப்போராட்டத்தின் முன்னோடியாக விளங்கினார். எவ்வாறாயினும் குடியேற்றவாதப் போக்கிலிருந்து விலகி இலங்கையின் தேசிய நலன்கள், மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பேணவும், ஆரம்பக் கல்வியைக் கூட வழங்குதற்கு நன்கு கற்றறிந்தவர்களின் அவசியத்தையும் எடுத்துக்காட்டி, இவை இலங்கையில் முழுநிறைவான பல்கலைக்கழகத்தை நிறுவுவதனூடாகவே சாத்தியமாகும் என எடுத்துக்காட்டியிருந்தார்.

சேர். பொன். குமாரசுவாமியின் கருத்துக்களை தொடர்ந்து ஒரு "பல்கலைக்கழக இயக்கம்" உருவாயிற்று. இவ் இயக்கத்துக்கு ஆதரவாக சேர். பொன். அருணாசலம் அவர்களும், இலங்கையின் கலாசார மறுமலர்ச்சிக்கு வித்திட்ட கலாநிதி. ஆனந்த குமாரசுவாமி அவர்களும் கருத்துக்களை வழங்கியிருந்தனர். இலங்கையில் அமைக்கப்படும் பல்கலைக்கழகம் "இலங்கையர்களை ஆங்கிலமயப்படுத்தும் பல்கலைக்கழகமாகவும், அது வழங்கும் கல்வி பரீட்சகர்களால் அளவிடப்படும் வெறும் அறிவாக மட்டும் இருக்கக் கூடாது எனவும், அறிவு கலாசாரத்தை அறியவும் சிந்தனைச் சுதந்திரத்தைப் பேணவும் உதவவேண்டும்" எனவும் கலாநிதி ஆனந்தகுமாரசுவாமி குறிப்பிட்டார். இது போல, சேர். பொன் அருணாசலம் அவர்களும், இலங்கையர் மேல்நாட்டுக் கலாசாரத்தையும் ஆங்கில மொழியையும் பயின்று கொண்டாலும், கீழைத்தேய இலக்கியங்கள் தாய்மொழி

ஆகியவற்றிலும் கவனஞ் செலுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தார்.

இக்கருத்துக்களுடன் இயைந்து, அக்காலத்தில் உயர் கல்வி கற்க விருப்பிருந்தும் பொருளாதார சாதகமற்ற நிலையினால் இலண்டன் சென்று கல்வியைப் பெற முடியாதவர்களுக்கு, இலங்கையில் அவ்வாறான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கக் கற்றறிந்த வகுப்பினர் ஆர்வங்காட்டினார். ஆயினும் 1911 ஆண்டு வரையில் பல்கலைக்கழக இயக்கப் போராட்டத்தினால் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை.

பல்கலைக்கழக இயக்கத்தின் வேண்டுகோளின் பேரில், மக்லியட் தலைமையில் 1911 இல் அமைக்கப்பட்ட குழு, இலங்கைக்குப் பல்கலைக்கழக கல்லூரியின் அவசியத்தை வலியுறுத்திச் சில விதந்துரைகளைச் செய்தது. 1913 ஆம் ஆண்டில் சட்ட நிருவாகக் கழகமானது இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியை அமைக்க வேண்டுமெனத் தீர்மானித்ததுடன், இக்கல்லூரி, ஆசிரியர் பயிற்சிநெறிகளையும், மருத்துவ மாணவர்களுக்கான மருத்துவ முன்பாட நெறிகளையும் பொதுவாக உயர் கல்வியையும் வழங்கவேண்டும் என்றும் முடிவு செய்தது. ஆயினும், எதிர்பாராதவிதமாக முதலாம் உலக மகாயுத்தம் தோன்றியமையால் உடனடியாகக் கல்லூரியை ஆரம்பிப்பதில் தடைகள் ஏற்பட்டன. உலகயுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகளின் பின் 1921 ஆம் ஆண்டில் கொழும்பில் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவப்படலாயிற்று. இது இடைநிலைப் பரீட்சைகளுக்கும், இலண்டன் பல்கலைக்கழக கலை, விஞ்ஞான பட்டதாரிப் பரீட்சைகளுக்கும் மாணவர்களை ஆயத்தஞ் செய்தது. இலண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்த செயற்பாடு 1942 ஆம் ஆண்டு வரை நீடித்தது.

## இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தோற்றம்

பல்கலைக்கழகக் கல்லூரி எவ்வகையிலும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவில்லை. திருப்தியையுந் தரவில்லை. முழுமை வாய்ந்த பல்கலைக்கழகத்தை நிறுவுதற்கான காலம் மேலும் 20 ஆண்டுகள் பின்

தள்ளிவைக்கப்பட்டது. 1921-1942 இடைப்பட்ட காலத்தில் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல் சம்பந்தமாக இடம் பெற்ற நிகழ்ச்சிகளில் பின்வரும் அம்சங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

முதலாவதாக, சேர். வோல்ரர்றிடல் என்பாரைத் தலைவராகக் கொண்ட குழுவினர் இலங்கைப் பல்கலைக்கழகத்தை அமைப்பது தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டிருந்தனர். அதற்கிணங்க இச்குழுவினர் இலங்கைக்கு 5 கற்கை நெறிகளுடன் கூடிய (கலை, விஞ்ஞானம், சட்டம், மருத்துவம், பொறியியல்) பல்கலைக்கழகமொன்றைச் சிபாரிசு செய்தனர். மேலும் இப்பல்கலைக்கழகம் சுதந்திரமானதாகவும், விடுதிகளுடன் கூடியதாகவும் இருக்க வேண்டுமென விதந்துரைத்தனர். இவர்களது விதந்துரை 1929 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டு, 1930 இல் சட்டசபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

அடுத்த முக்கிய பிரச்சினையாக, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் அமைவிடத்தைத் தெரிந்து கொள்வதில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகளைக் குறிப்பிடலாம். பல்கலைக்கழகத்தை உடனடியாக நிறுவுவதற்கு ஏற்பட்ட தடைகளுக்கு இதுவுமோர் முக்கிய காரணமே. பல்கலைக்கழகத்தின் எதிர்கால விருத்திக்கு ஏற்ற இடவசதி, அமைதியான கல்விச்சூழல், கலாசார மறுமலர்ச்சிக்கு ஏற்ற பின்னணி போன்றவற்றைக் கருத்திற்கொண்டு சிலர் பேராதனை உகந்த சூழலாக இருக்கும் என எடுத்துக் கூறினர். 1926ல் அமைக்கப்பட்ட நீதிபதி அக்பர் தலைமையிலான குழு தும்பறைப் பள்ளத்தாக்கில் உள்ள அருப்பொல என்ற இடத்தைச் சிபாரிசு செய்தது. அதேநேரத்தில் பல்கலைக்கழகத்தின் உடனடித் தேவை, அதனை அமைக்க எதிர் நோக்க வேண்டிய செலவினங்கள், ஏனைய தொடர்புகள் என்ற காரணங்களின் அடிப்படையில் ஆட்சியாளர்களும், பல்கலைக்கழகக் கல்லூரியின் அதிபர்களாக இருந்தவர்களும் கொழும்பைச் சிபாரிசு செய்தனர். இம் முரண்பாடுகள் யாவும் 1938 இல் புதிய அரசாங்க சபையின் கீழ் செயற்பட்ட கல்வி நிருவாகக் குழு

பல்கலைக்கழகத்தை உடனடியாக பேராதனையில் அமைப்பதற்குத் தீர்மானித்தபின் இல்லாதொழிந்தன.

இவற்றைவிட இலங்கைப் பல்கலைக் கல்லூரியாக இயங்கிவந்த காலத்தில், கல்வி சம்பந்தமான முக்கிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை தோன்றியது. இலண்டன் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்களுக்கான வினாத்தாள்கள் உரிய நேரத்திற்கு வந்து சேராமை, பரீட்சை முடிவுகளைப் பெற எடுத்த கால தாமதம், இடைநிலை மாணவர்களைப் பரீட்சைக்கு ஆயத்தஞ் செய்வதில் உள்ள குறைபாடுகள், விடைத் தாள்களை இலண்டனுக்கு எடுத்துச் செல்லும் பொழுது அவை தொலைந்துவிடக் கூடிய ஆபத்துக்கள் ஆகியன அத்தகையவற்றுள் சிலவாகும். இத்தருணத்தில் உடனடி மாற்றுத் தீர்மானங்களையெடுத்துச் செயற்பட வேண்டிய நிலையேற்பட்டபொழுது, சேர் ஐவர் ஜெனிங்ஸ் அவசியமான சில மாற்று நடவடிக்கைகளைச் சிந்தித்து, அவற்றைச் சட்டசபையில் சமர்ப்பிக்குமாறு அப்பொழுதிருந்த கல்வியமைச்சரை வேண்டிக் கொண்டார். இதன் விளைவாகவே 1942 இன் 20 ஆம் இலக்கம் பல்கலைக்கழகச் சட்டம் என அழைக்கப்படுகின்ற இக்கட்டளைச் சட்டத்தின் அடிப்படையிலேயே இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரி, இலங்கை மருத்துவக் கல்லூரி ஆகியவற்றை இணைத்து இலங்கைப் பல்கலைக்கழகம் உதயமானது.

இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனையில் அமைக்கப்பட்ட பின், போதனா பீடங்களையும், மாணவர்களையும் கொழும்பிலிருந்து இடமாற்றஞ்செய்ய உத்தேசிக்கப்பட்ட காலம் படிப்படியாகப் பின்போடப்பட்டு, 1952 ஆம் ஆண்டு வரை சென்றது. இவ்வாறு செய்யப்பட்டாலும் கொழும்பிலிருந்த பல்கலைக்கழகம் அதன் முக்கியத்துவத்தை இழந்துவிடாமல் 1967 ஆம் ஆண்டு வரையில் செயற்பட்டு வந்தது. 1967 இல் இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பில் தனியாக நிறுவப்படலாயிற்று.

## புதிய பல்கலைக்கழகங்களின் தோற்றம்

1950, 1960 களில் இலங்கையில் உயர் கல்வியை வேண்டிநின்றோர் தொகை மேலும் அதிகரித்தது. ஆரம்பத்திலிருந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்த கொள்கைகள் பல்கலைக்கழகப் அனுமதியில் இவர்களுக்கு உடனடியாக இடமளிக்கவில்லை. பல்கலைக்கழகப் போதனா மொழி ஆங்கிலமாக இருந்தது. நாட்டின் நிருவாகப் பணிக்குத் தேவையானவர்களையும், வேலைவாய்ப்பு வசதிகளையும் கருத்திற்கொண்டு அனுமதித் தொகை தீர்மானிக்கப்பட்டது. ஆயினும், இந்நிலை தொடர்ந்து நீடிக்கவில்லை. இலங்கைப் பாடசாலைகளில் இலவசக் கல்வியும் போதனா மொர்ழியாகத் தாய்மொழியும் அறிமுகமானதால், தாய்மொழியில் உயர் கல்வியை நாடியோர் தொகை அதிகரிக்கலாயிற்று. அதுமட்டுமின்றி, உயர்கல்வியைத் தாய் மொழியில் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் விடுக்கப்படலாயிற்று. சந்தர்ப்பவசமாக உயர்கல்வியைப் பெறத் தகுதியுடைய யாவருக்கும் அதனை வழங்க வேண்டும் என்ற முடிவுக்கும் அரசாங்கம் முன் வந்தது. தேவையானவிடத்து உயர்கல்வியை வெளிவாரிப் பரீட்சைகள் மூலமும் வழங்கப்படலாம் என்ற கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

இப்பின்னணியின் விளைவே வித்தியோதய வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்களின் தோற்றத்துக்கு வழிவகுத்தன. 1942 ஆம் ஆண்டுப் பல்கலைக்கழகச் சட்டத்தை அடியொற்றி, 1958 ஆண்டிலே கொண்டுவரப்பட்ட 45 இலக்க வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக்கழகச் சட்டத்தின் அடிப்படையில், 1959 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இவை நிறுவப்பட்டன.

வித்தியோதயவும், வித்தியாலங்காரவும் பிரிவேனாக்களாக ஆரம்பிக்கப்பட்டன. இவை பௌத்த மதக் கல்விக்கு முக்கியத் துவமளித்துவந்தன. ஆதலினால் பல்கலைக்கழகங்களாக மாற்றப்பட்ட பின்னரும், சமயம், கலாசார பாரம்பரியங்கள் மற்றும் மொழி போன்றவற்றைப் பேண வேண்டிய பொறுப்பை இவை ஏற்றுக்கொண்டன. இப்பல்கலைக்

கழகங்களிலே பெண்கள் சேர்ந்து கல்வி பயிலக் கூடாது, துணைவேந்தர் ஒரு பிக்குவாக இருக்க வேண்டும் எனச் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் அவை நீக்கப்பட்டுவிட்டன. இப்பொழுது இவையிரண்டும் முறையே ஸ்ரீ. ஜயவர்தன, களனிப் பல்கலைக்கழகங்கள் எனப் பெயர் பெயறுகின்றன.

தொடர்ந்து, 1966 இல் இலங்கையின் கல்வி, கலாசார அமைச்சு ஏற்படுத்தியிருந்த உயர் கல்விச் சட்டத்திற்கு (20 ஆம் இலக்கச் சட்டம்) அமைய தேசிய உயர் கல்விச் சபை (NCHE) அமைக்கப்பட்டது. இச்சபை பல்கலைக்கழகங்களுக்கிடையே ஒருமைப்பாடு, மாணவர் அனுமதி, பல்கலைக்கழக உத்தியோகத்தர் நியமனங்கள், நிதி முகாமைத்துவம் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதை நோக்கமாகக் கொண்டது. தேசிய உயர் கல்விச் சபையின் சிபாரிசின் பேரிலேயே 1967 ஆம் ஆண்டில் கொழும்புப் பல்கலைக்கழகம் தனிப் பல்கலைக்கழகமாக நிறுவப்பட்டது.

தேசிய உயர்கல்விச் சபை பல்கலைக்கழக அமைப்பிலே ஏற்படுத்த இருந்த மாற்றங்களுக்குப் பதிலாக, அது பல்கலைக்கழகத்தின் தன்னாதிக்கத்தை இயன்றளவு குறைக்க முனைந்தமையால், காலப்போக்கில் நன்மதிப்பை இழந்தது.

மீண்டும் 1972 இல் இயற்றப்பட்ட 1 ஆம் இலக்கப் பல்கலைக்கழகச் சட்டம் பல்கலைக்கழக அமைப்பில் மேலும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைந்தது. ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த 4 பல்கலைக்கழகங்களும், கட்டுபெத்த உயர் தொழில்நுட்பக் கல்லூரியும் ஒன்றிணைக்கப்பட்டு இலங்கைப் பல்கலைக்கழகம் என்ற ஒரே அமைப்பின் கீழ் 5 வளாகங்களாக மாற்றஞ்செய்யப்பட்டன. ஒரே பல்கலைக்கழக அமைப்பின் கீழ் நிருவாக ரீதியாகப் பெற்றிருந்த அதிகாரங்கள் மத்தியப்பட்டிருந்த நிலைமை இப் பல்கலைக்கழகங்களின் தனித்தன்மையை இழக்கச் செய்தது. பல்கலைக்கழக மாணவர்களும் ஆசிரியர்களும் தூர விலகியிருந்தார்கள். போதனா பீடங்கள் சம்பந்தமாக ஏற்பட்ட மாற்றங்களினால் பல்கலைக்கழக ஆசிரியர்களிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்பின.

ஆயினும், இக்காலப்பகுதியில் இரண்டு புதிய வளாகங்கள் தோன்றியமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண வளாகம் தோற்றம் பெற்றது. மற்றும் கட்டுபெத்த வளாகத்தையும் குறிப்பிடலாம். 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டப்படி, மொறட்டுவ (கட்டு பெத்த) தனிப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டது.

மேற்கூறிய சட்டத்திற்கிணங்க 1979ல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் தனிப் பல்கலைக்கழகமாக மாறிக் கொண்டது. இதுபோன்று தென்பகுதியில் றுகுணுப் பல்கலைக்கழகமும், முதலில் ஒரு வளாகமாக ஆரம்பிக்கப்பட்டு, உயர் கல்வியமைச்சின் பணிப்பின் பேரில் 1979 இல் தனிப் பல்கலைக்கழகமானது. 1981 ஆகஸ்ட் மாதம் ஒரு பல்கலைக்கழகக் கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகம் 1986 அக்டோபரில் தனிப் பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெற்றது.

இலங்கையின் திறந்த பல்கலைக்கழகம் 1980 மே மாதத்தில் தொடக்கிவைக்கப்பட்டது. இலங்கையின் ஏனைய பல்கலைக் கழகங்கள் நடாத்திவந்த வெளிவாரிப் பட்டப்படிப்புகளை நெறிப்படுத்துவதே திறந்த பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நோக்கமாக இருந்தது. ஆயினும், வெளிவாரிப் பட்டப் பரீட்சைகளை நடத்தும் பொறுப்பு முறையே கொழும்பு, பேராதனை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டமையால், ஏனைய பல்கலைக்கழகங்கள் போல இயங்கக் கூடிய அதிகாரம் திறந்த பல்கலைக்கழகத்துக்கும் கிடைத்தது. மீண்டும் 1990 இல் திறந்த பல்கலைக்கழக அமைப்பில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டமையால், அதனுடைய சேவைகள் பல்கலைக்கழக அனுமதி பெறுதற்குரிய தகுதி பெற்றும், அந்த வாய்ப்பை இழந்தவர்களுக்கு அவர்களுடைய வாழ்க்கைக் காலத்தின் எக்கட்டத்திலும் கல்வியைப் பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## பல்கலைக்கழகப் போதனா பீடங்களின் விரிவாக்கம்

1942 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டபொழுது, ஆரம்பத்தில் கீழைத்தேய மொழிகள், கலை, விஞ்ஞானம், மருத்துவம் ஆகிய 4 போதனா பீடங்களே, இடம்பெற்றிருந்தன. இந்நான்கு பீடங்களும் சில கல்வித் துறைகளையும் உள்ளடக்கியிருந்தன. 1950இல் பொறியியல் போதனா பீடமும் 1953இல் விவசாயம், மிருக வைத்தியப் போதனா பீடமும் உருவாயின. ஏறக்குறைய 20 ஆண்டுகளாக இந்த 6 போதனா பீடங்களுமே இலங்கைப் பல்கலைக்கழகத்தில் (பேராதனைப் பல்கலைக்கழகத்தில்) இயங்கி வந்தன.

இலங்கைப் பல்கலைக்கழகக் கொழும்புப் பிரிவில் மருத்துவம், விஞ்ஞானம், கீழைத்தேய மொழிகள், கலை, சட்டம் ஆகிய போதனா பீடங்கள் இடம் பெற்றிருந்தன. ஆயினும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இருந்த அத்தனை கல்வித் துறைகளும் கொழும்பில் இடம்பெற்றிருக்கவில்லை.

பேராதனை, கொழும்பு ஆகிய இரு பல்கலைக்கழகங்களிலும் உள்ள கலை மற்றும் கீழைத்தேய மொழிகள் போதனா பீடங்களிலேயே பெருந்தொகையான மாணவர்கள் (68.9%) கல்வியைத் தொடர்ந்தனர். அதனை அடுத்து மருத்துவம் (16.2%), விஞ்ஞானம் (7.9%), பொறியியல் (5.6%), விவசாயம், மிருக வைத்தியம் '(1.4%) என்ற ஒழுங்கில் அமைந்தது. குறிப்பாகக் கலைப்போதனா பீட மாணவர் தொகை 1960 -1965 இடைப்பட்ட காலப் பகுதியில் 4 மடங்காகப் பெருகியது. கலைப் பீடத்தில் ஆங்கில மொழியில் மட்டுமல்லாது தாய்மொழி மூலமும் கல்வியைப் பெறக் கூடிய சந்தர்ப்பம், மாணவர் அனுமதித் தொகையை இவ்வாறு அதிகரிக்கச் செய்தது.

1958 ஆம் ஆண்டில், பேராசிரியர் நீதாம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆணைக் குழுவினர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தொழிற்பாடுகள் பற்றிய அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்பட்டிருந்தனர். 1959 இன் 23 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழக ஆணைக் குழு

அறிக்கையில் பல்கலைக்கழக நிருவாகம், நிதி, கற்பித்தல், கல்வியமைப்பு, பரீட்சைகள், ஆராய்ச்சி, பல்கலைக்கழக விரிவு, மாணவர் வசதி, பல்கலைக்கழக சேவை என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறு விதந்துரைகளை நீதாம் குழுவினர் குறிப்பிட்டிருந்தனர். ஆயினும், இந்த அறிக்கையின் மீது அவ்வளவு தூரம் அரசாங்கமும் பல்கலைக்கழகமும் அக்கறை காட்டவில்லை என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதாம் ஆணைக் குழுவினர் சமர்ப்பித்த ஓர் இடைக்கால அறிக்கையிலே, இலங்கைப் பல்கலைக்கழகம் வெளிவாரிப் பட்டங்களையும் வழங்க வேண்டும் என்றும் அதன் தரம் உள்வாரிப் பட்டப்படிப்பின் தரத்தினை ஒத்ததாக இருக்கவேண்டும் எனவும் விதந்துரைத்தனர். இவ்வாறான ஒரு கருத்தை 1945இல் எஸ்.டபிஸ்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவும் வலியுறுத்தியிருந்தார். ஆகவே 1962இன் 12 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக்கழகச் சட்டத்தின்படி, வெளிவாரிப் பட்டப் படிப்புகளை நடத்துவதற்கான அவசியமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

1972-1978 ஆண்டு காலப் பகுதியில், ஒரே பல்கலைக்கழக அமைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்குகளினால் போதனாபீட ஒழுங்குகளும் குறிப்பிடத்தக்கவாறு மாற்றமுற்றன. சில பல்கலைக்கழகங்களிலே இயங்கிவந்த போதனா பீடங்களை மூடிவிடவும், அவற்றை வேறு பல்கலைக்கழகங்களிலே புதிதாகத் திறப்பதற்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சிகள், பல்கலைக்கழகங்களின் அதிருப்திக்கு இடமளித்தன.

இக்காலப் பகுதியில் பல்கலைக்கழகக் கல்வி பற்றி நிலவியிருந்த இன்னொரு கருத்தினை அவதானத்திற் கொள்ள வேண்டும். பல்கலைக்கழகங்கள் நூற்கல்விக்கு முக்கியத்துவங் கொடுக்கும் அதேவேளையில், நாட்டின் அபிவிருத்தித் தேவையையும் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்க வேண்டும். 1971 இல் இடம் பெற்ற இளைஞர் கிளர்ச்சி காரணமாக, 1970 களில் பல்கலைக்கழகக் கல்வி பெரும் சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

இதுகால வரையில் இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பெருமளவில் கலைப்பட்டதாரிகளையே உருவாக்கி வந்தன. திட்டமிடப்படாத பல்கலைக்கழகக் கல்வி விரிவினால் பட்டதாரிகள் மத்தியில் வேலையின்மைப் பிரச்சினை விஸ்வ ரூபமெடுத்தது. வேலை வழங்கும் துறைகளுக்கும் பல்கலைக்கழகப் பட்டங்களுக்குமிடையே பாரிய இடைவெளியேற்பட்டது. இவை கவனத்துக்கு எடுக்கப்பட்டு, பல்கலைக்கழகக் கல்வி நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளுக்கும் பயன்படுமாறு திட்டமிடப்பட வேண்டும் என கருதப்படலாயிற்று. 1972 இன் இலங்கை ஐந்தாண்டுத் திட்டம், முக்கியமாகக் கலை, விஞ்ஞான போதனாபீடக் கற்கை நெறிகளில் பிரயோக அறிவுடன் கூடிய கற்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டு திட்டங்களை வரைந்தது. மற்றும் 1972 ஆம் ஆண்டின் கல்விச் சட்டமும் தொழிலை அடிப்படையாகக் கொண்ட கற்கை நெறிகளைப் பல்கலைக்கழகங்களிலே வழங்குதற்குரிய வசதிகளைச் செய்து கொடுக்க வழிகோலியது.

தொழிலுக்கு வழிகாட்டும் கற்கை நெறிகளில் பொது நிதியும் வரி விதிப்பும், நூலக விஞ்ஞானம், கல்வி, பெருந்தோட்ட முகாமைத்துவம், அபிவிருத்திக் கற்கை நெறிகள், வெகுசனத்தொடர்புகள், வணிகமும் முகாமைத்துவமும் போன்றவை முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை சம்பந்தமான வேலையனுபவங்களைப் பெற்றுக்கொள்ள, அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் நிறுவனங்களில் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. கொழும்பு, ஸ்ரீஜயவர்த்தனபுர, களனிப் பல்கலைக்கழகங்களின் வளாகங்களில் இக்கற்கை நெறிகளை ஆரம்பிக்கும் ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

ஆயினும், இவ்வாறான கற்கை நெறிகளின் மூலம் எதிர்பார்த்த பலன்கள் கிட்டவில்லை. கற்கை நெறிகளுக்கான நிதி ஏற்பாடுகள், நாட்டின் விரிவடைந்து செல்லும் தொழில் வாய்ப்புகளைக் கருத்திற் கொள்ளாது பாடத் திட்டம், பாட உள்ளடக்கம் அமைக்கப்பட்டிருந்தமை, வரையறுக்கப்பட்ட அனுபவங்கள், கற்கை நெறிகளை நிறைவு செய்த பின்

எதிர்பார்த்த துறைகளில் வேலைவாய்ப்புகள் கிடைக்காத நிலை, நேர்முகப் பரீட்சைகளில் குறிப்பிட்ட பட்டதாரிகளை கவனத்திற்கு எடுக்காமல் விடப்பட்டவை போன்ற காரணங்களால், இக்கற்கை நெறிகளைப் பயின்றவர்களிடம் விரக்தி நிலை தோன்றியது. ஆகவே தொழிலுக்கு வழிகாட்டும் கற்கை நெறிகளை மீளாய்வு செய்யவேண்டிய நிலை தோன்றிற்று, இக்கட்டத்திலே ஏற்பட்ட ஆட்சிமாற்றம் பல்கலைக்கழகக் கல்வியில் இடம்பெறும் கற்கை நெறிகளையும், ஏனைய ஒழுங்கீனங்களையும் கூடிய கவனத்திற்கு எடுத்துக்கொண்டது.

தேசிய உயர் கல்வி ஆணைக் குழுவுக்குப் பதிலாகப் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு 1978 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இக்குழு ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் இடம்பெற வேண்டிய கற்கை நெறிகள், போதனா பீடங்கள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதில் திட்டமிட்டுச் செயலாற்றுகிறது. மானிய ஆணைக் குழுவின் நெறிப்படுத்தலின் கீழ் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றிலும் தற்பொழுது இடம்பெறும் போதனா பீடங்களையும் அவற்றுள் அடங்கும் கற்கை நெறிகள், அவற்றின் எண்ணிக்கை ஆகியவற்றை அட்டவணை I இல் தரப்பட்டுள்ளன.

அண்மைக் காலங்களில் பல்கலைக்கழக அனுமதியில் காணப்படும் பிரச்சினைகள் நாம் எல்லோரும் அறிந்தவையே. இவ் அனுமதியில் பிரதேச, மொழி அடிப்படையில் நிலவிவந்த வேறுபாடுகளைக் கருத்திற்கொண்டு மாவட்டப் பங்கீட்டு முறையை அறிமுகஞ் செய்தனர். மாவட்டப் பங்கீட்டு முறை ஓரளவுக்கு மாணவர்களின் திறமையைப் புறக்கணித்தது. ஆகவே திறமையுள்ள மாணவர்களுக்குக் கூடிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்ற அடிப்படையில் தற்பொழுது திறமைக்கு 40 விகிதமும் மாவட்ட அடிப்படையில் 55 விகிதமும், பின்தங்கிய மாவட்டங்களுக்கு 5 விகிதமும் அனுமதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அண்மைய வருடங்களில் சராசரியாக 6000 மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி பெற்று வருகின்றனர். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் சேரும் மாணவர் தொகையை அட்டவணை II குறிப்பிடுகிறது.

## அட்டவணை I
### பல்கலைக் கழகப் போதனாபீடங்களில் கற்கைநெறித்துறைகளின் எண்ணிக்கைகள், 1990

| போதனா பீடம் | பேராதனை | கொழும்பு | ஸ்ரீ ஜெயவர் தனபுர | களனி | மொறட் டுவை | யாழ்ப் பாணம் | ருகுணு | கிழக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| கலை | 14 | 08 | 07 | - | - | 13 | - | - |
| விஞ்ஞானம் | 6 | 07 | 04 | 07 | - | 05 | 06 | 04 |
| மருத்துவம் | 14 | 14 | - | - | - | 12 | 12 | - |
| சட்டம் | - | 01 | - | - | - | - | - | - |
| கல்வி | - | 04 | - | - | - | - | - | - |
| பொறியியல் | 07 | - | - | - | 10 | - | - | - |
| பல் வைத்தியம் | 06 | - | - | - | - | - | - | - |
| விவசாயம் | 07 | - | - | - | - | 06 | 03 | 03 |
| மிருக வைத்தியம் | 03 | - | - | - | - | - | - | - |
| சமூக விஞ்ஞானம் | - | - | - | 08 | - | - | 04 | - |
| மனிதப் பண்பாட்டியல் | - | - | - | 08 | - | - | - | 03 |
| வணிகமும் முகாமைத்துவமும் | - | - | 04 | - | - | - | - | 03 |
| கட்டிடக் கலை | - | - | - | - | 03 | - | - | - |
| பட்டதாரிகள் கற்கை நெறி | 01 | 01 | - | - | - | - | - | - |
| மொத்தம் | 58 | 35 | 15 | 23 | 13 | 36 | 25 | 16 |

ஆதாரம் : இலங்கைப் பல்கலைக் கழகங்கள் கையேடு - 1991 - பல்கலைக்கழக மானியங்கள் குழு

அட்டவணை : II

வருடாந்த மாணவர் அனுமதி (1988 - 89)

| பல்கலைக்கழகம் | மாணவர் தொகை |
|---|---|
| கொழும்பு | 1178 |
| பேராதனை | 1315 |
| ஸ்ரீ ஜெயவர்த்தனபுர | 954 |
| களனி | 753 |
| மொறட்டுவ | 340 |
| யாழ்ப்பாணம் | 653 |
| றுகுணு | 756 |
| கிழக்கு | 194 |
| மொத்தம் | 6143 |

ஆதாரம் : இலங்கைப் பல்கலைக்கழகங்கள் கையேடு -1991.

மற்றும் போதனர்பீட அடிப்படையில் பல்கலைக் கழகங்களில் பதிவாகியுள்ள மாணவர்களின் தொகையை அட்டவணை III எடுத்துக்காட்டுகின்றது.

இப்பல்கலைக்கழகங்களிலே 5 பட்டப் பின்படிப்பு நிறுவனங்களும் இணைந்த வகையில் செயலாற்றி வருகின்றன. அவை பற்றிய விபரங்கள் பின்வருமாறு: பட்டப்பின்படிப்பு நிறுவனங்களில் மொத்தமாக 835 பேர் பதிவு செய்துள்ளனர்.

| பட்டப் பின்படிப்பு நிறுவனம் | பல்கலைக்கழகம் | ஆரம்பித்த ஆண்டு |
|---|---|---|
| விவசாயம் | பேராதனை | 1974 |
| மருத்துவம் | கொழும்பு | 1974 |
| பாளி, பௌத்த கல்வி | களனி | 1977 |
| தொல் பொருளியல் | களனி | 1986 |
| முகாமைத்துவம் | ஸ்ரீ ஜெயவர்த்தனபுர | 1986 |

## அட்டவணை III

### இலங்கைப் பல்கலைக் கழகங்களின் போதனாபீடங்களில் கல்விபயிலும் மாணவர் தொகை (1988-89)

| போதனா பீடம் | பேராதனை | கொழும்பு | ஸ்ரீ ஜெயவர்தனபுர | களனி | மொறட்டுவை | யாழ்ப்பாணம் | ருகுணு | கிழக்கு |
|---|---|---|---|---|---|---|---|---|
| கலை | 2283 | 2642 | 1710 | - | - | 1259 | - | 97 |
| விஞ்ஞானம் | 895 | 1260 | 667 | 921 | - | 572 | 1028 | 197 |
| மருத்துவம் | 614 | 1336 | - | - | - | 346 | 613 | - |
| சட்டம் | - | 970 | - | - | - | - | - | - |
| கல்வி | - | - | - | - | - | - | - | - |
| பொறியியல் | 1535 | - | - | - | 285 | - | - | - |
| பல் வைத்தியம் | 415 | - | - | - | - | - | - | - |
| விவசாயம் | 842 | - | - | - | - | - | 256 | 99 |
| மிருக வைத்தியம் | 283 | - | - | - | - | - | - | - |
| சமூக விஞ்ஞானம் | - | - | - | 2908 | - | - | 1543 | - |
| மனிதப் பண்பாட்டியல் | - | - | - | | - | - | | 83 |
| வணிகமும் முகாமைத்துவமும் | - | - | 2652 | - | - | - | - | - |
| கட்டிடக் கலை | - | - | - | - | 1520 | - | - | - |
| பட்டதாரிகள் கற்கை நெறி | - | - | - | - | - | - | - | - |
| மொத்தம் | 6817 | 6208 | 5029 | 3829 | 1805 | 2177 | 3440 | 476 |

ஆதாரம் : இலங்கைப் பல்கலைக் கழகங்கள் கையேடு : 1991

இவற்றைப் போன்று அழகியற் கல்வி நிறுவனம் களனிப் பல்கலைக்கழகத்துடனும், ஆயுர்வேத மருத்துவ நிறுவனம், தொழிலாளர் கல்வி நிறுவனம், கணனி தொழில்நுட்பவியல் நிறுவனம் ஆகியன கொழும்புப் பல்கலைக்கழகத்துடனும் சேர்ந்து செயற்படுகின்றன. இந்த நிறுவனங்களிலும் 1875 மாணவர்கள் கல்வியைத் தொடருகின்றனர்.

உயர் கல்வியைப் பொறுத்துத் திறந்த பல்கலைக்கழகத்திள் பங்களிப்பும் முக்கியத்துவம் வாய்ந்தது. திறந்த பல்கலைக்கழகத்திலே மனிதப் பண்பியலும் சமூக விஞ்ஞானமும், இயற்கை விஞ்ஞானம், பொறியியல், தொழில்நுட்பங்கள் ஆகிய போதனா பீடங்கள் மூலம் தகுதிச் சான்றிதழ் கற்கை நெறிகளையும், பட்டதாரிக் கற்கை நெறிகளையும் நடத்தி வருகின்றது. இது ஏறக்குறைய 10,000 பேருக்கு கல்வி வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

**சாதனைகள்**

1942 ல் ஏறத்தாழ 900 மாணவர்களைக் கொண்ட ஒரே ஒரு பல்கலைக்கழகம் நாட்டில் இருந்தது. பெருமளவுக்கு உயர் மத்திய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் ஆங்கில மொழி மூலமாக அங்கு உயர் கல்வி பெற்றனர். மருத்துவம், கலை, விஞ்ஞானம் போன்ற துறைகளில் மட்டுமே அங்கு கல்வி வழங்கப்பட்டது. வெளிநாட்டு ஆசிரியர்களும் அங்கு பணிபுரிந்தனர். மேலை நாட்டுக் கல்வி மரபையொட்டி உயர்கல்வி மிகச் சிலருக்கே வழங்கப்பட்டது.

ஆயினும், இன்று இந்நிலைமையில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று திறந்த பல்கலைக்கழகம் உட்பட நாட்டில் ஒன்பது பல்கலைக்கழகங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஐந்து கொழும்பிலும், அதற்கு அண்மையிலும் அமைந்துள்ளன. இவை தவிர, வடக்கு, கிழக்கு, தென், மத்திய மாகாணங்களில் ஒவ்வொரு பல்கலைக்கழகம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் அண்மையில் ஒவ்வொரு மாகாணத்திலும் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு மாகாணக் கல்லூரி அமைக்கப்படல் வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இவை யாவும் பல்கலைக்கழகக் கல்வி

தலைநகரையும், நகர்ப்புறத்தையும் மட்டும் மையமாகக் கொண்டமையாது உயர்கல்வியின் பிராந்தியரீதியான வளர்ச்சிக்கு வழிகோலும் எனக் கொள்ள முடியும். தூர இடங்களில் உள்ளவர்கள் உயர்கல்வி பயில தலைநகருக்குத்தான் வரவேண்டுமென்ற கட்டாயமில்லை.

கடந்த ஐம்பதாண்டுகளில் உயர் கல்வித் துறைகள் பல வளர்ச்சி பெற்றுள்ளன. மருத்துவக் கல்வி இன்று ஐந்து பல்கலைக்கழகங்களில் இடம் பெற்றுள்ளது. அவ்வாறே விஞ்ஞானக் கல்வியும் ஆறு பல்கலைக்கழகங்களில் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயக் கல்வி மூன்று பல்கலைக்கழகங்களில் இடம் பெற்று வருகிறது. வணிகவியல், முகாமைத்துவம், கல்வியியல் போன்ற துறைகளிலும் கல்வி வழங்கப்படுகிறது. உள்ளூர் மருத்துவம், அழகியல், தொழிலாளர் கல்வி, இசை போன்ற துறைகளுக்கென பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்பட்ட பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்பவியலுக்கென்று விசேடமாக மொரட்டுவ பல்கலைக்கழகம் உருவாக் கப்பட்டுள்ளது.

ஆரம்பம் தொடக்கம் பல்கலைக்கழகக் கல்வி பட்ட மேற்படிப்புத் துறையில் அதிக அக்கறை செலுத்தவில்லை. உயர்பட்டம் (முதுமானி, கலாநிதி) பெற விரும்புவோர் வெளி நாட்டுக்கே செல்ல வேண்டியிருந்தது. இதனால் பெரும்பாலான பல்கலைக்கழக ஆசிரியர்களும், அரசாங்க உயர்நிலைப் பதவியாளர்களும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் விடுமுறை பெற்று வெளிநாடுகளில் பயில வேண்டியதாயிற்று. ஆயினும் இன்று இரசாயனவியல், மருத்துவம், கல்வியியல் போன்ற துறைசார்ந்த பட்டமேற்படிப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை ஒரு முக்கிய வளர்ச்சியாகும். அத்துடன் சட்டம், பொருளியல், வரலாறு, புவியியல் மற்றும் விஞ்ஞானத் துறைகளுக்கென்று விசேடமான மேற்படிப்பு நிலையங்கள் இல்லாவிட்டாலும் மேற்படிப்புக்கான சில ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உலகளாவிய ரீதியாக பல்கலைக்கழகங்களுக்கு இருவகையான தொழிற்பாடுகள் உண்டு. முதலாவது, கற்பித்தற் தொழிற்பாடு, அதாவது உயர்தரமான பல்துறை சார்ந்த அறிவினை இளைஞர் மத்தியில் பரப்புதல். இரண்டாவது,

ஆராய்ச்சித் தொழிற்பாடு, அதாவது புதிய அறிவினைத் தேடலும் உருவாக்குதலும். இவற்றை teaching and research functions என்பர். இலங்கைப் பல்கலைக்கழகக் கல்வி நீண்ட காலமாகக் கற்பித்தற் பணியிலேயே கவனம் செலுத்திவந்தது. முதல்பட்டம் பெறும் மாணவர்களுக்கு மட்டும் கல்வி வழங்கப்பட்டது. இலங்கைப் புவியியல், சமூகவியல், மானிடவியல், வரலாறு, பொருளியல், சட்டவியல் போன்ற அறிவுத் துறைகளில் மட்டுமன்றி தமிழ், சிங்கள மொழிகள் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்வதற்கு இலங்கை மாணவர்கள் மேலைநாட்டு பல்கலைக்கழகங்களுக்கே செல்ல வேண்டியிருந்தது. குறிப்பாகப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் இலங்கை பற்றிய இவ்வாய்வுகளை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலேயே செய்தனர். தமிழ் மொழி இலக்கிய ஆய்வினை மட்டும் எடுத்து நோக்குமிடத்து கலித்தொகை, தமிழரின் வீரயுக இலக்கியம், தமிழரின் பண்பாடு மற்றும் மொழியியல், இலக்கணம் பற்றிய ஆய்வுகளை, இலங்கையர் பிரித்தானிய பல்கலைக் கழகங்களிலேயே செய்தனர். ஆயினும், காலப்போக்கில் பட்ட மேற்படிப்புக்கான நிறுவனங்களும் ஏற்பாடுகளும் பல்வேறு பல்கலைக்கழகங்ளில் உருவாக்கப்பட்டமையால், ஆராய்ச்சிப் பணிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை ஒரு முக்கிய முன்னேற்றமாகும்.

பல்கலைக்கழகக் கல்வி தொடங்கிய காலத்தில் இருந்து ஏறத்தாழ நான்கு தசாப்தங்களாக பல்கலைக்கழக மாணவர்களில் எழுபது வீதமானவர்கள் கலைத் துறைகளில் கல்வி பயின்றனர். பல்கலைக்கழகக் கல்வி என்பது பெருமளவுக்குக் கலைத் துறைக் கல்வியாக இருந்தமை ஒரு குறைபாடாகக் கூறப்பட்டது. ஆயினும், இன்று விஞ்ஞானத் துறைகள் விரிவு பெற்றுள்ளன. பல்கலைக்கழக மாணவர்களில் ஏறத்தாழ அறுபது வீதத்துக்கு மேற்பட்டவர்கள் விஞ்ஞான பாட நெறிகளை பயிலுகின்ற நிலை ஒரு முன்னேற்றமாகும்.

ஆரம்ப காலங்களில் உயர் மத்திய வகுப்பினரின் பிள்ளைகளே பல்கலைக்கழகக் கல்வியைப் பெற முடிந்தது. உயர் கல்விபெற கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. மேலும், ஆங்கில மொழியே பல்கலைக்கழகங்களில் போதனா

மொழியாக இருந்தது. இந்நிலைமை உயர் மத்திய வகுப்பினர் மட்டுமே உயர் கல்வி பெற சாதகமாக இருந்தது.

1942 ஆம் ஆண்டின் பின்னர் பல்கலைக்கழகக் கல்வியில் சில முக்கிய மாற்றங்கள் ஏற்பட்டன.

1. 1945 ஆம் ஆண்டின் பின்னர் பல்கலைக்கழகக் கல்வி இலவசமாக வழங்கப்பட்டது. இன்று பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்குப் பல்வேறு புலமைப் பரிசில்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் அவர்களுக்கு சில வங்கிக் கடன்களும் வழங்கப்பட்டன.

2. 1960 ஆம் ஆண்டு தொடக்கம் பல்கலைக்கழகக் கலைத்துறை பாடங்களை சுயமொழிகளில் கற்க அனுமதி வழங்கப்பட்டது. அதன்பின்னர் க.பொ.த. உயர்நிலை விஞ்ஞான வகுப்புகளிலும் சுயமொழிகளில் விஞ்ஞான பாடங்கள் கற்பிக்கப்பட்டன. மாணவர்கள் உயர் கல்வி பெற ஆங்கில மொழி ஒரு தடையாக இருந்த நிலைமை இவ்வாறு படிப்படியாக நீக்கப்பட்டது. மருத்துவம், பொறியியல் போன்ற துறைகளில் பயில பல்கலைக்கழகம் சென்றோர் பாடசாலைகளில் சுயமொழிகளிலேயே கல்வி பயின்றிருந்தனர்.

இவ்வாறான இரு சீர்திருத்தங்களும் வெறுமனே கல்வித்துறை சார்ந்தவையாக மட்டும் இருக்கவில்லை. இச்சீர்திருத்தங்கள் உயர் கல்வியை சனநாயகமயப்படுத்தின; உயர் கல்வி வாய்ப்புகளை சாதாரண வகுப்பினருக்கு நன்மை தரும் வகையில் விரிவு செய்தன. இவ்வகையில் இவ்விரு சீர்திருத்தங்களும் இலங்கையின் அபிவிருத்திக்கான தலையாய சமூக சீர்திருத்த முயற்சிகள் என்றே கொள்ளுதல் வேண்டும். இச்சீர்திருத்தங்களின் விளைவுகளை இன்று நன்கு காண முடிகிறது. 1980களில் செய்யப்பட்ட பல ஆய்வுகளின்படி பல்கலைக்கழக மாணவர்கள் பலதரப்பட்ட சமூக, பொருளாதார வகுப்புகளைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களின் பிரதிநிதித்துவம் கணிசமானதாக இருந்தமை பல்கலைக்கழக வளர்ச்சியின் ஒரு முக்கிய சாதனையாகும்.

**பிரச்சினைகள்**

ஆசியப் பிராந்தியத்தில் இலங்கையின் பாடசாலைக் கல்வி வளர்ச்சி, குறிப்பாக 1960களில் ஜப்பானுக்கு அடுத்தபடியாக இருந்தது. (இன்று தைவான், தென்கொரியா, மலேசியா போன்ற புதிய கைத்தொழில் நாடுகள் இலங்கையை முந்திவிட்டன) ஆயினும், பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சியில் இலங்கை ஒரு பின்தங்கிய நாடென்றே கொள்ளுதல் வேண்டும். ஆசியப் பிராந்தியத்தில் லாவோஸ், ஆப்கானிஸ்தான் ஆகிய இரு பின்தங்கிய நாடுகளைப் பொறுத்தவரையில் மட்டுமே இலங்கை முன்னணியில் இருக்கின்றது.

1960களில் பாடசாலைக் கல்வி துரிதமாக விரிவு பெற்றது. அவ்வாறே க.பொ.த. உயர்நிலையில் பயிலுவோர் தொகையும் அதிகரித்தது. ஆனால் இவ்வாறான அதிகரிப்புக்கு ஏற்ப பல்கலைக்கழகக் கல்வி விரிவு செய்யப்படாமையால் உயர் கல்வித்துறையில் மட்டுமின்றி இலங்கையின் தேசிய வாழ்விலும் பல வருந்தத்தக்க நிகழ்வுகள் ஏற்பட்டன. எடுத்துக்காட்டாக, 1,50,000 மாணவர்கள் க.பொ.த உயர்நிலைப் பரீட்சைக்கு அமர்ந்தவிடத்து, அவர்களில் 6500 பேருக்கு மட்டுமே பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. ஏறத்தாழ 25,000 பேர் வரை பல்கலைக்கழக அனுமதி பெறும் தகுதிகளைப் பெற்றவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் அவர்களில் எண்பது வீதமானவர்கள் அனுமதிக்கப் படவில்லை. இதனால் உயர் கல்வியைப் பெருவிருப்புடன் நாடிய இளைஞர் மத்தியில் கடும் விரக்தி ஏற்பட்டது. நாட்டில் இளைஞர் பிரச்சினை உருவானமைக்கு ஒரு முக்கிய காரணம், உயர்கல்வி பெறும் உரிமை பெரும்பாலான இளைஞர்களுக்கு மறுக்கப்பட்டமையாகும் என்று இளைஞர் அமைதியின்மை பற்றி ஆராய்ந்த சனாதிபதி ஆணைக் குழு எடுத்துக் கூறியிருந்தது. பாடசாலைக் கல்வி விரிவு பெறக் காரணமாக இருந்தவர்களே, உயர் கல்வி விரிவு பெறுவதைக் கட்டுப்படுத்தக் காரணமாக இருந்து இளைஞர் அமைதியின்மைக்கு வழிகோலினர். இதனை உணர்ந்து இன்று அவசரஅவசரமாக 9000 மாணவர்களை அனுமதிக்கும் நோக்குடன் மாகாணக் கல்லூரிகள் திறக்கப்படுகின்றன.

மரபுவழிப் பல்கலைக்கழகங்களை விரிவு செய்வதில் பல சிரமங்கள் இருந்திருக்கலாம். உயர் கல்விக்கு முற்றாக மரபு வழிப் பல்கலைக்கழகங்களில் தங்கியிராது இணைக்கப்பட்ட கல்லூரிகள், தொழிற்துறைக் கல்லூரிகள், உயர்நிலை ஆசிரியர் கல்லூரிகள் போன்று "பல்வேறு வகைப்பட்ட" உயர் கல்வி நிலையங்களை நிறுவி உயர் கல்வியை விரிவுபடுத்தி பிரச்சினையை வெற்றிகரமாக எதிர்நோக்கியிருக்கலாம். ஆயினும் உயர் கல்வி வாய்ப்புகள் விரிவு செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தும் கொள்கையே கடைப்பிடிக்கப்பட்டது.

நுகேகொடயில் திறந்த பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது. பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறத் தகுதிபெற்றும் அனுமதி பெற முடியாதவர்களை இப்பல்கலைக்கழகத்தில் நேரடியாக சேர்த்துக்கொள்ளும் ஏற்பாடு எதுவும் இல்லை. பிற பல்கலைக் கழகங்களுக்கான மாணவர் அனுமதியைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு கட்டுப்படுத்துகிறது. ஆனால் திறந்த பல்கலைக்கழக மாணவர் அனுமதியை அப்பல்கலைக்கழகமே செய்கின்றது. இதிலொரு முக்கிய அம்சம், திறந்த பல்கலைக்கழகம் உயர் கல்வியை நேரடியாக நாடுவோரை (க.பொ.த. உயர்நிலைக் கல்வியை முடித்தவர்களை) கருத்திற்கொள்ளாது அவர்களுக்கு அப்பால் சென்று பிறர் மத்தியில் உயர் கல்விக்கான தேவையை அவர்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றது. திறந்த பல்கலைக்கழகக் கோட்பாடு வரவேற்கக் கூடியதே. ஆயினும் அப்பல்கலைக்கழகம் உயர் கல்வியை உடனடியாக நாடுவோருக்கு நேரடியான வாய்ப்புகளை வழங்குவது முறை சார்ந்த உயர்கல்வி வாய்ப்புகளை விரிவு செய்ய உதவும் என்பது எமது கருத்தாகும்.

இன்று பல பல்கலைக்கழகங்கள் வெளிவாரி பரீட்சைகளை நடாத்துகின்றன. வெளிவாரி மாணவர்களைப் பதிவு செய்தல், பரீட்சை நடாத்துதல், பட்டம் வழங்குதல் என்ற முறையில் இப்பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. இவ்வெளிவாரி மாணவர்கள் எப்படியாவது படித்துக் கொள்ளட்டும், எப்படியோ போகட்டும் என்ற மாற்றாந்தாய் மனப்பான்மையில் இப்பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. இந்தியப் பல்கலைக் கழகங்கள் போன்று இவ்வெளிவாரி மாணவர்களுக்கு கல்விச்

சேவையை வழங்கக் கூடிய அஞ்சல் மூல போதனா பீடங்களை ஏற்படுத்துவது நன்மை பயக்கும். இதனால் பல்கலைக் கழக அனுமதி பெறாதவர்கள் வெளிவாரி மாணவர்களாகச் சேர்ந்து உயர் கல்வி பெற விரும்பக் கூடும்.

உயர் கல்வித் துறை அனுமதி தொடர்ச்சியாக கட்டுப்படுத் தப்பட்டமையினால் பல பாரதூரமான பிரச்சினைகள் தோன்றின. மருத்துவம், பொறியியல் மற்றும் விஞ்ஞானத் துறைகள் விரிவுபடுத்தப்படவில்லை. மதிப்புமிக்க இப்பயிற்சி நெறிகளில் சேர விரும்பும் மாணவர் தொகை கணிசமாக அதிகரித்தது. இத்துறைகள் விரிவுபடுத்தப்படாமையால் அவற்றில் அனுமதிபெறும் தமிழ் மாணவர் தொகை அவர்களது இன விகிதாசாரத்துக்கு மேலாக செல்ல நேரிட்டது. இதன் காரணமாகவே புள்ளிகளை தரப்படுத்தும் முறை 1970 இல் தொடங்கப்பட்டது. மிகுந்த உயர் சித்திபெற்ற தமிழ் மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்ட நிலையில்தான் வடபகுதி இளைஞர் மத்தியில் தீவிரவாத அரசியல் தலை தூக்கியது என்று இன்றைய ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இன்று போருக்காகச் செலவிடப்படும் ஏராளமான பணத்தைக் கொண்டு, 1970களில் உயர் கல்வி வாய்ப்புகளை நன்கு விரிவு செய்து திறமை சித்தி பெற்ற அத்தனை மாணவர்களுக்கும் அனுமதி வழங்கியிருந்தால் இன்று இவ்வளவு பாரதூரமான சமூக, பொருளாதார இழப்பு ஏற்பட்டிராது என்று அவர்கள் கருதுகின்றனர்.

1970 தொடக்கம் அனுமதிக் கொள்கை ஆண்டுக்கு ஆண்டு மாற்றப்பட்டது. தரப்படுத்தல், மொழிவாரி தரப்படுத்தல், மாவட்ட அனுமதிப் பங்கு, பின்தங்கிய மாவட்டங்களுக்கு இட ஒதுக்கீடு, திறமை சித்தி பெற்றோருக்கு முப்பது வீத அனுமதி என்ற பல்வேறு அடிப்படைகள் மாறிமாறி அறிமுகம் செய்யப்பட்டன.

கடந்த 50 ஆண்டு காலப் பகுதியில் 1942 தொடக்கம் 1966 வரை பல்கலைக்கழக அமைப்பு ஒரு சீராக இயங்கிவந்தது. அதன்பின் அரசாங்க மாற்றங்களுக்கேற்ப பல்கலைக்கழக அமைப்பிலும் நிர்வாகத்திலும் மாறிமாறி பல சீர்திருத்தங்கள் புகுத்தப்பட்டன. இச்சீர்திருத்தங்கள் பல்கலைக்கழகங்களின்

ஆரோக்கியமான வளர்ச்சிக்குக் குந்தகம் விளைவித்தன எனலாம். 1965இல் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்துடன் உயர் கல்விக்குப் பொறுப்பான ஒரு தேசியப் பேரவை நிறுவப்பட்டது. சில கனிஷ்ட பல்கலைக்கழகங்களும் ஏற்படுத்தப்பட்டன. 1970 இல் அரசாங்கம் மாறிய பின்னர், தேசியப் பேரவையும் கனிஷ்ட பல்கலைக் கழகங்களும் ஒழிக்கப்பட்டன. சகல பல்கலைக்கழகங்களும் ஒரு பல்கலைக் கழக அமைப்பின் வளாகங்கள் ஆக்கப்பட்டன. அத்துடன் பல்கலைக்கழகங்களில் தொழில் சார்ந்த பயிற்சி நெறிகள் உருவாக்கப்பட்டன. பின்னர் 1977 ஆம் ஆண்டில் புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு நிறுவப்பட்டது. சுயாட்சித் தன்மையுடையனவாக பல்கலைக்கழகங்கள் மாற்றப்பட்டன. தொழில்சார் பயிற்சிநெறிகள் கைவிடப்பட்டன. பல்கலைக்கழகக் கல்விக் கொள்கையில் தொடர்ச்சியும் ஒரு சீர்த்தன்மையும் காணப்படவில்லை என்பதற்கு இவை சில எடுத்துக்காட்டுகளாகும்.

மொத்தத்தில், இன்று இலங்கையில் உருவாகியிருப்பது ஒப்பீட்டு ரீதியில் ஒரு சிறிய பல்கலைக்கழக அமைப்பாகும். எட்டுப் பல்கலைக்கழகங்களும் 20,000 மாணவர்களும் 1,700 ஆசிரியர்களும் இருக்கின்றார்கள். இச்சிறிய அமைப்பினைத் திறமையுடன் நடாத்துவதற்குப் போதிய ஆசிரியர்கள் இல்லை. விஞ்ஞானத் துறைகளில் ஆசிரியர் தட்டுப்பாடு மிக அதிகம். பல்கலைக் கழக ஆசிரியர் தொழிலில் கவர்ச்சி இன்று மங்கிவிட்டது. பல்கலைக்கழகங்கள் அறிவாற்றல் மிக்கவர்களை ஈர்க்கும் நிலையில் இல்லை; இழக்கும் நிலையிலேயே இருக்கின்றன. ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புகள் போதியதாக இல்லை. இந்நிலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மாகாணக் கல்லூரிகள் உயர் தகுதியும் அனுபவமும் கொண்ட ஆசிரியர்களைக் கவரும் என்றும் கூறுவதற்கில்லை. உயர் கல்வி வளர்ச்சிக்கான அச்சாணியாக இவர்கள் கருதப்பட்டு வங்கிகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறையினரை விட கூடிய ஊக்குவிப்புகள்

இவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். இல்லாவிடில் உயர்கல்வி வளர்ச்சி தேக்கமடைய நேரிடும்.

உயர் கல்வியை தேவைக்கேற்றவாறு விரிவு செய்ய ஒரு முக்கிய வழியுண்டு. உயர் கல்வியை பல்கலைக்கழகக் கல்வி, பல்கலைக்கழகமல்லாத உயர் கல்வி என்று இருவகையாகப் பிரிக்கமுடியும். பல்கலைக்கழகங்களுடன் நாட்டில் இருக்கின்ற ஏனைய தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் கல்லூரிகள் மற்றும் தொழிற்துறை கல்லூரிகளை 'உயர்கல்வி நிலையங்களாக' அங்கீகரிக்க வேண்டும். இன்று பல உயர் நிலைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் பல்கலைக்கழக ஆணைக் குழுவின் கீழ் வருகின்றன. க.பொ.த. உயர்நிலை சித்தி பெறுவோரை இவற்றில் ஏதேனுமொரு நிறுவனத்திற்கு, அவர்களின் தகைமைகளின் அடிப்படையில் அனுமதிக்கலாம். இன்று கல்வி அமைப்பின் கீழ் இயங்கும் உயர்நிலை நிறுவனங்களை ப. மா. ஆணைக் குழுவின் கீழ் கொண்டு வருவதால் அவை இயல்பாகவே உயர் கல்வி நிலையங்கள் என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட முடியும். இன்று ஏறத்தாழ 9,500 மாணவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழகக் கல்லூரிகளிலும் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாலோசனையின்படி ஏறத்தாழ 20,000 மாணவர்களை அனுமதிக்க முடியும்.

இன்று பல்வேறு சமூக பொருளாதார வகுப்புகளைச் சேர்ந்தவர்களுக்கு பல்கலைக்கழக வாய்ப்புகள் கிட்டுவதாக ஏற்கனவே கூறப்பட்டது. ஆயினும், குறிப்பாக இந்திய மரபு வழித் தமிழர் அனுமதி பெறுவது மிகக் குறைவு. இஸ்லாமியரின் நிலைமையும் அவ்வாறே இருந்து வந்தது. ஆயினும் அண்மைக்காலங்களில் அவர்களுடைய வாய்ப்புகள் கணிசமாகக் கூடியிருப்பது வரவேற்கத்தக்கது. சகல துறைசார்ந்த அனுமதியில் கடும் போட்டி நிலவினாலும் அவர்கள் கல்வியில் காட்டிய ஊக்கம் காரணமாக கலைத் துறை, வணிகவியல், சட்டவியல் போன்ற துறைகளில் அவர்களுடைய அனுமதி அதிகரித்துள்ளது. எனினும், விஞ்ஞானத் துறைகளில் அவர்கள் அனுமதி பின்தங்கியே உள்ளது. அனுமதிக் கொள்கைகள் அவர்களுக்கு சாதகமாக

இருப்பதாகக் கூறுவதற்கில்லை. ஆயினும், அவர்கள் கூடிய அவாவுடன் கல்வி பயிலுவதால் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்திய மரபுவழித் தமிழர் உயர் கல்வி அனுமதிக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்கள். உயர் கல்வி வாய்ப்புகள் விரிவு பெறும்போதுதான் அவர்களுடைய அனுமதியும் பெருகும். அனுமதி பெறும் 9500 பேரில் 500 மாணவராவது இந்திய மரபு வழித் தமிழராக இருத்தல் வேண்டும். ஆயினும், இன்றைய நிலையில் 200 பேராவது அனுமதி பெறுவது ஐயமாகும். ப. மா. ஆணைக் குழுவின் புள்ளி விபரக் கையேடு இந்திய மரபு வழித் தமிழரின் அனுமதி விபரங்களைத் தனியாகத் தராமலிருப்பது பெருங்குறைபாடாகும். இதனால் உண்மை நிலையை அறிய முடியாதுள்ளது. அத்துடன் அவர்கள் தொகை கணிசமாகக் குறைவோ என்ற பலத்த ஐயமும் ஏற்படுகிறது.

# 6

## மாகாணக் கல்லூரிகள்

இலங்கையில் 20,000 மாணவர்களையும், 1,700 ஆசிரியர்களையும் கொண்ட 'சிறிய' உயர் கல்வி அமைப்பு நிர்வகிக்கப்படுவதற்கு இலகுவாக இருக்கும் என்று பல அரசியல் தலைவர்கள் நம்பினர். எமது நாட்டின் .பாடசாலைக் கல்வி முறை பெரும்பாலான ஆசிய நாடுகளைக் காட்டிலும் பல அம்சங்களில் விரிவடைந்து சிறப்புற்றுக் காணப்பட்டது. ஆயினும், பல்கலைக் கழகக் கல்வி ஆசியாவில் பின்தங்கிய நாடுகளான ஆப்கானிஸ்தான், லாவோஸ் ஆகிய நாடுகளை விட மட்டுமே சற்று முன்னேறியதாகக் காணப்பட்டது. சுதந்திரத்தின்பின் பல்வேறு காரணங்களுக்காக இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வியின் விரிவு கட்டுப்படுத்தப்பட்டது. இலவசக் கல்வியைப் பல்கலைக்கழக நிலையில் வழங்குவதால் ஏற்படும் பெருஞ்செலவு, அதிக தொகையான பட்டதாரிகள் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும்போது அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் பிரச்னை என்பன கருத்திற் கொள்ளப்பட்டு சிறிய பல்கலைக்கழக அமைப்பொன்று உருவாக்கப்பட்டது.

இவ்வாறான சிறிய பல்கலைக்கழக அமைப்பு ஏற்படுத்தப்பட்டதால் பிரச்சினைகள் தோன்றாது என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் பல்கலைக் கழகங்களே இளைஞர் அமைதியின்மையின் களங்களாக மாறத் தொடங்கின. நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மைக்குக் கல்வி முறையே முக்கிய காரணம் என்றும் எடுத்துக் கூறப்பட்டது.

பல்கலைக்கழகக் கல்வி நாட்டின் பொருளாதாரத்தின் மனித வலுத் தேவைகளை நிறைவு செய்யவில்லை என்றும் அங்கு வழங்கப்பட்ட கல்வி இன்றைய சமுதாயத் தேவைகளுக்குப் பொருத்தமற்றது என்றும் வாதிடப்பட்டது. அத்துடன் நன்கு கற்ற, உயர் கல்வித் தகைமைகளைப் பெற்ற பேராசிரியர்கள் பல்கலைக்கழகங்களைவிட்டு பிற நாடுகளுக்கு வெளியேறிய நிலையில் கல்வித் தரமும் பெரிதும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. பல்கலைக்கழகங்கள் வழங்கிய சம்பளங்களும் ஏனைய வசதிகளும் பேராசிரியர்களைக் கவரவில்லை. சில போதனா பீடங்களில் 50 வீதமான விரிவுரையாளர் பதவிகள் நிரப்பப்படவில்லை. ஓரிரு போதனா பீடங்களில் 70 வீதமான விரிவுரையாளர் பதவிகள் நிரப்பப்படவில்லை. இப்பதவிகளை நிரப்புவதற்குப் போதுமான உயர் கல்வித் தகுதி உடையவர்கள் நாட்டிலேயே இருக்கவில்லை. இந்நிலையில் குறைந்த கல்வித் தகுதிகளுடையவர்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் பல்கலைக்கழகங்களுக்கு ஏற்பட்டது.

பல்கலைக்கழகங்களிலிருந்து ஆண்டுதோறும் வெளியேறிய 3,000-4,000 பட்டதாரிகளில் பெரும்பாலோருக்கு வேலைவாய்ப்புகளும் கிடைக்கவில்லை. குறைந்தபட்சம் ஆசிரியர் பதவிகளைப் பெற்றுக் கொள்வதும் சிரமமாயிற்று. ஒரு சிலருக்கே உயர் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட்டன. அவர்கள் கடும் போட்டியில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள். அந்த ஒரு சிலருக்கும் வேலைவாய்ப்பில்லாத நிலை, பல்கலைக்கழகக் கல்வியில் இளைஞர் மத்தியில் நம்பிக்கையின்மையைத் தோற்றுவித்தது.

பட்டதாரிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினை இன்று தோன்றிய பிரச்சினையல்ல. 1960களிலேயே இது தொடங்கிவிட்டது. குறிப்பாக, அன்று தமிழ் மொழி மூல கலைப் பட்டதாரிகள் ஆசிரியர் பதவியைக் கூடப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்களின் நிலை இவ்வாறிருக்க, பல்கலைக்கழக அனுமதி பெற முடியாத பெருந்தொகையானோர் பெரும் விரக்திக்குள்ளாயினர். 1,80,000 பேர் வரை க.பொ.த. உயர்நிலைப் பரீட்சைக்கு அமர்ந்து பல்கலைக்கழக அனுமதி பெற்று பட்டங்களை ஈட்டி தமது பொருளாதார சமூக

அந்தஸ்தை மேம்படுத்திக்கொள்ள முற்படுகின்றனர். அவர்களில் 35,000 பேராவது பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறப் போதிய தகைமைகளைப் பெறுகின்றனர். (ஒவ்வொரு ஆண்டும் இவ்வாறு தகைமை பெறுவோர் தொகையில் மாற்றம் ஏற்படுகின்றது). இவர்களில் 18,000 பேர் வரை மட்டுமே பல்கலைக்கழகங்களில் அனுமதி கேட்டு விண்ணப்பிக்கின்றனர். ஆனால், இறுதியாக அனுமதி பெறுவோர் 6500 பேர் மட்டுமே. குறைந்தபட்சம் விரும்பி விண்ணப்பிக்கும் 18,000 பேருக்காவது உயர் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். இளைஞர் அமைதியின்மை பற்றிய ஆணைக் குழுவின் அறிக்கையில் (1990) இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்பதினெட்டாயிரம் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் உயர் நிலைக் கல்வி அமைப்பு மறுசீரமைப்பு செய்யப்படல் வேண்டும் என்பது ஆணைக் குழுவின் கருத்தாக இருந்தது.

உயர் கல்வியின் விரிவு பற்றிக் கூறும்போது, இலங்கையில் அதிக அளவில் பட்டதாரிகள் உருவாக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்படுவதை ஒரு கருத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில், பல்வேறு மதிப்பீடுகளின்படி இலங்கை மக்கள் தொகையில் ஒரு வீதமானவர்கள் மட்டுமே பல்கலைக்கழகப் பட்டம் பெற்றவர்கள்; அத்துடன் 1.4 வீதமானவர்களே க.பொ.த. உயர்நிலைக் கல்வித் தகுதிகள் கொண்டவர்கள். மேலும் 18-25 வயதுப் பிரிவினரில் 2 வீதமானவர் மட்டுமே பல்கலைக்கழகங்களில் பயிலுகின்றனர். ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போதுகூட இவை மிகக் குறைந்த வீதாசாரமாகும்.

மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் அதிக அளவில் அனுமதிக்கப்படாததற்குக் காரணம் அவர்களுக்கு அதற்கான தகுதிகள் இல்லை என்பதல்ல. பல்கலைக்கழகங்களில் இடமில்லை என்பதே காரணம். இவர்களை ஏற்றுக்கொள்ளக் கூடிய ஏனைய பல்கலைக்கழகமல்லாத உயர் கல்வி நிலையங்கள் நாட்டில் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை.

இவ்வாறான பின்னணியிலேயே, உயர் கல்வியை நாடுவோரின் அபிலாசைகளை நிறைவு செய்ய மாகாணங்கள் தோறும் பிராந்தியக் கல்லூரிகள் அமைக்கப்படல் வேண்டும்

என்ற கருத்து இன்று முன்வைக்கப்பட்டுள்ளது. இளைஞர் அமைதியின்மை பற்றிய ஆணைக் குழுவும் இப்புதிய ஏற்பாட்டை விதந்துரைத்துள்ளது.

இக்கல்லூரிகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டனவாக இருக்கும் என்று கூறப்படுகின்றது.

1) ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டதாக மாகாணக் கல்லூரி அமையும்.

2) பல்கலைக்கழகங்கள் உயர்நிலைப் பயிற்சிகளையும் திறன்களையும் வழங்க, மாகாணக் கல்லூரிகள் இடைநிலைத் திறன்களை (intermediate skills) வழங்கும். எடுத்துக்காட்டாக, புதிய வர்த்தக நிறுவனங்கள் பெருகி வரும் இந்நாளில் திறமை மிக்க செயலாளர்கள் பற்றாக்குறையாகக் காணப்படுகின்றனர். சட்டத்துறைப் பாடங்கள் மற்றும் பொருத்தமான பாடங்களைக் கற்பித்து தகுதியுடையவர்களை உருவாக்கலாம். இதற்கு சட்டமாணிப் பட்டம் வழங்கும் முழுமையான பயிற்சி நெறி தேவையில்லை. இதே போன்று எம்.பி.பி.எஸ். பட்டமல்லாத சாதாரண மருத்துவப் பயிற்சி நெறிகளை (Paramedical) வழங்கலாம்.

இக்கல்லூரிகளைப் பொறுத்தவரையில் இரு முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

1) மாகாணக் கல்லூரிகள் மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்க வேண்டும். ஈரியகொல்ல கல்வி மந்திரியாக இருந்த காலத்தில் அமைத்த கனிஷ்ட பல்கலைக்கழகங்கள் தோல்வியடையக் காரணம், அவை பல்கலைக்கழகங்களை விடத் தரத்தில் குறைந்தனவாகக் கருதப்பட்டமையாகும். எனவே, உத்தேச மாகாணக் கல்லூரிகள் பட்டம் வழங்கும் நிறுவனங்களாக அமைய வேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. 'கனிஷ்ட' என்ற சொல்லே கனிஷ்ட பல்கலைக்கழகங்களின் குறைவான அந்தஸ்தை வெளிப்படுத்தியதாகவும் கூறப்பட்டது. மாகாணக் கல்லூரிகள் பல்கலைக் கழகங்களை விட எந்தவகையிலும் தரத்தில் குறைந்தவையல்ல என்ற நம்பிக்கை மக்கள் மனத்தில் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

மேலும், மாகாணக் கல்லூரியில் இடம் பெறுபவர்கள் பின்னர் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறவும் உரிமை

இருத்தல் வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகிறது. இக்கருத்தின்படி மாகாணக் கல்லூரிகளுடன் உயர் கல்வி முற்றுப் பெற்றுவிடக்கூடாது, மாகாணக் கல்லூரிகளில் பயிலும் சகல மாணவர்களுக்கும் பட்டம் கிட்டாவிட்டாலும் பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகளும் ஏற்பாடுகளும் வழங்கப்படல் வேண்டும். அதாவது மாகாணக் கல்லூரிகளில் சிறப்பாகச் சித்தி எய்துபவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறும் உரிமை உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

2) இதற்கு எதிரான கருத்தின்படி, இவ்வாறான மாகாணக் கல்லூரிகளின் அமைப்பு நாட்டின் இன்றைய நிலைமைகளுக்குப் பொருந்தாது. மாகாணக் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களுடன் இணைத்த பின்னர், ஏதோ காரணங்களால் மாகாணக் கல்லூரிகள் தமது நோக்கங்களில் தோல்வி கண்டுவிட்டால் தேசிய பல்கலைக்கழகங்களின் தராதரங்கள் பெரிதும் பாதிக்கப்படும். எனவே மாகாணக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களுடன் இணைக்கப்படாது தனியாக நிருவகிக்கப்படல் வேண்டும். மாகாணக் கல்லூரிகள் என்ற புதிய பரிசோதனை தோல்வியடைந்துவிட்டால் தேசிய பல்கலைக்கழகங்களாவது எந்தவிதமான பாதிப்புக்கும் உள்ளாகாமல் மிஞ்சின என்று ஆறுதல் பெறலாம்.

இவ்வெதிர் கருத்தின்படி, மாகாணக் கல்லூரிகள் புதிய துறைகளில் கல்வியும் பயிற்சி வழங்குவது பற்றி சிந்திக்க வேண்டும். அவை கூடிய அளவுக்கு செயல்முறைக் கல்வியை வழங்க வேண்டும். பல்கலைக்கழகப் பயிற்சி நெறிகளை இக்கல்லூரிகளில் வழங்குவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும். சமுதாயத்துக்கு நேரடியாகப் பயன்படக் கூடிய துறைகளில் பயிற்சி வழங்கப்படல் வேண்டும். மாணவர்கள் சமுதாய மேம்பாட்டுக்குப் பங்களிப்பினைச் செய்யும் வகையிலும் பயனுள்ள தொழில்களில் ஈடுபட்டு சீவனோபாயத்தைப் பெற்றுக் கொள்ளும் முறையிலும் பயிற்சி நெறிகள் அமைய வேண்டும். கம்யூட்டர் தொழினுட்பம், குளிர்சாதனம் மற்றும் மேசன் தொழில், தச்சுத் தொழில் போன்றவற்றிலும் பயிற்சி நெறிகள் வழங்கப்படல் வேண்டும். இவ்வாறான துறைகளில் பயிற்சி பெற்றவர்களே இன்றைய சமுதாயத்துக்குத் தேவைப்படுகின்றனர். மாகாணக் கல்லூரிகள் யாவும் பல்கலைக்கழகம் போன்றவையே என்ற எண்ணத்தை மக்கள் மனத்தில் ஏற்படுத்தக் கூடாது.

இவ்விரு கருத்துக்களில் எது எதிர்காலத்தில் கருதப்படும் என்பதைப் பற்றி இப்போது முடிவு செய்துவிட முடியாது.

மாணவர்கள் முதலில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக் கப்படாது மாகாணக் கல்லூரிகளிலே அனுமதிக்கப்படல் வேண்டும்; அங்கு உயர்தரமான கல்விச் சீர்திருத்தங்கள் பெறுபவர்கள் மட்டுமே பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக் கப்படல் வேண்டும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. இவ் வாறு செய்வதால் பல்கலைக்கழகங்கள் ஒரு சிலருக்கான 'அதி உன்னத' உயர் கல்வி நிலையங்களாக மாறி சாதாரண வகுப்பு மாணவர்கள் அங்கிருந்து ஒதுக்கப்பட்டு விடுவர் என்பதால் இக்கருத்து கடுமையாகக் கண்டிக்கப்படுகிறது. மேலும், பல்கலைக்கழகங்களிலே ஆசிரியர் தட்டுப்பாடு காணப்படும் போது மாகாணக் கல்லூரிகளில் கற்பிக்கப் போவது யார் என்ற பிரச்சினையும் எழுகின்றது.

உயர் கல்விச் சீர்திருத்தங்களின் குறை நிறைகள் எவ்வாறு அமைந்தபோதிலும் இன்றைய பிரச்சினைகளுக்கு ஒரு பொருளாதார அடிப்படை உண்டு. பல்கலைக்கழகங்கள் அல்லது மாகாணக் கல்லூரிகளிலிருந்து படித்து வெளியேறு வோர் நிச்சயமாக கூடிய எதிர்பார்ப்புடையவர்களாக இருப்பர். தமது உயர்தரமான பயிற்சியின் காரணமாகத் தாம் சிறந்த வாழ்க்கையைப் பெற உரித்துடையவர்களாகக் கருதுவர். அதனைவிடக் குறைந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவிக்க நேரிடுமிடத்து அவர்கள் சமுதாயத்தின் அடிப்படையான நிறுவனங்கள் தம்மை முற்றாக ஏமாற்றிவிட்டதாகக் கருதுவர். எனவே, உயர் கல்வித் துறையின் மாற்றங்களுக்கு ஏற்றவாறு பொருளாதாரத் துறையிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். சுருங்கக்கூறின், கல்விச் சீர்திருத்தங்களும் பொருளாதார சீர்திருத்த ஏற்பாடுகளும் முற்றாகத் தொடர்பற்ற முறையில் நிகழாது ஒன்றையொன்று கருத்தில் கொண்டனவாய் நிகழ வேண்டும். உயர் கல்வி நிலையங்களிலிருந்து கற்றவர்கள் வெளிவருகின்ற அதே வேளையில், பொருளாதார முறை விரிவுபடுத்தப்பட்டு அவர்களை ஏற்றுக்கொள்ளும் முறையில் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படல் வேண்டும்.

# 7

## தமிழரின் உயர்கல்வி

### அறிமுகம்

1940களில் இந்திய மரபுவழித் தமிழர்களின் குடியுரிமைப் பிரச்சினையும் 1950, 1960களில் மொழிப் பிரச்சினையும் 1970களில் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் ஏற்படுத்தப்பட்ட தீவிர மாற்றங்களும் இலங்கையில் இனங்களுக்கிடையிலான உறவுகளில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தின. மறுபுறம், சீர்கெட்டுக் காணப்பட்ட இன உறவுகளை இப்பிரச்சினைகள் பிரதிபலித்துக் காட்டின.

1970 தொடக்கம், பல்கலைக்கழக அனுமதிகளில் திறமை சித்திக்கு மட்டும் வழங்கப்பட்ட முக்கியத்துவம் நீக்கப்பட்டு மாணவர் அனுமதியில் இனச் சமநிலையை நிலைநாட்ட, பெரும் கருத்து வேறுபாட்டுக்குட்பட்ட கேள்விக்கிடமான அனுமதிக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி குறையக் காரணமாக இருந்த இக்கொள்கைகள் காரணமாகவே தமிழர் அரசியலில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த சாத்வீக அணுகுமுறைகள் கைவிடப்பட்டு, அரசியல் போக்கு தீவிரமயப்படுத்தப்பட்டது என்பதைப் பல கல்வியாளர்களும் அரசியல்வாதிகளும் இன்று ஏற்றுக் கொள்கின்றனர். 1970க்கு முன்னரும் அதன் பின்னரும் இலங்கையில் பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புகள் தமிழருக்கு எந்த அளவுக்கு வழங்கப்பட்டன? 1970 இன் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய அனுமதிக் கொள்கைகள் தமிழரின் பல்கலைக்கழக கல்வி வாய்ப்புகளை எவ்வாறு பாதித்தன என்று ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பின்னணி**

1930 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கல்விச் சீர்திருத்தங்கள் நாட்டின் பாடசாலைக் கல்வியை என்றுமில்லாதவாறு விரிவுபடுத்தக் காரணமாயின. தேர்தல் தொகுதிகள்தோறும் மத்திய பாடசாலைகள் அமைக்கப்பட்டமை, பாலர் வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இலவசக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி நிலை வரை தாய்மொழிகள் போதனா மொழியாக்கப்பட்டமை என்பன காரணமாக பாடசாலைக் கல்வியில் பாரிய விரிவு ஏற்பட்டது; இதன் விளைவாக 1980 ஆம் ஆண்டளவில் 9,000 பாடசாலைகளையும் 30 இலட்சம் மாணவர்களையும் 1,40,000 ஆசிரியர்களையும் கொண்ட பாடசாலை முறையொன்று உருவானது. 1968ஆம் ஆண்டின் உலக வங்கியின் அறிக்கையின்படி, ஆசிய பிராந்தியத்தில் பாடசாலைக் கல்வியில் இலங்கை, ஜப்பானுக்கு அடுத்த இடத்தைப் பெற்றுள்ளதாக மதிப்பிடப்பட்டது. கல்வியின் விரிவு காரணமாகக் கல்விச் செலவும் அதிகரிக்க நேர்ந்தது. 1952 இல் மொத்த தேசிய உற்பத்தியில் 2.7% கல்விக்கென செலவிடப்பட்டது; 1970 இல் இவ்வீதாசாரம் 5 ஆக அதிகரித்தது. 1960களில் தேசிய வரவு செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 15 வீதம் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டது.

பின்வரும் அட்டவணை பாடசாலைகளின் தொகை அதிகரிப்பினைக் காட்டும்

**நாட்டிலிருந்த பாடசாலைகளின் தொகை**

| ஆண்டு | மொத்தப் பாடசாலைகள் |
|---|---|
| 1945 | 4537 |
| 1963 | 8937 |
| 1971 | 9494 |
| 1978 | 9470 |

ஆதாரம் : Swarna Jayaweera, 'Educational Policies and Changes from the Mid Twentieth Century to 1977' NIE, Colombo, 1988.

பாடசாலை மாணவர் தொகை 1953 இல் 15,65,000 ஆக இருந்து 1977இல் 25,47,000 ஆக அதிகரித்தது. இவ்வாறான

தொகை அதிகரிப்புக்கு ஏற்ப பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகளில் பயிலும் மாணவர் தொகையும் அதிகரித்தது.

**11 ஆம், 12 ஆம் வகுப்பு மாணவர்களின் தொகை**

| ஆண்டு | மொத்த மாணவர் தொகை |
|---|---|
| 1953 | 5,870 |
| 1963 | 34,670 |
| 1970 | 45,610 |
| 1977 | 87,320 |

ஆதாரம்: Annual School Census, Ministry of Education.

இவ்வாறே, கல்விப் பொதுத் தராதர உயர்நிலைப் பரீட்சைக்குத் தோற்றும் தேர்வு நாடிகளின் தொகையும் அதிகரித்தது.

க.பொ.த. (உ/நி) பரீட்சை தேர்வு நாடிகளின் தொகை.

| ஆண்டு | க.பொ.த (உ/நி) தேர்வு நாடிகள் |
|---|---|
| 1952 | 2,026 |
| 1961 | 6,547 |
| 1970 | 30,973 |
| 1977 | 72,474 |

ஆதாரம் : Administration Report, Dept. of Education.

மொத்த பாடசாலை மாணவர்களின் க.பொ.த. உயர்நிலை வகுப்புகளில் பயின்ற மாணவர்களின் வீதாசாரமும் கணிசமாக அதிகரித்தது. 1953 இல் 0.4 ஆக இருந்த உயர்நிலை வகுப்பு மாணவர் வீதம் 1975 இல் 3 வீதமாகவும் 1977 இல் 3.4 ஆகவும் அதிகரித்தது.

## பல்கலைக்கழகக் கல்வி

1942 ஆம் ஆண்டில் இங்கிலாந்தின் 'ஒக்ஸ்பிரிட்ஜ்' முன்மாதிரியைக் கொண்டு நிறுவப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழகம் ஆங்கிலக் கல்வி கற்ற உயர் சமூக வகுப்பினருக்கு உயர் கல்வி வழங்கும் நோக்குடன் நிறுவப்பட்டது. 1945 ஆம் ஆண்டின் இலவசக் கல்வித் திட்டம்

பல்வேறு சமூகப் பரிவினருக்கும் ஆங்கிலக் கல்வியை விரிவு செய்தது. ஆயினும், பாடசாலைக்கல்வியில் ஏற்பட்ட பாரிய விரிவுக்கு ஏற்ப பல்கலைக்கழகக் கல்வி விரிவு செய்யப்படவில்லை. க.பொ.த உ/நி கல்வி பயிலும் மாணவர்கள் தொகை, அதாவது பல்கலைக்கழகக் கல்வியை நாடுவோரின் தொகை முன்னர் காட்டியுள்ளவாறு பன்மடங்கு அதிகரித்தபோதிலும் பல்வேறு அரசாங்கங்களினுடைய உயர் கல்வி அனுமதிக் கொள்கை பல்கலைக்கழகக் கல்வியின் விரிவை கட்டுப்படுத்துவதாகவே அமைந்தது. இந்நிலையில் நாட்டின் மக்கள்தொகையில் 1973 இல் 0.2 வீதமானவர்களும் 1978 இல் 0.5 வீதமானவர்களுமே பல்கலைக்கழகக் கல்வி பெற்றவர்களாகக் காணப்பட்டனர் (பார்க்க: நுகர்வோர் நிதி, சமூக பொருளாதார மதிப்பீடு, 1973, 1978). பல்கலைக்கழகக் கல்வியிலும் மாணவர் தொகை துரிதமாக அதிகரிக்கவில்லை என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டும்.

**பல்கலைக்கழக மாணவர் தொகை**

| ஆண்டு | தொகை |
|---|---|
| 1942 | 904 |
| 1946 | 1,302 |
| 1950 | 2,036 |
| 1959 | 4,039 |
| 1962 | 6,727 |
| 1965 | 14,210 |
| 1977 | 14,146 |

ஆதாரம் : பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அறிக்கைகள்.

1967 இல் 14,800 ஆக இருந்த பல்கலைக்கழக மாணவர் தொகை அடுத்த 12 ஆண்டுகளுக்கு அப்படியே மாறாது இருந்தது.

1942-1979 காலப் பகுதியில் கலைத் துறை மாணவர் தொகை 20 மடங்காக அதிகரித்தது. ஆனால் இவ்வாறான அதிகரிப்பு மருத்துவம் மற்றும் விஞ்ஞான பயிற்சி நெறிகளில் இடம் பெறவில்லை. இந்த 37 ஆண்டு காலப் பகுதியில் மருத்துவ மாணவர் தொகை 5 மடங்காக மட்டுமே அதிகரித்தது

(343 இலிருந்து 1435 ஆக). விஞ்ஞானப் பயிற்சி நெறிகளில் பயின்ற மாணவர் தொகை ஆரம்பத்தில் மெதுவாகவும் பின்னர் வேகமாக 15 மடங்காகவும் அதிகரித்தது.

பல்கலைக்கழகக் கல்வியின் விரிவு தொடர்ந்து கட்டுப்படுத்தப்பட்டமையால் இன்று ஆசிய நாடுகளிலேயே தொகையளவில் மிகவும் சிறிய உயர் கல்வி முறையை இலங்கை கொண்டு விளங்குகிறது. இலங்கையில் உயர் கல்வி தொகையளவில் ஆசிய பிராந்தியத்தில் பின்தங்கிய நாடுகளான லாவோஸ், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை விட மட்டுமே முன்னணியில் உள்ளது. உயர்கல்வி வயதெல்லையில் உள்ள இளைஞர்களில் 2 வீதமானவர்கள்கூட பல்கலைக்கழகங்களில் இல்லை.

இன்று க.பொ.த. உயர்நிலைப் பரீட்சைக்கு அமரும் 1,50,000 மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியைப் பெறுவதில் விருப்புள்ளவர்கள். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறத் தகுதி பெறும் யாவரும் பல்கலைக்கழகத்தில் அனுமதிக்கப்படுவதில்லை. 1970இல் தகுதி பெற்றோரில் 34 வீதமானவர் அனுமதி பெற்றனர்; இவ்வீதம் 1977 இல் 18 வீதமாகக் குறைந்தது. 1980 இல் 13 வீதமாக மேலும் குறைந்தது. பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறும் அவாவுடன் கடுமையாகப் படித்து போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி அனுமதித் தகுதிகளைப் பெறும் 80 வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படாத நிலை மிகவும் பாரதூரமானதாகக் காணப்பட்டது. 1942 இல் பல்கலைக்கழகக் கல்வியை நாடியோரில் 50 வீதமானவர்களுக்கு இடம் கிடைத்தது. 1980களில் 5 வீதமானவர்களுக்கே இடம் கிடைத்தது.

1942 இல் பல்கலைக்கழகக் கல்வியை நாடியோரில் 50 வீதமானவர்களுக்கு இடம் கிடைத்தது. 1980களில் 5 வீதமானவர்களுக்கே இடம் கிடைத்தது.

இலங்கையில் நாட்டுமக்களில் 10,000 பேருக்கு 11 பேர் என்ற வீதத்தில் பல்கலைக்கழக மாணவர் இருந்து வருகின்றனர். பெரும்பாலான வளர்முக நாடுகளில் 10,000 பேருக்கு 20 பேர் பல்கலைக்கழக மாணவர்களாக உள்ளனர்.

இலங்கையின் பல்கலைக்கழகக் கல்வி, திறந்த பல்கலைக்கழகம் உட்பட 9 பல்கலைக்கழகங்களையும் 1900 ஆசிரியர்களையும் 20,000 உள்வாரி மாணவர்களையும் கொண்ட ஒரு சிறிய அமைப்பு. இந்த அமைப்பு நாட்டில் மாணவர் தொகை அதிகரிப்புடன் ஒப்பிடும்போது சிறியதாக அமைந்தமையால், கல்வியினூடாக சமூக, பொருளாதார நிலைமைகளை உயர்த்திக் கொள்ளும் அபிலாசைகள் சமுதாயத்தில் விரிவடைந்தபோது, பல்கலைக்கழக இடங்களைப் பெறுவதில் கடும் போட்டி ஏற்பட்டது. இன்றும் கூட 1,50,000 மாணவர்கள் 9500 இடங்களுக்குப் போட்டியிடுகின்றனர்.

பல்வேறு வளர்முக நாடுகளிலும் கல்வி, குறிப்பாக பல்கலைக்கழகக் கல்வியே சமூக நகர்வுக்கான முக்கிய கருவியாக அமைந்துள்ளது. எனவே, உயர் கல்வி வாய்ப்புகளைப் பகிர்ந்தளிப்பது என்பது எதிர்காலத்தில் செல்வத்தையும் அதிகாரத்தையும் பகிர்ந்தளிப்பதற்கு ஒப்பானதாகும். மிகச் சிலருக்கே பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புகள் வழங்கப்பட்ட நாடான இலங்கையில் போட்டி மிகவும் கடுமையாயிற்று. பன்மைச் சமுதாயங்களில் ஒவ்வொரு இனக் குழுவினரும் தமது உறுப்பினர்கள் என்ன வீதாசாரத்தில் பல்கலைக்கழக வாய்ப்புகளைப் பெறுகின்றனர் என்று மதிப்பீடு செய்யத் தொடங்கினர். இதன் காரணமாக இதுவரை காலமும் பல்கலைக்கழகத்தில் அதிகாரத்துக்குட்பட்டிருந்த பல்கலைக்கழக அனுமதி விடயம் அரசியல்வாதிகளினதும் பல்வேறுபட்ட குழுக்களின் தலைவர்களினதும் கவனத்தின் கீழ் வந்தது.

## மாணவர் அனுமதி

உண்மையில் 1965 ஆம் ஆண்டு வரை பல்கலைக் கழகங்களுக்கான மாணவர் அனுமதி பல்கலைக்கழகங்களின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருந்தது. பல்கலைக்கழக வாய்ப்புகளைப் பெற போட்டிகள் அதிகரிக்கத் தொடங்கவே, 1965 முதல் உயர்கல்வித் தேசியப் பேரவை (NCHE) பல்கலைக்கழக அனுமதிகளில் அதிகாரம் பெற்றது. படிப்படியாக பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகளை உயர்மட்ட அரசியல் தலைமைப் பீடமான அமைச்சரவை தீர்மானிக்கத் தொடங்கியது.

1970களில் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டன. அதற்கு முன்னரே பல்கலைக்கழகங்களின் மொத்த மாணவர்களில் தமிழ் மாணவர் வீதாசாரம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வந்தது. 1942 இல் முதன்முதலாக இலங்கைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டபோது பல்கலைக்கழக மாணவர்களில் 32 வீதமானவர்கள் தமிழ் மாணவர்களாக இருந்தனர். 1959 இல் வித்தியோதய, வித்தியாலங்காரப் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டன. அப்பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை. எனவே, 1959 தொடக்கமே பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர் வீதாசாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. பல்கலைக் கழகங்களில் தமிழ் மாணவர் வீதாசாரம், 1961 இல் 19 வீதமாகவும் 1962இல் 18 வீதமாகவும் 1963இல் 16 வீதமாகவும் 1971இல் 17 வீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. (1942 இல் மொத்த மாணவரில் 2.7 வீதமானவர் மட்டுமே முஸ்லீம்கள். 1963இல் இது 1.2 வீதமாகக் குறைந்தமை குறிப்பிடத்தக்கது).

1970 ஆம் ஆண்டு தொடக்கம் பின்பற்றப்பட்ட புதிய பல்கலைக்கழக அனுமதிக்கொள்கைகள் விஞ்ஞான போதனா பீடங்களில் தமிழ் மாணவர்களின் வீதத்தைக் கணிசமாகக் குறைத்ததைப் பின்வரும் அட்டவணை காட்டும்.

**பல்கலைக்கழக மாணவர் அனுமதி**
**1969, 1971 & 1974**

| ஆண்டு | சிங்களவர்% | தமிழர்% | முஸ்லீம்கள்% |
|---|---|---|---|
| பொறியியல் துறை | | | |
| 1969 | 51.7 | 48.3 | - |
| 1971 | 62.4 | 34.7 | 1.8 |
| 1974 | 78.8 | 16.3 | 4.9 |
| மருத்துவம் | | | |
| 1969 | 48.9 | 48.9 | 0.9 |
| 1971 | 56.1 | 39.3 | 2.3 |
| 1974 | 70.0 | 25.9 | 3.0 |

ஆதாரம்: 1971 மதிப்பீட்டு அறிக்கை, செனெட் மன்றம், இலங்கைப் பல்கலைக்கழகம்.

பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளில் 1969இல் அனுமதி பெற்ற மாணவர்களில் ஏறத்தாழ அரைவாசிப் பேர் தமிழர்களாக இருந்தனர். அனுமதிக் கொள்கை மாற்றத்தின் பின்னர் அவர்கள் வீதாசாரம் படிப்படியாகக் குறைந்து சென்றதை அட்டவணையில் காணலாம். 1975 தொடக்கம் 1983 ஆம் ஆண்டு வரையுள்ள காலப் பகுதியில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மொத்த மாணவரில் தமிழ் மாணவர்களின் வீதாசாரம் அவர்களுடைய சனத்தொகை வீதாசாரத்துக்கு ஏற்ப கூட அமையவில்லை. (1981 புள்ளி விபர மதிப்பீட்டின்படி மக்கள்தொகையில் 12.6 வீதம் இலங்கைத் தமிழர், 5.6 வீதம் இந்தியத் தமிழர், 7.4 வீதம் முஸ்லீம்கள்).

**1975-1983 வரை மாணவர் அனுமதியில் இன வீதாசாரம்.**

| ஆண்டு<br>இனம் | 1975 | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 82.4 | 80.6 | 81.9 | 75.9 | 79.2 | 76.4 | 76.4 | 74.0 |
| தமிழர் | 13.7 | 15.7 | 14.4 | 19.7 | 17.3 | 19.2 | 19.2 | 22.0 |
| பிறர் | 3.9 | 3.7 | 3.7 | 4.3 | 3.5 | 4.4 | 4.4 | 3.9 |

ஆதாரம் : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுப் பிரசுரங்கள்.

(மேற்தரப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் போதனா பீட வகைப்படியாகப் பின்னிணைப்பு 'அ'வில் தரப்பட்டுள்ளன.)

1970 தொடக்கம் வீழ்ச்சியடைந்து சென்ற தமிழ் மாணவர் வீதாசாரம் 1977 இன் பின்னர் சற்று உயர்ந்து செல்வதைக் காண முடியும். விஞ்ஞானப் பயிற்சி நெறிப் போதனா பீடங்களிலும் இவ்வதிகரிப்பினைக் காண முடியும். எவ்வாறாயினும் 1970 தொடக்கம் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையில் மாற்றங்கள் கொண்டுவரப்படு முன்னரே பல்லைக்கழகங்களில் தமிழ் மாணவர் நிலை தளர்ச்சியுற்றிருந்தது.

பல்கலைக்கழக அனுமதி பற்றிய அண்மைக் காலப் புள்ளி விபரங்களின்படி, 1985 இல் தமிழ் மாணவர் வீதாசாரம் 14.7 ஆகவும் 1986 இல் 12 ஆகவும் 1987 இல் 15.5 ஆகவும் இருந்தது. (போதனா பீட வாரியான தமிழ் மாணவர் அனுமதி விபரம் பின்னிணைப்பு IIல் தரப்பட்டுள்ளது).

மொத்த தமிழ் மக்களின் குடிசன வீதத்துக்கு ஏற்பக்கூட இவை அமையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இவ்வீதாசாரத்தில் இந்திய மரபுவழித் தமிழரின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவு. அவர்களுடைய பிரதிநிதித்துவம் பல்கலைக்கழகத் தமிழ் மாணவர்கள் தொகையில் 10 வீதத்துக்கும் குறைவானதாக இருக்கலாம். 1960களுக்குப் பின்னரே மலையகப் பகுதிகளில் க.பொ.த. உயர்நிலை வகுப்புகள் அமைக்கப்பட்டன. விஞ்ஞான பயிற்சி நெறிகள் ஓரிரு பாடசாலைகளில் மிகப் பிந்தியே தொடங்கப்பட்டன. பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களின் நன்மைக்காக பல்கலைக்கழகக் கல்வி 1945 முதல் இலவசமாக வழங்கப்பட்டபோதிலும், 80 வீதமான தோட்டத் தொழிலாளர்களைக் கொண்ட மலையகத்தவர் இலவசக் கல்வி வசதிகளைப் பயன்படுத்தி உயர் கல்வித் துறையில் நன்மை பெற முடியவில்லை. பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புகள் இல்லாத நிலையில் அவர்களில் மிகச் சிலர் 1960களில் கூட யாழ்ப்பாணம் சென்று கல்வி பயின்றனர். பல்கலைக்கழக அனுமதிக் கொள்கைகள் மாற்றப்பட்டு பின்தங்கிய பிரிவினருக்கும் பிரதேசங்களுக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டன. இந்த அனுமதிக் கொள்கைகளை பல்கலைக்கழக அனுமதியில் இனச் சமநிலையை நிலைநாட்டவே முற்பட்டன. மேலும் பல்கலைக்கழக அனுமதி பொதுவாகக் கட்டுப்படுத்தப் பட்டிருந்தது. இந்நிலையில் உயர் கல்வியில் மிகப் பின்தங்கியிருந்த மலையக மாணவர் அனுமதிக் கொள்கை மாற்றங்களால் பெரிய நன்மைகளை அடைய முடியவில்லை. மேலும், மாவட்டங்களின் குடித்தொகையைக் கருத்திற்கொண்டு அனுமதி வழங்கப்பட்டபோது மலையக மாவட்டங்களில் பெருந்தொகையாக இந்திய மரபுவழித் தமிழர் வாழ்ந்த போதிலும் பல்கலைக்கழக அனுமதியில் அவர்களுடைய தொகையையும் சேர்த்து சிங்கள மக்களே நன்மை பெற்றனர் என்று பல ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

1960-70 காலப் பகுதியில் பொதுவாக மொத்த மாணவர் தொகையில் தமிழ் மாணவர் வீதாசாரம் குறைந்து சென்றது. ஆயினும் விஞ்ஞான பயிற்சி நெறிகளைக் கொண்ட போதனா பீடங்களில் (மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம்) திறமையினடிப்படையில் நடந்த மாணவர் தெரிவில், தமிழ் மாணவர்களின் வீதாசாரம் குடித்தொகை வீதாசாரத்துடன் ஒப்பிடும்போது கூடுதலாக இருந்தது. இது கடுங்கண்டனத்துக்குள்ளாகத் தொடங்கியது. தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களுக்குள்ளே கல்வித் துறை வசதிகளில் பல சமமின்மைகள் காணப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களால் பொதுவாக தமிழ் மாணவர்கள் அனுமதிப் பரீட்சைகளில் சிறப்புறத் தேர்ச்சி பெற்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட உயர்ந்த ஆங்கில எழுத்தறிவு, விஞ்ஞானக் கல்விக்கான விரிவான வசதிகள், நீண்ட கால உயர் கல்விப் பாரம்பரியம், சாதகமான கல்விச் சூழ்நிலை, வேறு தொழில் வாய்ப்புகள் இல்லாமையால் கல்வியில் காட்டப்பட்ட கூடிய ஊக்கம் போன்ற காரணங்களால் தமிழர்கள் அதிகமாகத் தேர்ச்சி பெற நேர்ந்தது.

மேலும், 1956 ஆம் ஆண்டின் அரச கரும மொழிச் சட்டம் காரணமாக, அரசாங்க பதவிகள் அதிகமாக சிங்கள மொழியில் கலைப் பட்டங்களைப் பெற்றவர்களுக்கே கிடைக்கக் கூடிய நிலையில் தமிழர்கள் விஞ்ஞானம் மற்றும் உயர் தொழில் பயிற்சி நெறிகளில் கூடிய அக்கறை செலுத்தத் தொடங்கினர்.

கலைப்பயிற்சி நெறிகளைப் பயிலுவதில் அவர்கள் அதிக ஈடுபாடு காட்டவில்லை. இதனால் 1964 ஆம் ஆண்டளவில் சமூக அறிவியல், சட்டம், மனிதப் பண்பியல் துறை ஆகிய போதனா பீடங்களில் பயின்ற மாணவர்களில் 84 வீதமானவர்கள் சிங்கள மாணவர்களாகக் காணப்பட்டனர். இத்துறைகளில் பயின்ற மாணவர்களில் 12 வீதமானவர்களே தமிழ் மாணவர்கள். ஆயினும், மேற்கூறிய காரணங்களால், 1964இல் விஞ்ஞான பயிற்சி நெறிகளில் தமிழ் மாணவர்கள் வீதாசாரம் அதிகரித்துக் காணப்பட்டது. விஞ்ஞான, பொறியியல் துறைகளில் 37.2 வீதம், மருத்துவத் துறையில் 40.5 வீதம், விவசாயம், விலங்கு மருத்துவத் துறையில் 42 வீதம்

என்ற முறையில் தமிழ் மாணவர் பயின்றனர். 1970 ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பயிற்சி நெறிகளில் 35 வீத இடங்கள் தமிழர்களுக்குக் கிடைத்தன. (பொறியியல் 41 வீதம், மருத்துவம் 41 வீதம்).

## அனுமதிக் கொள்கை

1970களில் அனுமதிக் கொள்கைகள் தமிழர்களுக்குப் பாதகமாக தீவிர மாற்றம் அடைவதற்கு ஒரு முக்கிய பின்னணி இருந்தது. 1961 தொடக்கம் கலைப் பயிற்சி நெறிகளில் அனுமதி பெற்ற மாணவர்களில் பெரும்பாலானவர்கள் சுய மொழிகளில் பயின்றவர்களாகக் காணப்பட்டனர். ஆனால், விஞ்ஞானப் பயிற்சி நெறிகளில் இவ்வாறான போதனா மொழி மாற்றம் உடனடியாக நிகழவில்லை. ஏறத்தாழ 1970 வ்ரை விஞ்ஞானக் கல்வி ஆங்கில மொழியிலேயே இடம் பெற்றது.

ஆயினும், இந்நிலை மாறி 1970 ஆம் ஆண்டளவில் பாடசாலைகளில் விஞ்ஞான மாணவர்களும் சுய மொழிகளிலேயே பயின்றனர். இத்துறைகளில் பல்கலைக்கழகப் புகுமுகப் பரீட்சைகள் சுய மொழிகளில் நடத்தப்பட்டபோது பிரச்சினைகள் தீவிரமடைந்தன.

1970 ஆம் ஆண்டு விஞ்ஞான பீடங்களுக்கு அனுமதி பெறும் மாணவரில் 60 வீதமானவர்கள் தமிழர் என்று நம்பப்பட்டது. சில குறிப்பிட்ட சமூகத்தவரும் குறிப்பிட்ட மாவட்டங்களில் வாழ்ந்தவர்களும் இதுவரை பெற்ற அனுகூலங்களைத் திருத்தும் வகையில் அரசாங்கக் கொள்கை மாற்றப்படல் வேண்டும் என்று சில சிங்கள குழுவினர் வற்புறுத்தினர். பல்கலைக்கழக அனுமதி திறமையடிப்படையிலன்றி குடித்தொகை வீதத்துக்கு ஏற்ப அமைய வேண்டும் என்றும் அவர்கள் வாதிட்டனர். தமிழ் பரீட்சகர்கள் வேண்டுமென்றே அதிக புள்ளிகளை வழங்கினர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றச்சாட்டு விசாரிக்கப்பட்டது. ஆயினும் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. இந்நிலையில் இலங்கையின் பல்கலைக்கழக வரலாற்றில் முதன்முதலாக அனுமதிக் கொள்கை அரசாங்க உயர் மட்டத்தினரால் மாற்றப்பட்டு தமிழ் மாணவர் பல்கலைக்கழக

அனுமதி பெற உயர்ந்த குறைந்தபட்ச புள்ளிகள் தகுதிகளாக விதிக்கப்பட்டன. சிங்கள, தமிழ் மாணவர்கள் வெவ்வேறு குறைந்தபட்ச புள்ளிகளின் அடிப்படையில் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

இந்தப் புதிய அனுமதிக் கொள்கைகள் புள்ளிகளை மொழிவாரியாகத் தரப்படுத்தல், மொத்த குடித் தொகைக்கேற்ற முறையில் மாவட்ட அனுமதிப் பங்கு, பின்தங்கிய மாவட்டங்களுக்கு விசேட இட ஒதுக்கீடு என்ற முறையில் அமைந்தன. அனுமதிக் கொள்கை ஆண்டுக்கு ஆண்டு மாற்றப்பட்டது. எடுத்துக்காட்டாக:

1973- புள்ளிகளைத் தரப்படுத்தல்

1974- புள்ளிகளைத் தரப்படுத்தலும் சில திருத்தங்களுடன் மாவட்ட ரீதியான அனுமதியும்

1975- புள்ளிகளைத் தரப்படுத்தலும் மாவட்ட ரீதியான அனுமதியும்

1976- புள்ளிகளைத் தரப்படுத்தலும் 30 வீதம் மாவட்ட ரீதியான அனுமதியும்.

1979- முழு நாட்டையும் பொறுத்தவரையில் 30 வீதம், மாவட்ட ரீதியில் 55 வீதம், பின்தங்கிய மாவட்டங்களுக்கு 15 வீதம்.

1987- திறமை சித்தியின் அடிப்படையில் 30 வீதம், மாவட்ட ரீதியாக 65 வீதம், பின்தங்கிய மாவட்டங்களுக்கு 5 வீதம்.

1942 முதல் 1970 வரை 28 ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக ஒரே அனுமதிக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. 1970 இன் பின் ஆண்டுக்கு ஆண்டு அனுமதிக் கொள்கை மாற்றப்பட்டது. அவ்வப்போது எழுந்த தேவைகளுக்கேற்ப அனுமதிக் கொள்கை மறுபரிசீலனை செய்யப்பட்டது.

1970இன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அனுமதிக் கொள்கை தொடர்ச்சியும் உறுதியும் அற்றனவாகக் காணப்பட்டன.

மாவட்ட ரீதியான அனுமதி, பின் தங்கிய மாவட்டங்களுக்கு இட ஒதுக்கீடு ஆகிய கொள்கைகளை விட மிக ஐயத்துக்கிடமானதாகவும் தமிழ் சிறுபான்மையினரை நேரடியாகப் பாதிப்பதாகவும் அமைந்த அனுமதிக் கொள்கை மொழிவாரியான தரப்படுத்தலாகும். தமிழ் மொழிப் பாடசாலைகள் பல்வேறு வகைகளில் சமமற்றுக் காணப்பட்டன. இந்நிலையில் தமிழ் மொழி மூல மாணவர்கள் அனைவரையும் ஒருமைப்பாடான குழுவினராக ஏற்றுக்கொண்டு, தரப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டது.

பெரும் கருத்து வேறுபாடுகளுக்குட்பட்ட மொழிவாரித் தரப்படுத்தல் முறை 1977 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கைவிடப்பட்டது. புதிய அரசின் அனுமதிக்கொள்கை திறமை சித்திக்கு ஓரளவு இடம் தருவதாகவும் அமைந்தது. அத்துடன் மாவட்டங்களின் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு, மாணவர் அனுமதியில், மாவட்ட அனுமதிப் பங்கு தீர்மானிக்கப்பட்டது. மேலும் கல்வித் துறையில் பின்தங்கிய மாவட்டங்களுக்கும் சில இடங்கள் ஒதுக்கப்பட்டன. இவற்றில் தமிழ் மாவட்டங்களும் அடங்கின. இவ்வாறான ஏற்பாடு கல்வித் துறையில் முன்னேறிய சிங்கள மாவட்டங்களில் வாழ்ந்த மாணவர்களையும் ஓரளவு பாதித்தது. எவ்வாறாயினும் இப்புதிய கொள்கை 1970 - 1977 காலப் பகுதியில் கையாளப்பட்ட தரப்படுத்தல் கொள்கையினால் ஏற்பட்ட தீவிர விரக்தியும் வெறுப்பும் பெருமளவுக்கு நீக்கப்படக் காரணமாயிற்று எனலாம்.

இலங்கை வாழ் தமிழர்களின் பல்கலைக்கழக கல்வியைப் பொறுத்தவரையில் வட பகுதியில் நிறுவப்பட்ட யாழ்ப்பாண பல்கலைக்கழகமும், கிழக்கிலங்கையில் நிறுவப்பட்ட கிழக்கிலங்கை பல்கலைக்கழகமும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். இதனால் அவ்வப் பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழக கல்விக்காக தூர இடங்களுக்கு செல்லாது தத்தமது பிரதேசங்களில் உயர் கல்வி பெறும் வாய்ப்பு கிட்டியுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் சட்டம், பொறியியல் தவிர்ந்த ஏனைய போதனா பீடங்கள் யாவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் தமிழரின் பாரம்பரிய கலைகள், இசை, நாடகம் என்பனவற்றை பயிற்ற தனியான ஒரு நிறுவன்மும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த நாகரிகம், சைவ சித்தாந்தம் போன்ற பாடநெறிகளுக்கும்

விசேட இடமளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு தமிழர்கள் தமது பாரம்பரிய கல்விக்குப் புத்துயிர் அளிக்கும் வாய்ப்பு இப்பல்கலைக்கழகங்களினூடாக கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கிழக்கிலங்கை பல்கலைக்கழகம் அண்மைக் காலம் வரை ஏறத்தாழ முன்னூறு மாணவர்களைக் கொண்ட ஒரு சிறிய நிறுவனமாகவே இயங்கி வந்துள்ளது.

ஆயினும், தமிழரின் பாரம்பரிய வாழ்விடங்களில் இவ்வாறு பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டமையைத் தொடர்ந்து தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் பல தமிழ்ப் பிரிவுகள் மூடப்பட நேர்ந்தது. களனி, ஜெயவர்த்தனபுர, றுகுணை, கொழும்பு பல்கலைக்கழகங்களில் இவ்வாறு நிகழ்ந்தது. கொழும்பில் சட்டத் துறை, கல்வித் துறை ஆகிய போதனா பீடங்களில் மட்டுமே தமிழ் மொழிப் பிரிவு காணப்படுகின்றது. இந்நிலையில் தென்னிலங்கையில் பல்வேறு மாவட்டங்களில் வாழுகின்ற தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக கல்வி வாய்ப்பு இப் பல்கலைக்கழகங்களில் மறுக்கப்பட்டுள்ளது. தமிழர்களுக்கென்று இரு பல்கலைக்கழகங்கள் உள்ளன. அங்கு சிங்கள மாணவர்களுக்கு இடமில்லை; எனவே தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கு இடமளிக்கத் தேவையில்லையென்ற கருத்து பரவலாகவுள்ளது. தென்னிலங்கையிலிருந்து யாழ் பல்கலைக் கழகம் சென்ற பல மாணவர்கள் இன்றைய பாதகமான சூழ்நிலைகள் காரணமாக உயர் கல்வியைக் கைவிட்டுள்ளனர். சிலர் தென்னிலங்கை பல்கலைக்கழகங்களுக்கு தற்காலிக மாணவர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு காரணங்களால் அண்மைக் காலங்களில் வரலாறு, புவியியல், பொருளியல், சமூகவியல் மற்றும் விஞ்ஞானத் துறை சார்ந்த தமிழ் அறிஞர்கள் நாட்டை விட்டு வெளியேறியமையால் பல்கலைக்கழக தமிழ்ப் பிரிவுகளில் ஆசிரியர் தட்டுப்பாடு காணப்படுகின்றது. ஒவ்வொரு துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற தமிழ் பேசும் அறிஞர்கள் ஓரிருவரே காணப்படுகின்றனர். முதலாந் தலைமுறையினரான இவ்வறிஞர்கள் வெளிநாட்டு தொழில்கள் வழங்கல், கவர்ச்சியின் காரணமாக உள்நாட்டில் காணப்படும் பாதகமான சூழ்நிலை காரணமாக நாட்டைவிட்டு வெளியேறியுள்ளமை காரணமாக தமிழர்களின் உயர் கல்வி தராதரங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

## பின்னிணைப்பு - அ

## பல்கலைக்கழக மாணவர் அனுமதி 1975 -83

| | 1975 | | | 1976 | | | 1977 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சி | த | பி | சி | த | பி | சி | த | பி |
| கலை | 85.5 | 10.1 | 4.4 | 87.6 | 8.4 | 4.0 | 86.8 | 9.0 | 4.3 |
| பௌதிக விஞ்ஞானம் | 76.4 | 20.3 | 3.3 | 64.7 | 31.4 | 3.9 | 69.6 | 26.8 | 3.0 |
| உயிரியல் விஞ். | 78.3 | 18.3 | 3.7 | 79.1 | 18.5 | 2.4 | 81.0 | 16.7 | 2.3 |
| பொறியியல் | 83.4 | 14.2 | 2.4 | 75.0 | 23.3 | 1.7 | 79.5 | 19.1 | 1.4 |
| மருத்துவம் | 78.9 | 17.5 | 3.6 | 65.9 | 30.4 | 3.7 | 68.0 | 27.8 | 4.1 |
| சட்டம் | 75.0 | 15.4 | 9.6 | 63.6 | 25.5 | 10.9 | 86.0 | 8.0 | 6.0 |
| மொத்தம் | 82.4 | 13.7 | 3.9 | 80.6 | 15.7 | 3.7 | 81.9 | 14.4 | 3.7 |

| | 1978 | | | 1979 | | | 1980 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சி | த | பி | சி | த | பி | சி | த | பி |
| கலை | 83.0 | 11.3 | 5.7 | 80.4 | 13.8 | 5.9 | 82.0 | 13.7 | 4.3 |
| பௌதிக விஞ்ஞானம் | 73.8 | 24.1 | 2.1 | 65.3 | 28.9 | 5.8 | 71.3 | 25.2 | 3.5 |
| உயிரியல் விஞ். | 54.4 | 42.8 | 2.8 | 67.9 | 29.3 | 2.9 | 78.4 | 17.5 | 4.1 |
| பொறியியல் | 58.8 | 36.6 | 4.7 | 65.4 | 30.0 | 4.6 | 70.1 | 29.7 | 0.2 |
| மருத்துவம் | 56.6 | 39.7 | 3.7 | 57.8 | 39.9 | 2.3 | 75.3 | 22.1 | 2.6 |
| சட்டம் | 77.8 | 16.7 | 5.6 | 68.9 | 24.4 | 6.7 | 76.1 | 22.5 | 1.4 |
| மொத்தம் | 75.9 | 19.7 | 4.3 | 73.6 | 21.3 | 5.1 | 79.2 | 17.3 | 3.5 |

| | 1981 | | | 1982 | | | 1983 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சி | த | பி | சி | த | பி | சி | த | பி |
| கலை | 82.8 | 13.3 | 3.9 | 79.4 | 16.3 | 4.3 | 77.1 | 16.4 | 6.6 |
| பௌதிக விஞ்ஞானம் | 63.5 | 31.8 | 4.7 | 61.1 | 33.5 | 5.5 | 73.4 | 23.1 | 3.6 |
| உயிரியல் விஞ். | 72.5 | 24.3 | 3.2 | 71.7 | 24.1 | 2.2 | 70.3 | 23.1 | 3.6 |
| பொறியியல் | 67.2 | 28.1 | 4.7 | 66.9 | 28.5 | 4.5 | 66.4 | 28.1 | 5.5 |
| மருத்துவம் | 72.7 | 23.1 | 4.3 | 72.4 | 25.3 | 2.3 | 72.8 | 22.1 | 5.1 |
| சட்டம் | 73.0 | 16.2 | 10.9 | 68.8 | 24.0 | 7.3 | 78.5 | 11.5 | 10.0 |
| மொத்தம் | 76.4 | 19.2 | 4.4 | 74.0 | 22.0 | 3.9 | 75.0 | 19.3 | 5.7 |

சி - சிங்களவர் த - தமிழர் பி - பிறர்

## பல்கலைக்கழக மாணவர் அனுமதி

| | 1985 - 86 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சி | % | த | % | பி | % |
| கலை | 1423 | 77.7 | 215 | 11.6 | 199 | 10.7 |
| முகாமைத்துவம் | 317 | 83.0 | 40 | 10.5 | 25 | 6.5 |
| சட்டம் | 114 | 78.6 | 21 | 15.0 | 09 | 6.4 |
| பௌதிக விஞ். | 286 | 73.9 | 95 | 24.3 | 07 | 1.8 |
| உயிரியல் விஞ். | 350 | 75.3 | 101 | 21.5 | 15 | 3.2 |
| மருத்துவம் | 338 | 76.9 | 80 | 18.1 | 22 | 5.0 |
| பொறியியல் | 362 | 69.1 | 103 | 25.1 | 24 | 5.8 |
| வர்த்தகம் | 433 | 72.1 | 62 | 11.7 | 33 | 6.2 |

| | 1986 - 87 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சி | % | த | % | பி | % |
| கலை | 1399 | 89.7 | 160 | 9.1 | 197 | 1.2 |
| முகாமைத்துவம் | 337 | 84.0 | 40 | 10.8 | 19 | 5.2 |
| சட்டம் | 148 | 80.6 | 18 | 9.4 | 19 | 10.0 |
| பௌதிக விஞ். | 195 | 82.0 | 37 | 15.4 | 07 | 2.6 |
| உயிரியல் விஞ். | 395 | 86.3 | 68 | 14.2 | 17 | 3.5 |
| மருத்துவம் | 368 | 80.2 | 69 | 15.0 | 22 | 4.8 |
| பொறியியல் | 399 | 74.6 | 85 | 19.0 | 29 | 6.4 |
| வர்த்தகம் | 494 | 84.6 | 59 | 10.2 | 30 | 5.2 |

| | 1987 - 88 | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சி | % | த | % | பி | % |
| கலை | 1250 | 72.7 | 196 | 11.3 | 278 | 16 |
| முகாமைத்துவம் | 320 | 93.9 | 72 | 4.2 | 33 | 1.9 |
| சட்டம் | 159 | 71.0 | 24 | 12.0 | 14 | 7.0 |
| பௌதிக விஞ். | 564 | 80.6 | 128 | 18.3 | 08 | 1.1 |
| உயிரியல் விஞ். | 296 | 66.1 | 141 | 28.4 | 22 | 4.7 |
| மருத்துவம் | 383 | 77.2 | 83 | 19.3 | 17 | 3.5 |
| பொறியியல் | 418 | 74.7 | 112 | 20.0 | 30 | 5.3 |
| வர்த்தகம் | 433 | 74.2 | 105 | 19.0 | 39 | 6.8 |

சி - சிங்களவர் த - தமிழர் பி - பிறர் (முஸ்லிம்கள் உட்பட)

ஆதாரம் : பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் புள்ளி விபர அறிக்கை 1987

# 8

## மூன்றாம் நிலை, தொழிற் கல்வி ஆணைக் குழு

இன்று முறைசார்ந்த பாடசாலைக் கல்வி நிறுவனங்கள், மற்றும் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்வி, ஆசிரியர்கல்வி நிலையங்கள் என்பவற்றுக்கு அப்பால் மூன்றாம் நிலைக்கல்வியையும் தொழிற்கல்வியையும் வழங்கும் நிறுவனங்கள் பரவலாகத் தோன்றியுள்ளன. முறைசார்ந்த கல்வி நிறுவனங்கள் அரசாங்கக் கல்வி அமைச்சின் நிறுவனங்களாக உள்ளன. பிற கல்வி நிறுவனங்கள் பெரும்பாலும் அரசாங்க, தனியார் துறையினரால் நடாத்தப்படுகின்றன; எனவே, இவை கட்டணம் அறவிடும் நிறுவனங்களாக இயங்குகின்றன; அத்துடன் முறை சார்ந்த கல்வி நிறுவனங்கள் கருத்திற்கொள்ளாத பல்வேறு கற்கை நெறிகளை அவை வழங்குகின்றன. அவை கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தம்மைப் பதிவு செய்துகொண்டு வர்த்தக ரீதியில் இயங்குவதாகவும் கூறப்படுகின்றது. கம்ப்யூட்டர், கணக்கியல், வர்த்தகம், உளவியல், வழிகாட்டல், ஆலோசனை கூறல், இசை, நடனம் என்றும் இன்னோரன்ன துறைகளில் இக்கல்வி நிலையங்கள் பயிற்சி நெறிகளை வழங்குகின்றன.

மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்கள் என்பன ஒருவகை பல்கலைக்கழகம் சாராத உயர் கல்வி நிலையங்களாகும். முழுமையான இடைநிலைக்கல்வியைப் (க.பொ.த. உயர்நிலை) பெற்றவர்களே பெரும்பாலும் இங்கு அனுமதி பெறுகின்றனர்.

இவ்வாறு தன்னிச்சையாக உருவாகி இயங்கி வருகின்ற மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களைக் கட்டுப்படுத்தி அவற்றின் கல்வித் தரங்களை மேற்பார்வை செய்ய வேண்டிய அவசியம் ஒன்று உள்ளது. கட்டணம் அறவிட்டாலும் அவை

முறையான பாட ஏற்பாட்டையும் தகுதி வாய்ந்த ஆசிரியர்களையும் கொண்டுள்ளனவா? மாணவர்கள் கற்பதற்கான வசதிகளும் சாதனங்களும் அக்கல்விநிலையங்களில் உள்ளனவா? அவர்கள் கற்கை நெறியின் இறுதியில் எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றனர்? இவற்றையெல்லாம் கண்காணிக்கும் அவசியம் ஒன்று உள்ளது.

1981 ஆம் ஆண்டின், கல்விச் சீர்திருத்த ஆலோசனை பற்றிய அரசாங்க அறிக்கை இப்பின்னணியில் மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டும் என விதந்துரைத்தது (பந்திகள், 105-108). அதன் நோக்கங்களாவன: பல்கலைக்கழகமல்லாத உயர் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தொழிற் கல்வி என்பவற்றுக்கு வழிகாட்டுதல்; அவற்றை இயைபுபடுத்தல்; விருத்தி செய்தல்; விருத்திக்கு உதவுதல் என்பனவாகும். பல்வேறு அரசாங்க நிறுவனங்கள் வழங்குகின்ற பயிற்சி நெறிகளை மட்டுமன்றி அரசாங்கச் சார்பற்ற நிறுவனங்கள் நடாத்துகின்ற நிறுவனங்களும் இவ்வாணைக் குழுவில் தம்மைப் பதிவு செய்தல் வேண்டும்; ஆணைக் குழு பயிற்சி நெறிகளுக்கான வழிகாட்டல்களை வழங்கும்; பயிற்சி வழங்குவோரின் கல்வித் தகுதிகளை நிர்ணயிக்கும்; எத்தனை பேருக்குப் பயிற்சி வழங்கப்படும் என்பதைத் தீர்மானிக்கும்; மாணவர்களைப் பரீட்சித்தல், சான்றிதழ் வழங்கலாகிய பணிகளையும் இவ்வாணைக் குழு மேற்பார்வை செய்யும்.

இதனைத் தொடர்ந்து, 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை, தொழில்நுட்பக் கல்விச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டப்படி மூன்றாம் நிலை, தொழில்நுட்பக் கல்வி ஆணைக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன் நோக்கங்களாவன:

- பொருளாதார முறையின் மனித சாதன தேவைகளுக்கு அமைய மூன்றாம் நிலைக் கல்வியையும் தொழில்நுட்பக் கல்வியையும் திட்டமிடல், இயைபுபடுத்தல், விருத்தி செய்தல்.

- மூன்றாம்நிலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்விக்கான சான்றிதழ்களை வழங்கும் பொருட்டு, தேசிய ரீதியான அமைப்புகளை உருவாக்கல்.
- இக்கல்வி நிலைகள் தொடர்பான கற்கை நெறிகளை வழங்கும் சகல நிறுவனங்களின் கல்வித் தராதரங்களைப் பேணுதல்.

இவ்வாணைக் குழுவுக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன:

- இக்கல்விநிலைகள் தொடர்பான பொதுக் கொள்கை பற்றி அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்.
- அவ்வாறான கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை மேற்பார்வை செய்தல்.
- மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி என்பவற்றை இயைபுபடுத்தல்.
- இக்கல்வி நிலையங்களின் நிதி, மற்றும் ஆளணித் தேவைகள் பற்றி அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
- இச்சட்டப்படி பதிவு செய்யப்படும் நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்குதல்.
- இந்நிறுவனங்களைச் சேர்ந்த ஆசிரியர், மாணவர்களின் நலன்களைப் பேண எத்தகைய வசதிகள் தேவை என்பதை நிர்ணயம் செய்தல்.
- ஆணைக் குழுவின் நோக்கங்களை நிறைவேற்றத் தேவையான பிரமாணங்களை உருவாக்குதல்.

### உறுப்பினர்கள்

இவ்வாணைக் குழுவுக்கு ஒரு பணிப்பாளர் நாயகம் தலைவராக உள்ளார். அத்துடன் தேசிய பயிலுனர், கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் தலைவர், தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம், உயர் கல்வி அமைச்சின் தொழில்நுட்பக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரும் இதில் உறுப்பினராக உள்ளனர். மேலும்

கைத்தொழில், வர்த்தகம் மற்றும் கல்வித் துறைகளில் அனுபவமுள்ள ஆறு பேரை சனாதிபதி, ஆணைக்குழு உறுப்பினராக நியமிக்க முடியும்.

## அபிவிருத்தித் திட்டம்

நாட்டின் மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பக் கல்வி விருத்திக்கான திட்டங்களை வகுப்பது இவ்வாணைக் குழுவின் கடமையாகும். இத்திட்டங்கள் சனாதிபதியின் ஒப்புதலைப் பெறல் வேண்டும். இவை நடைமுறைப்படுத்தப்படுவதை ஆணைக் குழுவே மேற்பார்வை செய்ய வேண்டும். ஒரு மாகாணத்தின் முதலமைச்சர் தனது மாகாணத்துக்கு இவ்வாறான அபிவிருத்தித் திட்டமொன்று வேண்டுமெனக் கேட்டுக் கொண்டால் ஆணைக் குழு அவ்வாறான திட்டமொன்றை வகுத்தல் வேண்டும்.

## பதிவு செய்தல்

1990 ஆண்டில் சட்டப்படி நாட்டிலுள்ள சகல மூன்றாம் நிலை, தொழில்நுட்பக் கல்வி நிலையங்களும் ஆணைக் குழுவிடம் தம்மைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். ஆணைக் குழு இக்கல்வி நிலையங்களிலுள்ள பல்வேறு வசதிகள், போதனாசிரியர் தகுதி என்பன பற்றி ஆராயும். தகுதி வாய்ந்த நிலையங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்படும். இவ்வாறு பதிவு செய்யாது எவரும் கல்வி நிலையங்களை நடாத்த முடியாது.

இவ்வாறு பதிவு செய்துகொண்ட கல்வி நிலையங்களைப் பொறுத்தவரையில் ஆணைக்குழு பின்வரும் அதிகாரங்களைக் கொண்டு விளங்கும்.

- கல்வி நிலையம் வழங்கும் கற்கை நெறிகள் பற்றித் தீர்மானித்தல்.
- பயிற்சி நெறிகளுக்கு அனுமதி பெறும் மாணவர் தகுதி பற்றித் தீர்மானித்தல்.
- போதனாசிரியர்களின் கல்வித் தகுதிகளைத் தீர்மானித்தல்.

- பாட ஏற்பாடு, பாடத் திட்டங்கள் பற்றிய வழிகாட்டல்களை வழங்கல்.
- பேணப்பட வேண்டிய கல்வித் தராதரங்கள் பற்றித் தீர்மானித்தல்.
- மாணவர்கள், ஆசிரியர்களின் நலன்களைப் பேணத் தேவையான வசதிகள் பற்றித் தீர்மானித்தல்.
- பதிவு செய்யப்பட்ட கல்வி நிலையங்களின் நிர்வாகிகளினுடைய கடமைகளைத் தீர்மானித்தல்.
- கல்வி நிலையங்களின் பாட ஏற்பாட்டை அங்கீகரித்தல்.
- பரீட்சைகள் எவ்வாறு நடாத்தப்படல் வேண்டும் என்பதைத் தீர்மானித்தல்.
- போதனாசிரியர்களின் கல்வித் தகுதிகள், பயிற்சிக் காலம், சம்பளங்கள், நியமனத் தரங்கள் என்பவற்றைத் தீர்மானித்தல்.
- பாடசாலைகள் நடைபெற வேண்டிய நாட்கள், மணித் தியாலங்கள் என்பன பற்றித் தீர்மானித்தல்.

கல்வி நிலையங்களுக்குச் சென்று பரிசோதனை செய்யவும் ஆணைக் குழுவுக்கு அதிகாரம் உண்டு. இக்கல்வி நிலையங்கள் தேசியக் கொள்கையை மீறி நடந்தாலும் அல்லது அபிவிருத்தித் திட்டத்தை அலட்சியம் செய்து நடந்தாலும் அதன் பதிவு இரத்துச் செய்யப்படும்.

மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்கள் இணைப் பட்டங்களை வழங்கவும் அனுமதிக்கப்படும். அதற்கான ஒப்புதலை வழங்க ஆணைக் குழு இணை பட்டக் குழுவொன்றை ஏற்படுத்த முடியும்.

வளர்ச்சியடைந்த நாடுகளும் புதிய கைத்தொழில்மயமாக்க நாடுகளும் இன்று தேசிய, சமூக, பொருளாதார அபிவிருத்தியில் மூன்றாம் நிலை மற்றும் தொழில்நுட்பக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளன. பாடசாலைக் கல்விமுறைக்கு அப்பாலுள்ள இக்கல்வி நிலைகளை மேம்படுத்த அவை உறுதி பூண்டுள்ளன. பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு வகைப்பட்ட பயிற்சியையும் திறன்களையும் வழங்கும் முறையில்

பாடசாலைக் கல்வி ஒழுங்கு செய்யப்படவில்லை. இந்நிலையில், இக்கல்வி நிலையங்கள் இத்தேவைகளை ஓரளவுக்கு நிறைவுசெய்து வருகின்றன. இலங்கையிலும் இக்கல்வி நிலைகளின் முக்கியத்துவம் உணரப்பட்டு அவற்றை ஒழுங்குபடுத்தித் திட்டமிடும் நோக்கின் விளைவாகவே இவ்வாணைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அரசாங்க அமைப்புகளே இக்கல்வி நிலையங்களை அமைத்தன. அண்மைக் காலங்களில் அரசாங்கமல்லாத அமைப்புகளும் பல்வேறு பயிற்சி நிலையங்களை அமைத்து வருகின்றன. இவை பெரும்பாலும் கிராமப்புறங்களைக் கருத்திற்கொண்டு பணியாற்றுகின்றன.

அரசாங்கத் துறை சார்ந்த அமைப்புகள் இளைஞர்களுக்குத் தொழிற்பயிற்சி அளிக்க செய்துள்ள முதலீடுகளைப் பற்றி இவ்வாணைக் குழு ஆராய்ந்து வருகிறது. இருபது அமைச்சுகள் 398 கோடி ரூபாவை முதலீடு செய்துள்ளதாக ஆணைக் குழு கண்டறிந்துள்ளது. தொழிற்பயிற்சித் திட்டத்துக்கென்று மனித சாதன அபிவிருத்தி நிதியமொன்றை உருவாக்கும் நோக்கமும் இவ்வாணைக் குழுவுக்கு உண்டு.

ஒரு ஆரம்ப மதிப்பீட்டின்படி, இலங்கையில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை 3000 என கணக்கிடப்பட்டுள்ளது. அவற்றில்:

தனியார் நிறுவனங்கள் - 1000

அரசுத் துறை நிறுவனங்கள் -1750

அரசாங்கமல்லாத அமைப்புகளின் நிறுவனங்கள் - 250

ஆணைக் குழு இவற்றில் 2000 நிறுவனங்களை இனங் கண்டுள்ளது; 700 நிறுவனங்கள் பதிவு செய்வதற்காகக் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

பல்வேறு மூன்றாம் நிலை, தொழிற்கல்வி நிலையங்களைப் பின்வரும் வகையில் பாகுபடுத்தலாம் என்று சட்ட ஏற்பாடுகள் கூறுகின்றன:

1. மூன்றாம் நிலைக் கல்வி நிலையம்

2. தொழிற்கல்வி நிலையம்

3. மூன்றாம் நிலை, தொழிற்கல்வி நிலையம்.

இன்று 14 மூன்றாம் நிலைக் கல்வி நிலையங்களும் 655 தொழிற்கல்வி நிலையங்களும் 32 மூன்றாம் நிலை, தொழிற் கல்விநிலையங்களும் பதிவுக்காக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன. இந்த 700 கல்வி நிலையங்களும் ஒரு இலட்சம் மாணவர்களுக்கு ஏதோ ஒருவகையான கல்வியையும் பயிற்சியையும் வழங்கி வருகின்றன; ஏறத்தாழ 400 பயிற்சி நெறிகளை இந்நிலையங்கள் வழங்குவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் இப்பயிற்சி நெறிகளை சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட தொழில் வகை அமைப்புக்கேற்ப வகைப்படுத்தும் நோக்கமும் ஆணைக் குழுவுக்கு உண்டு.

மூன்றாம் நிலைக் கல்வியையும் தொழிற்கல்வியையும் நிறுவனமயப்படுத்தும் முயற்சி பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு மிகப் பயனுடையதாகும். இவ்வாணைக் குழுவின் நியமனம் இதனைச் செய்வதற்கான முக்கிய முயற்சியாகும். இக்கல்விநெறிகளை சமூகம், குறிப்பாக இளைஞர்கள் இனங்கண்டு தமக்குப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்ய முயலவேண்டும். இக்கற்கை நெறிகளினூடாகக் கண்ணியமான தொழில்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

# 9

## தேசிய கல்வி ஆணைக் குழு

தேசிய கல்வி ஆணைக் குழுவொன்றினை அமைப்பதற்கான, சட்ட மூலமொன்று 1991, மார்ச் மாதம் 5 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் கல்வி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இளைஞர் அமைதியின்மை பற்றி ஆராய்ந்த சனாதிபதி ஆணைக் குழு இவ்வாறான அமைப்பொன்றின் தேவை பற்றி தனது அறிக்கையில் எடுத்துக்கூறியிருந்தது.

கல்விக் கொள்கையில் எப்போதும் ஒரு தொடர்ச்சி இருக்கவேண்டும்; இவ்வாறான தொடர்ச்சி இல்லாவிடில், அரசாங்க மாற்றங்களுக்கும் அமைச்சர்களின் மாற்றங்களுக்கும் ஏற்ப கல்விக் கொள்கையும் செயற்பாடும் பல்வேறு மாற்றங்களுக்குள்ளாகின்றன. இவ்வாறான மாற்றங்களும் தற்காலிகமானவையாகவே அமைகின்றன. கல்வித் துறைக்கு ஒதுக்கப்படும் நிதியும் மூல வளங்களும் இதனால் விரயமாக நேரிடுகின்றது.

கல்விப் பிரச்சினைகள் அவ்வப்போது எழும்போது அவற்றின் பல்வேறு பரிமாணங்கள் பற்றி தீர்க்கமாக ஆராயாது மேலெழுந்தவாரியான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. இவ்வாறான, அப்போதைக்கான முடிவுகள் பல புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்து மூலக் கல்விப் பிரச்சினை மேலும் சிக்கலுக்குள்ளாக்கப்பட்டது. இதனால் பெரும்பாதிப்புகளுக்குட்பட்டவர்கள் பாடசாலைப் பிள்ளைகள் ஆவார்கள். கல்விமுறை மீதான இவ்விதமான திட்டமற்ற

அணுகுமுறைகளும் இளைஞர் மத்தியில் அமைதியின்மை தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும்.

கடந்த அரை நூற்றாண்டுக் கால இலங்கையின் கல்வி வரலாற்றை நுணுகி ஆராய்ந்தால் இலவசக் கல்வி, தாய்மொழிக்கல்வி, அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றமை போன்ற சீர்திருத்தங்களே எமது தேசிய கல்வி முறையில் நிரந்தர அம்சங்களாக இருந்து வருகின்றன.

உயர் கல்வித் துறையில் 1966 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட தேசிய உயர் கல்விப் பேரவை 1972 இல் நீக்கப்பட்டது; 1972 தொடக்கம் அமைக்கப்பட்ட தனிப் பல்கலைக்கழக முறை 1978 இல் நீக்கப்பட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அமைக்கப்பட்டது; அத்துடன் தனிப் பல்கலைக்கழக முறை நீக்கப்யட்டு பல்வேறு பல்கலைக்கழகங்கள் சுயாட்சி. உரிமையுடன் இயங்க அனுமதிக்கப்பட்டன. 1972இன் பின் பல்கலைக்கழகங்களில் தொழில்மையப் பாட நெறிகள் தொடங்கப்பட்டன; அரசாங்க மாற்றத்துடன் அவையும் கைவிடப்பட்டன. 1965-1970 காலப் பகுதியில் அமைக்கப்பட்ட கனிஷ்ட பல்கலைக்கழகங்களும் 1970இல் ஏற்பட்ட அரசாங்க மாற்றத்துடன் நீக்கப்பட்டன. இவ்வாறே மாணவர் அனுமதிக்கொள்கைகளும் 1970-1990 வரை பல மாற்றங்களுக்குள்ளாயின. உயர் கல்வித் துறை தொடர்பான கொள்கையில் ஏற்பட்ட இவ்வாறான மாற்றங்கள் அத்துறையின் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தன.

இதே போன்று பாடசாலைக் கல்வித் துறையிலும் ஆசிரியர் பயிற்சித் துறையிலும் அரசாங்க மாற்றங்களுக்கேற்ப நிகழ்ந்த பல்வேறு மாற்றங்கள் அத்துறைகளின் வளர்ச்சியையும் செயற்றிறனையும் பெரிதும் பாதித்தன.

பாடசாலைக் கல்வியில் 1967 ஆம் ஆண்டளவில் அறிமுகம் செய்யப்பட்ட 'வேலை அனுபவம்' பின்னர் நீக்கப்பட்டது. 1972 இல் அறிமுகமான தொழில் முன்னிலைப் பாடம் 1977 இன் பின் நீக்கப்பட்டு வாழ்க்கைத் திறன்கள் என்ற புதிய பாடம் அறிமுகம் செய்யப்பட்டது. புவியியல், பொருளியல், வரலாறு, குடியியல் ஆகிய பாடங்கள் நீக்கப்பட்டு

1972 முதல் சமூகக் கல்வி என்ற தனிப் பாடம் அறிமுகம் செய்யப்பட்டது. இன்று வரலாற்றுக் கல்வியின் முக்கியத்துவம் உணரப்பட்டு அப்பாடம் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கனிட்ட இடைநிலைப் பாடசாலையின் முடிவில் சிரேட்ட இடைநிலைச் சான்றிதழ், கல்விப் பொதுத் தராதர சாதாரண நிலைச் சான்றிதழ், பொதுக் கல்வித் தேசிய சான்றிதழ் என மாறிமாறி வந்து இன்று க.பொ.த. (சா.நி) பத்திரம் நிலை கொண்டுள்ளது. அரசாங்க மாற்றங்களுக்கு ஏற்ப கல்வித்துறையில் ஏற்பட்டு வந்த மாற்றங்களுக்கு இவ்வாறான பல உதாரணங்களைக் கூறலாம்.

இந்நிலையில் கல்விக் கொள்கையொன்று தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்யவும், கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில் பல்வேறு சாரார்களின் அபிப்பிராயங்களையும் கவனத்திற்கொண்டு ஒருமித்த கருத்தை உருவாக்கவும் பொருத்தமான அமைப்பொன்றின் தேவை இன்று உணரப்பட்டுள்ளது. இப்பின்னணியில் தேசிய கல்வி ஆணைக் குழு எனும் அமைப்பொன்றினை இளைஞர் பற்றிய சனாதிபதி ஆணைக் குழு விதந்துரைத்தது. உடனடியாகப் பத்து ஆண்டுத் திட்டமொன்றினை உருவாக்கி 1991 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது இளைஞர் ஆணைக் குழுவின் கருத்தாக இருந்தது.

இன்று கல்விப் பொறுப்பு மாகாண சபைகளிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. எனவே தேசிய ரீதியாகக் கல்விக் கொள்கையை வகுக்கவும் பல்வேறு மாகாணங்களிலும் தேசிய கல்வித் தராதரங்களைப் பேணவும் அத்தராதரங்களை வரையறை செய்து காலத்துக்குக் காலம் மறுபரிசீலனை செய்யவும் பொருத்தமான அமைப்பு தேவைப்படுகின்றது. தேசிய ஆணைக் குழுவின் நியமனம் இத்தேவையை நன்கு நிறைவு செய்யும் அமைப்பாக விளங்க முடியும்.

இவ்வாணைக் குழுவில் கல்வித் துறை மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அறிஞர்கள் இடம் பெற்றுள்ளனர். இதனால் அரசாங்கம் கல்வி முறையை வழிநடத்திச் செல்லவும்

புதிய கல்விக் கொள்கைகளை வகுக்கவும் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனையைப் பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வாணைக் குழு இவ்விடயங்களில் நாட்டின் சனாதிபதிக்கு ஆலோசனை கூறும். இவ்வாறு வழங்கப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் நாட்டின் தேசிய கல்விக்கொள்கை உருவாக்கப்படும்.

இதற்கு முன்னரும் நாட்டின் கல்வி முறைகளை ஆராய்ந்து, குறைபாடுகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய விதந்துரைகளைச் செய்யும் நோக்குடன் பல ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டன. ஆனால் அவை தமது பணியை முடித்து அறிக்கை சமர்ப்பித்தவுடன் செயலற்றுவிட்டன. ஆனால் தேசிய கல்வி ஆணைக் குழு நிரந்தர இயல்பு கொண்டதாக இருக்கும்.

தேசிய கல்வி ஆணைக் குழுச் சட்டத்தின் நான்காவது ஏற்பாட்டின்படி இவ்வாணைக் குழுவில் பின்வருவோர் உறுப்பினர்களாக இருப்பர்.

1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தலைவர்.

2) கல்வி, உயர் கல்வி அமைச்சரின் விதந்துரையின் பேரில் சனாதிபதியால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்.

3) மாகாண சபைகளுக்குப் பொறுப்பான அமைச்சரின் விதந்துரையின் பேரில் சனாதிபதியால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்.

4) நிதிக்குப் பொறுப்பான அமைச்சரின் விதந்துரையின் பேரில் சனாதிபதியால் நியமிக்கப்படும் ஓர் உறுப்பினர்.

5) கல்வியியல், முகாமைத்துவம் மற்றும் பிற துறைகளில் புகழ்பெற்று விளங்கும் பத்து உறுப்பினர் சனாதிபதியால் நியமிக்கப்படுவர்.

ஆணைக் குழுவின் தலைவர், துணைத் தலைவர் (கொள்கை), துணைத் தலைவர் (திட்டமிடல்) ஆகியோர் முழுநேர ஊழியர்களாகப் பணியாற்றுவர்.

தேசிய கல்வி ஆணைக் குழுச் சட்டப்படி தேசிய கல்விக் கொள்கை என்பது கல்விமுறையின் பரந்துபட்ட பின்வரும் சகல அம்சங்களையும் உள்ளடக்கும்.

- கல்வியின் நோக்கங்கள்.
- பாடசாலைப் புகாநிலை, ஆரம்ப, இடைநிலை, மூன்றாம்நிலை, உயர்நிலை, முறைசார்ந்த, முறைசாரா, வளர்ந்தோர், விசேட, உயர் தொழில், சமயம் ஆகிய சகல கல்விநிலைகளும்.
- பாடசாலைகளை நிறுவுதல், மாணவர் அனுமதி நிபந்தனைகள், ஆசிரியர் தெரிவு நிபந்தனைகள்.
- பாடப்பொருள், பாட ஏற்பாடு, கற்பித்தல் சாதனம்
- ஆசிரியர் உட்பட சகல கல்விச் சேவை அலுவலர்களைத் தெரிவு செய்தல், ஒழுங்குக் கட்டுப்பாடு, தொழில்சார் வளர்ச்சி
- கல்வி மூலவளங்களும் சமூகத்தின் பங்கும்
- மதிய உணவு, உடற்கல்வி போன்ற இதரசேவைகள்.

தேசியக் கல்விக் கொள்கை என்பது முழுக் கல்வி முறையின் சகல அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும் என்பதும் ஆணைக் குழு இச்சகல விடயங்களிலும் தேசியக்கொள்கையை உருவாக்கும் வகையில் விதந்துரைகள் செய்ய வேண்டும் என்பதும் தெளிவாகின்றது.

அவ்வாறு தீர்மானிக்கப்படும் தேசிய கல்விக் கொள்கையினை சனாதிபதி காலத்துக்குக் காலம் பிரகடனம் செய்வார்; கல்விக்குப் பொறுப்பானவர்களும் நிறுவனங்களும் அக்கொள்கைக்கு அமைய நடத்தல் வேண்டும் என்பதும் சட்டத்தின் 2 (1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் அதி உயர்ந்த அதிகார பீடத்தினரின் அக்கறையும் கவனமும் கல்வித்துறைக்கு இன்று தேவைப்படுகின்றது என்பதையும் தேசிய பிரச்னை எனக் கருதப்படும் விடயங்களில் அமைச்சர்கள் இருக்கத்தக்கதாக, உயர் அதிகாரபீடத்தின் நேரடி கண்காணிப்புக்கும் இடமுண்டு என்பதையும் இது காட்டுகின்றது.

உயர் கல்வியைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு பல்வேறு கடமைகளையும் அதிகாரங்களையும் கொண்டு விளங்குகின்றது; எனினும் தேசிய ஆணைக்குழு உயர்கல்வி தொடர்பாக ஆலோசனைகளை வழங்கமுடியும், ப. மா. ஆணைக் குழுவின் அதிகாரங்களும் கடமைகளும் மட்டும், உயர் கல்வி தொடர்பான கொள்கைகளை வகுப்பதற்கும் உயர் கல்வி வளர்ச்சிக்கும் போதுமானதாக அமையாததன் காரணமாக தே.க. ஆணைக் குழுவிடம் உயர் கல்விக் கொள்கைகளை ஆராயும் பொறுப்பு விடப்பட்டுள்ளது என்று கொள்ள இடமுண்டு. தே. க. ஆணைக் குழுவில் ப.மா. ஆணைக் குழுத் தலைவரும் ஓர் உறுப்பினராக இருப்பாராதலின் இரு ஆணைக் குழுக்களும் உயர் கல்வி விடயத்தில் இணக்கத்துடன் செயற்பட முடியும். மேலும் தே.க. ஆணைக் குழு அமைக்கப்பட்டாலும் முழுக் கல்விமுறையினதும் ஒரு முக்கிய அங்கமான உயர் கல்விக்கென ப.மா. ஆணைக் குழு போன்ற ஒரு விசேட அமைப்பு தேவையே! மறுபுறம் தே.க. ஆணைக்குழு தேசிய கல்விக் கொள்கையை வகுப்பதில் விதந்துரை செய்யும்போது உயர் கல்வியைக் கருத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. சட்டத்தின் எட்டாவது ஏற்பாட்டின்படி ஆணைக் குழுவின் பொதுவான தொழிற்பாடுகளாவன:

- கல்விக் கொள்கையில் தொடர்ச்சியையும் சமுதாயத்தில் மாறிவரும் தேவைகளுக்கேற்ப கல்விமுறையில் மாற்றங்கள் ஏற்படுத்துவதையும் உறுதி செய்யும் வகையில் கல்விக் கொள்கையின் சகல அம்சங்கள் பற்றியும் சனாதிபதிக்கு விதந்துரைத்தல்; இப்போதைய கல்விக் கொள்கை, கல்வித் திட்டம் பற்றி உடனடியாக ஆராய்தலும் விரிவான கல்விக் கொள்கையைப் பற்றி சனாதிபதிக்கு விதந்துரைத்தலும்.
- காலத்துக்குக் காலம் நாட்டின் கல்விக் கொள்கைகளையும் கல்வித் திட்டங்களையும் பரிசீலனை செய்து, தேவையான மாற்றங்களை விதந்துரைத்தல்.

- சனாதிபதி ஆலோசனை கேட்கும் வேறு எந்தக் கல்வி விடயங்கள் பற்றியும் தேவையான யோசனைகளை வழங்கல்.

முக்கியமாக கல்விக் கொள்கையில் ஒரு தொடர்ச்சியை உறுதிப்படுத்துவது, ஆணைக்குழுவின் முக்கிய தொழிற்பாடாகும். எமது கல்விச் செயற்பாட்டில் காணப்பட்ட ஒரு முக்கிய குறைபாட்டை இத்தொழிற்பாடு நீக்கிவிடும். இவ்வாறான ஆணைக் குழு, நாட்டிற்குப் பயனுள்ள, நீடித்து நிலவக் கூடிய கல்வித் துறை மாற்றங்களையே விதந்துரைக்கும் முக்கிய பணியைச் செய்ய வேண்டும்.

கல்வி முறையைத் தனித்து எடுத்து ஆராயாது, அதனை சமூகம் என்ற பாரிய அமைப்பின் ஓர் அங்கமாக எடுத்து நோக்கினால் சமூக மாற்றங்களுக்கு ஏற்றவாறு கல்விமுறை மாற்றமடையாதிருப்பது தெரியவரும். பாரம்பரியமான நூற்கல்விப் பாட ஏற்பாடு, தொழிற்பயிற்சியின்மை, மரபுவழிக் கற்பித்தல் முறைகள் தொடர்ந்து கல்வி முறையின் அம்சங்களாக நிலவிவந்துள்ளன. இவ்வாறான கல்விமுறை மாற்றங்களுக்குட்படுத்தப்படாது, அப்படியே விரிவு செய்யப்பட்டது. இதனால் பொருளாதார முறையால் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு மிதமிஞ்சிய கற்றோர், வேலையின்மைப் பிரச்னை, அதன் விளைவான சமூக, அரசியல், உளவியல் பிரச்சினைகள் என்று பல சிக்கல்களை எதிர்நோக்கியது. இந்நிலையில் மாறிவரும் சமூக தேவைகளுக்குக்கேற்ப கல்விக் கொள்கையில் மாற்றங்களைக் கொண்டு வருவது தே. ஆ. குழுவின் குறிப்பிடத்தக்க தொழிற்பாடாகும்.

மேற்கண்ட பொதுவான விடயங்களை விடப் பின்வரும் குறிப்பான விடயங்களிலும் ஆணைக் குழு விதந்துரைகளைச் செய்யும் (பிரிவு 8 (2))

- தொழில், கைத்தொழில், சமூகத் தேவைகள் என்பவற்றுடன் பொருத்தப்பாடுடையதான கல்வியை வழங்கும் வகையில் பாட ஏற்பாட்டையும் கற்பித்தல் முறைகளையும் மாற்றியமைத்தல்.

- மாணவர்களின் ஆற்றல்களை வளர்க்கும் வகையில் ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கல்.
- கல்வி நிறுவனங்களுக்கும் சமூகத்துக்குமிடையில் உள்ள தொடர்புகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள்.
- மனித வளர்ச்சிக்கான மூலவள நிலையங்களாக கல்வி நிறுவனங்களை விருத்தி செய்தல்.
- பாடசாலைகளில் பிராந்திய வேறுபாடுகளை அகற்றுதல்
- ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோரின் தொழில்சார் அந்தஸ்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள்.
- பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளுக்கான கல்விநிகழ்ச்சித் திட்டங்கள்.
- சகல மாணவர்களினதும் சமய, பண்பாட்டு அபிலாசைகளை நிறைவுசெய்ய உதவும் பாட ஏற்பாட்டு மாற்றங்கள்.

மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக, இன்று போதிய ஏற்பாடுகளோ அல்லது இவை பற்றிய திட்டவட்டமான கொள்கைகளோ இன்னும் வகுக்கப்படவில்லை என்றே கூறவேண்டும். இவை இன்றைய கல்விமுறையில் குறைபாடுடைய அம்சங்களாக உள்ளன; இவற்றில் உடனடியான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இருக்கின்றது. இந்நிலையில், இக்குறிப்பிட்ட விடயங்கள் தே. க. ஆணைக் குழுவின் தொழிற்பாடுகளுக்குக் கீழ்வருவன என சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

### அதிகாரங்கள்

கல்விப் பிரச்னைகளுக்கு விதந்துரை வழங்கும் தொழிற்பாட்டை சரிவரச் செய்வதற்கு ஆணைக் குழு பல்வேறு ஆராய்ச்சிகளையும் மதிப்பீடுகளையும் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது; பொதுமக்கள் மற்றும் நிபுணர்களைக் கொண்ட பொது அமர்வுகளை நடத்திக் கருத்துக்களைக் கேட்க முடியும். கல்வித் திட்டங்களை உருவாக்க முடியும்; தகவல் தரவு வங்கியொன்றை ஏற்படுத்த

முடியும்; சமமான வெளிநாட்டு அமைப்புகளுடன் தொடர்பு கொள்ள முடியும். இலங்கையிலுள்ள பிற நிறுவனங்களுடன் இணைந்து கல்வியியல் ஆராய்ச்சிகளை ஒழுங்கு செய்ய முடியும் (பிரிவு 10(1)). தனது கடமைகளைச் செவ்வனே நிறைவேற்ற இவ்வாறான பரந்துபட்ட அதிகாரங்கள் சட்டபூர்வமாக ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தே.க. ஆணைக் குழு இலங்கையின் கல்வி வரலாற்றில் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்ட ஒரு புத்தாக்க அமைப்பாகும். நாட்டின் கல்விக் கொள்கையைத் தீர்மானிப்பதற்கு தேவையான விதந்துரைகளைச் செய்ய அமைக்கப்படவுள்ள ஒரு நிரந்தர நிறுவனமாகும். கல்வி முறையின் சகல நிலைகளையும் அம்சங்களையும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து விதந்துரை செய்யும் மகத்தான பொறுப்பு ஆணைக் குழுவிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆணைக் குழுவின் அறிவுசால் உறுப்பினர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இப்பெரும் பொறுப்பின் தாற்பரியத்தை நன்கு உணர்ந்து செயற்பட்டு கல்விமுறையின் எதிர்கால அபிவிருத்திக்குப் பொருத்தமான கல்விக் கொள்கையை உருவாக்குவதில் பெருபணியாற்றிட வேண்டும்.

# 10

## 'சிறிய' பாடசாலைகள்

இலங்கையில் இன்று ஏறத்தாழ 10,000 பாடசாலைகள் கல்வி வழங்கி வருகின்றன. ஆயினும், இவை கல்வி வசதிகள், மாணவர் தொகை, ஆசிரியர் தொகை என்பவற்றில் சமமானவை அல்ல. 1985 ஆம் ஆண்டில் இப்பத்தாயிரம் பாடசாலைகளில் 24 வீதமானவை 100 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்டனவாக விளங்கின. மேலும் 17 வீதமான பாடசாலைகள் ஒரு அல்லது இரு ஆசிரியர்களைக் கொண்டனவாக விளங்கின. இப்பாடசாலைகள் பொதுவாக தூரப் பிரதேசங்களிலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாவட்டங்களிலும் காணப்பட்டன. இப்பாடசாலைகளில் குடிநீர்வசதி, விளையாட்டுத் திடல், சுகாதார வசதிகள், நூல்நிலையங்கள், மின்சார வசதி, வானொலி மற்றும் செவிப்புல, கட்புல, கற்பித்தல் சாதனங்கள் எவையும் போதுமான அளவு இருப்பதில்லை. அத்துடன் இச்சிறிய பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெற்றோர்களினால் அனுப்பப்படுபவர்களாவர். இப்பாடசாலைகளில் பயிலுகின்ற பெற்றோர்கள் சேரிவாழ் மக்களாகவும் சேனைச் செய்கை செய்பவர்களாகவும் பெருந் தோட்டத் தொழிலாளர்களாகவும் சிறிய சமூகங்களாக வாழும் மீன்பிடி தொழில் செய்பவர்களாகவும் சமயாசமய ஊழியர்களாகவும் காணப்பட்டனர்.

இப்பாடசாலைகளில் பயிலுகின்ற மாணவர்களினுடைய கல்வியை இடையில் நிறுத்தும் வீதம் மிக அதிகமாகக் காணப்பட்டது. அவர்களுடைய கல்விச் சித்திகளும் மிகவும் குறைவாக இருந்தன; அவர்களுடைய ஆரம்பக் கல்வி

முடிவடைந்த பின்னர், இடைநிலைக் கல்வியைப் பெறும் வாய்ப்பும் மிகக் குறைவாக இருந்தது.

அண்மைக்கால தரவுகளின்படி மொத்தப் பாடசாலைகளில் 7 வீதமானவை, 50க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்டவை; 15 வீதமான பாடசாலைகள் 100க்கும் குறைந்த மாணவர்களைக் கொண்டவை; சில ஆண்டுகளுக்கு முன்னர் பின்தங்கிய மாவட்டங்களான மன்னாரில் 41 வீதமான பாடசாலைகளும் வவுனியாவில் 56 வீதமானவையும் அனுராதபுரத்தில் 33 வீதமானவையும் இவ்வாறான சிறிய பாடசாலைகளாக விளங்கின. இன்று முல்லைத்தீவு, வவுனியா போன்ற மாவட்டங்களில் ஏறத்தாழ 25 வீதமான பாடசாலைகளில் 100க்கும் குறைந்த மாணவர்களே கல்வி பயிலுகின்றனர். இன்று மாத்தளை, நுவரெலியா, மன்னார், மட்டக்களப்பு, அனுராதப்புரம், பண்டாரவளை போன்ற கல்வி மாவட்டங்களிலும் 25 வீதமான பாடசாலைகள் சிறிய பாடசாலைகளாகவே விளங்குகின்றன. சுருங்கக் கூறின், நாட்டின் நான்கு பாடசாலைகளில் ஒரு பாடசாலை சிறிய பாடசாலையாக விளங்குகின்றது.

இப்பாடசாலைகளில் கற்பிக்கின்ற ஒரு அல்லது இரு ஆசிரியர்கள் ஒரே நேரத்தில் பல வகுப்புகளில் கற்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு. இவ்வாறு ஒரே நேரத்தில் பல வகுப்புகளில் ஆசிரியர் எவ்வாறு கற்பிக்கலாம் என்பதற்கான பல ஆலோசனைகளும் வழிமுறைகளும் உண்டு. ஆயினும் இத்தகைய கற்பித்தல் முறைகளில் இவ்வாசிரியர்கள் அனைவரும் பயிற்சி பெற்றவர்களாகத் தெரியவில்லை.

சிறிய பாடசாலைகள் கல்வித் தரத்திலும் வசதிகளிலும் குறைபாடுடையனவாயும் அவற்றை முற்றாக ஒழித்துவிட முடியாது. ஏனெனில் இப்பாடசாலைகள்தாம் தூரப் பிரதேசங்களில் வாழ்கின்ற பிள்ளைகளுக்கும் பின்தங்கிய சமூக வகுப்பினருக்கும் ஏதேனும் கல்வி வாய்ப்புகளை வழங்குகின்ற நிலையங்களாக விளங்குகின்றன; இப்பாடசாலைகள் இலங்கையில் மட்டுமன்றி ஏனைய வறிய நாடுகளிலும் செல்வந்த நாடுகளிலும் கூடக் காணப்படுகின்றன. ஆயினும் பொதுவாக இப்பாடசாலைகள் விரும்பப்படாமைக்குக் காரணம், அவற்றின் குறைந்த கல்வித் தராதரங்களும்,

அவற்றினால் ஏற்படும் அதிக செலவுகளுமாகும். மேலும் இப்பாடசாலைகள் பெரும்பாலும் தூரப் பிரதேசங்களில் அமைந்திருப்பதால் அவற்றின் கல்விச் செயற்பாடுகளை முறையாக மேற்பார்வை செய்ய முடியாதுள்ளது. இப்பாடசாலைகளின் முக்கியத்துவம் கருதி கல்வி அமைப்பில் யூனிசெபின் ஆதரவுடன் சிறிய பாடசாலைப் பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. ஆயினும் இப்பிரிவின் செயற்பாடுகள் சரியாக மதிப்பீடு செய்யப்படாது நிறுத்தி வைக்கப்பட்டன.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளில் பெரும்பாலானவர்கள் இவ்வாறான தரம் குறைந்த, வசதிகளற்ற சிறிய பாடசாலைகளிலேயே பயின்று வந்தனர். 1984 இல் 63,000 பிள்ளைகள், 558 தோட்டப் பாடசாலைகளில் கல்வி பயின்றனர். அதாவது ஒரு பாடசாலையில் சராசரியாக 100 பிள்ளைகள் கல்வி பயின்றனர். இப்பாடசாலைகள் 11 மாவட்டங்களில் காணப்பட்டன. இப்பாடசாலை ஆசிரியர்களில் 22 வீதமானவர்கள் தொண்டர் ஆசிரியர்களாகக் காணப்பட்டனர். இங்கு ஒரு ஆசிரியருக்கு 55 மாணவர்கள் என்ற முறையில் ஆசிரியர்- மாணவர் விகிதம் அமைந்தது. பாடசாலையில் சேர்ந்த மாணவர்களில் 30 வீதமானவர்கள்கூட இறுதி வகுப்பைச் சென்றடையவில்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் கடந்த 75 ஆண்டுக்காலமாக இவ்வாறான சிறிய பாடசாலைகளின் பயின்றதன் காரணமாக அவ்வகுப்பினர் கல்வித் துறையில் பின்தங்க நேரிட்டது. இன்று இச்சிறிய பாடசாலைகள் ஒன்றிணைக்கப்பட்டும், வெளிநாட்டு உதவிகள் மூலம் விரிவுபடுத்தப்பட்டும் வருகின்றன. ஆயினும் இச்சிறிய பாடசாலைகள் பின்வரும் குறைபாடுகளை உடையனவாகக் காணப்பட்டன.

- அடிப்படை வசதிகள் இல்லாமை.
- தொழிற்தகுதிகளைப் பெறாத ஆசிரியர்கள்.
- ஆசிரியர்களிடம் கற்பித்தலில் ஈடுபாடு இல்லாமை.
- இடைநிலைக் கல்வி வாய்ப்புகள் இல்லாமை.
- மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தும் வீதம் அதிகம்.

- தோட்டப் பாடசாலைகள் மேற்பார்வை செய்யப்படாமை.
- ஆசிரியர் பற்றாக்குறை.
- பெரும்பாலான 1-2 ஆசிரியரைக் கொண்ட சிறிய பாடசாலைகளில் ஒரே நேரத்தில் பல வகுப்புகளுக்குக் கற்பிக்கும் ஏற்பாடுகள் இல்லாமை.

## பாட ஏற்பாட்டில் தொழிற்கல்வி அம்சம் இல்லாமை

சிறிய பாடசாலைகளைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் எத்தகைய வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம் என்பது பற்றிப் பல ஆலோசனைகள் சொல்லப்படுகின்றன.

- சிறிய பாடசாலை அமைப்பை ஏற்றுக் கொண்டு, ஒரே ஆசிரியர் வகுப்புகளுக்கு ஒன்றாகக் கற்பிப்பதற்கான வழிமுறைகளைக் கையாளலாம்.
- இரண்டாண்டுக்கு அல்லது மூன்றாண்டுக்கு ஒரு முறை மாணவர்களை அனுமதித்து பெரிய வகுப்புகளை உருவாக்கிக் கற்பிக்கலாம்.
- போக்குவரத்து வசதிகளை விரிவுபடுத்தி அயலில் உள்ள மாணவர்களையும் அனுமதித்துப் பெரிய வகுப்புகளை உருவாக்கலாம்.

சிறிய பாடசாலைகளில் ஆசிரியர்கள், மாணவர்கள் மீது கூடிய கவனம் செலுத்திக் கற்பிக்க வாய்ப்புண்டு என்று சிலர் கருதுவர். ஆயினும் பல்வேறு ஆய்வு முடிவுகளின்படி ஒரு பாடசாலையில் பருமன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பற்றி முடிவு செய்ய முடியாது. ஆயினும் பாடசாலைகள் வளர்ச்சி அடைய அடைய ஒரு மாணவருக்கான கல்விச் செலவு குறைய நேரிடும் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவ்விடத்து முக்கியமாக ஆராயப்பட வேண்டிய விடயம் எவ்வாறு சிறிய பாடசாலைகளின் கற்கை நெறிகளினுடைய தராதரங்களை மேம்படுத்தலாம் என்பதாகும்.

இலங்கையில் கல்வியும் பயிற்சியும் எனும் விடயம் பற்றிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையில் (1989) சிறிய

பாடசாலைகளின் முன்னேற்றத்துக்கான சில வழிமுறைகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன. இவை பாப்வா நீயு கினியின் அனுபவங்களிலிருந்து பெறப்பட்டவை.

- தூரப் பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சாதனங்களையும் உபகரணங்களையும் வழங்குவதில் முன்னுரிமை வழங்குதல்.
- இவ்வாறான பாடசாலைகளில் பணிபுரிவோருக்கான சலுகைப்படிகளை இருமடங்காக்கல்.
- இப்பாடசாலைகளை மேற்பார்வை செய்வோருக்கு ஊக்குவிப்புகளை வழங்குதல்.
- ஆசிரியர்களுக்கு அதிக சேவை காலப் பயிற்சியை வழங்குதல்.
- இப்பாடசாலைகளுக்குச் சிறந்த ஆசிரியர்களை நியமித்தல்; இப்பாடசாலைகளை 'தண்டனை நிலையங்களாகக்' கருதி ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதைத் தவிர்த்தல்.
- தூரப் பிரதேசப் பாடசாலைகளுக்கு வானொலித் தொடர்புச் சாதனங்களை வழங்கி, எப்போதும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வசதி செய்தல்.
- இலங்கையில் இப்பாடசாலைகளில் ஒரே ஆசிரியர் பல வகுப்புகளுக்குக் கற்பிப்பதை இலகுபடுத்தும் விசேட கற்பித்தல் துணைச் சாதனங்கள் உருவாக்கப்படல் வேண்டும்; அத்துடன் மேற்கண்ட வழிமுறைகளையும் பின்பற்றலாம்.
- இன்று நடைமுறையில் உள்ள கொத்தணி முறையைப் பயன்படுத்தி பெரிய பாடசாலைகளின் மூலவளங்களை சிறிய பாடசாலைகளும் பகிர்ந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகளைச் செய்யலாம்; இதனால் இப்பாடசாலைகள் மேலும் சிறந்த முறையில் மேற்பார்வை செய்யப்படலாம்.

## BIBLIOGRAPHY

### (நூற்பட்டியல்)


1. ARIYADASA, K.D. Management of Educational Reforms in Sri Lanka, The Unesco Press, Paris, 1976.

2. BIKAS. C.SANYAL (et.el) University Education and Graduate Employment in Sri Lanka. The Marga Institute, UNESCO, PARIS, COLOMBO, 1983.

3. BARY MARK., Education and Decentralization in less developed countries. - A comment on trends, issue & problems (1985).

4. Ceylon University Commission Report S.P. XXIII of 1959.

5. Ceylon University Ordinance No. 20 of 1942.

6. DE SILVA. C.R., Education, Sri Lanka: A Survey : Ed. by K.M.D. Silva, London, Hurst, 1977.

7. DE SILVA, W.A., Chandra Gunawardena, Educational policies and change, 1977-1986. National Institute of Education, Sri Lanka, 1989.

8. DIYASENA, W., Pre - vocational Education in Sri Lanka, UNESCO - 1976.

9. DORE, RONALD. P., The Diploma disease, Education, qualification and development. London, Allen & Unvin., 1976.

10. Education in Ceylon. A Centenary Volume I - III -1969, Ministry of Education and Cultural Affairs, Ceylon Govt. Press, Colombo.

11. Education in Sri Lanka : New Horizone Ministry of Education, Colombo -1972.

12. Education proposals for Reform-General, university and tertiary (Vocational, Technical and Professional) Ministry

of Education in collaboration with the Ministry of Higher Education and the Ministry of Youth Affairs & Employment, 1981.

13. Educational Consultants India Limited (1989), Education and Training, Sector Study, Second Interim Report, April, 1989.

14. International Labour Office, Geneva, Matching employment opportunities and expectation, a programme of action for Ceylon, Geneva 1972.

15. JAYASURIYA, J.E. Education in Ceylon Before & After Independence. Associated Educational Publications, Colombo - 5.

16. JAYASURIYA, J.E., Educational policies and progress during British rule in Ceylon -1796-1948. Associated educational publishers, Colombo.

17. JAYAWEERA, SWARNA, Education and Socio Economic Development in Sri Lanka, Comparative Education Centre, College of Education, University of Maryland - 1976.

18. JAYAWEERA, SWARNA, Education, Modern Sri Lanka: A Society of Transmition; Ed. by Tissa Fernando & R.N.Kearuey Sqracuse, Maxwell school of citizenship and public affairs. 1979.

19. JAYAWEERA, SWARNA, Educational policies and change from the mid twentieth century to 1972. National Institute of Education, Sri Lanka, 1988.

20. MALALASEKARA. G.P., Beginings of University education, Education in Ceylon- Colombo - 1969. A Centenary Vol.Part III.

21. MALALASEKERA. G.P., Expansion of University education. Education in Ceylon - Colombo- 1969. Vol. III

22. Medium Term Plan for the Development of Education, 1973-77. Planning and Programming division, Colombo-1973.

23. Ministry of Education (Sri Lanka) (1982) Towards relevance in education, Report of the Education Reforms Committee, 1979.

24. Ministry of Education. (Sri Lanka) 1981, Proposals for Reform., Colombo. Department of Govt. Printing.

25. NEIL FERNANDO, Management for Educational Development in Sri Lanka. University of Education, Sep.1984.

26. RUPASINGE .S, Some disparities in the secondary school system of Sri Lanka, Journel of the National education society of Sri Lanka Vol XXIII 1984.

27. Sessional paper XXIV of 1943. Report of the Special Committee of Education, Ceylon Govt. Press.

28. Sessional paper 1 of 1962, Interim Report of the National Education Commission 1961. Govt. Press Colombo.

29. Sessional Paper X of 1963- Report of the commission of inquiry on Technical Education. Govt. Press. -1963.

30. SUMATHIPALA, K.H.M., History of Education in Sri Lanka. Tisara, Dehiwala - Sri Lanka -1973.

31. Sri Lanka, University Grants Commission, Universities in Sri Lanka, Hand book 1979, Colombo. 1979.

32. The Report of the committee appointed by the Ministry of Education to report on the reorganization of Higher education. Colombo (NCHE) 1971.

33. The University of Ceylon act No 1 of 1972.

34. The University of Ceylon act No 16 of 1978.

35. Thenuwara, Gamage, The struggle for control of higher education in a developing economy - Sri Lanka, Comparative education Vol.19 No 3 of 1983.

36. UNESCO, The Decentralization of Educational Administration, UNESCO, Banghok, 1982.

37. Universities of Sri Lanka, Hand book -1991, University Grants Commission 20 ward place, Colombo-7.

38. UDO, BUDE. The adoptation concept in British colonial education - Comparative education Vol. 19 No 3 of 1983.

39. White paper - Government proposals for educational reforms 1950, Ceylon Govt. Press.

40. White paper 1964, Proposals for a National System of Education, Govt. Press, 1964.

41. White paper 1966- Proposals for Reforms in General and Technical Education, Govt. Press. 1966.

5. The ... concept ... [illegible] ... Comparative education Vol 17 No 1 of 1981

6. UNESCO, The Decentralisation in Educational Administration, UNESCO Bangkok 1982

7. Universities of Sri Lanka, Hand book 1991, University Grants Commission, 20 Ward place, Colombo-7

8. ATTO, PETER. The adaptation concept in British colonial education. Comparative education Vol. 19 No. 2 of 1983

9. White paper - Government proposals for educational reforms 1958, Ceylon Govt Press, 58

10. White paper 1964 - Proposals for a National System of Education Govt Press, 1964

11. White paper 1966 - Proposals for Reforms in General and Technical Education, Govt Press, 1966

## திரு. சோ. சந்திரசேகரன்

இவர் கொழும்புப் பல்கலைக்கழகக் கல்வி போதனா பீடத்தின் சமூக விஞ்ஞான கல்வித் துறையின் தலைவராக விளங்குபவர். இருபதாண்டு காலம் பல்கலைக்கழக ஆசிரியராக சேவை புரிந்தவர். ஜப்பானில் ஓசாக்கா அயல்மொழிப் பல்கலைக்கழகம், ஹிரோசிமா பல்கலைக்கழகம் என்பவற்றில் பயின்று ஒப்பீட்டுக் கல்வித் துறையில் எம். ஏ. பட்டம் பெற்றவர். கல்வியியல் துறையில் ஏராளமான கட்டுரைகளை எழுதியவர். 'இலங்கை இந்தியர் வரலாறு', 'கல்வியியல் கட்டுரைகள்', 'இலங்கையின் கல்வி வளர்ச்சி' (திரு. மா. கருணாநிதியுடன்) ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டவர்.

## திரு. மா. கருணாநிதி

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றும் இவர், பாடசாலை ஆசிரியராகவும் அதிபராகவும் நீண்ட காலம் பணியாற்றியவர். இந்திய மரபுவழித் தமிழரின் கல்வி நிலை பற்றி ஆராய்ந்து யாழ். பல்கலைக் கழகத்திடமிருந்து எம். ஏ. பட்டம் பெற்றவர். 'இலங்கையின் கல்வி வளர்ச்சி' என்ற நூலின் இணை ஆசிரியர்.